45 45

[illegible] மித்திரன்

தொகுதி ௨ பகுதி - ௧௧

11

கார்த்திகை

1929-30

JL
~1592 ... N27 ...
N27.3.11
129811

Registered No. M. 1514.

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு
பத்திரிகாசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.
துணை ஆசிரியர் : பண்டிதர், பி. சே. மாணிக்கவாசக முதலியார்.

தொகுதி - ௩] | சுக்கில௵ - கார்த்திகை௴ | [பகுதி - ௧௧

## உள்ளடக்கம்

| | |
|---|---|
| பத்திரிகாசிரியர் முன்னுரை .... | ௪௧௩ |
| செங்குந்தர் கல்விநிதிச் சீட்டு ... | ௪௧௫ |
| சமயப் பகுதி : இந்து தெய்வ மூர்த்தம் ... | ௪௧௭ |
| செங்குந்த யாத்திரைவாசி : ஊர்வலம் ... | ௪௨0 |
| குலதிலகர் பகுதி .... | ௪௨௩ |
| சுகாதாரப் பகுதி: க்ஷயரோகம் .... | ௪௨௭ |
| இளஞர் பக்கம் : உலகின் அதிசயங்கள் ... | ௪௨௯ |
| காவல் பகுதி : ஞானசேகரன் ... | ௪௩௧ |
| பொது விஷயங்கள்: இந்தியாவும் இளைஞரும்... | ௪௩௫ |
| நமது மடங்கள் ... | ௪௩௬ |
| நமது கடிதங்கள் ... | ௪௩௮ |
| ஆன்றோர் அமுதமொழிகள் .... | ௪௩௯ |
| விநோத உலகம் ... | ௪௪0 |
| வியாபாரப் பகுதி ... | ௪௪௧ |
| விகடத் துணுக்குகள் ... | ௪௪௩ |
| செங்குந்தர் கிளர்ச்சி .... | ௪௪௪ |
| வர்த்தமானப் பகுதி ... | ௪௫0 |
| மதிப்புரை ... | ௪௫௧ |
| செங்குந்த மித்திரன் பஞ்சாங்கம் ... | ௪௫௨ |

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்
சென்னை.

15 NOV 1929 MADRAS

12981

## கட்டுரைப் பரிசு

விரும்புவோர்

"குடியால் விளையும் கேடுகள்"

செங்குந்த மித்திரனில் நான்கு பக்கங்களுக்குக் குறையாமல் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாமலும் மேற்குறித்த விஷயத்தைக் குறித்துத் தெளிவான நடையில் பிழையில்லாத தமிழில் எழுதி டிசம்பர் 25 தேதிக்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பவேண்டும். அவற்றைப் பரிசோதித்து முதல்தரமான வியாசத்திற்கு 5 ரூபாய் பரிசு கொடுக்கப்படும். பரிசுக்கட்டுரை மித்திரனில் வெளிவரும்.

"X"

செங்குந்த மித்திரன் ஆபீஸ், பவழக்காரத் தெரு, சென்னை

## 1930-ம் வருட
## செங்குந்த மித்திரன் காலண்டர்

தலைவர்களின் ஆப்டோன் படங்கள் அடங்கியது

12 மாதங்கட்கும் தனித்தனியே 12 ஷீட்கள் உள்ளன

விலை அணு நான்கே

பெயரைமட்டும் பதிவு செய்துகொள்ளுங்கள்.

டிசம்பர்மீ 20-ந் தேதி பணம் அனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம்.

செங்குந்த மித்திரன் ஆபீஸ், சென்னை.


# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

பத்திரிகாசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.
துணை ஆசிரியர் : பண்டிதர், பி. சே. மாணிக்கவாசக முதலியார்.

தொகுதி - ௨ | சுக்கில - கார்த்திகைமீ | பகுதி - ௧௧



15 NOV 1929
OFFICE OF THE REGISTRAR MADRAS

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் சென்னை-600 008


முருகன் துணை.

சேமக் கோமள பாதத்தாமரை சேர்தந் தோதும் அநந்தவேதா
தீதத் தேயவி ரோதத் தேதண சீலத் தேமிக அன்புறதே
காமக் ரோதவு லோபப் பூதவி காரத் தேயழி கின்றமாயா
காயத் தேபசு பாசத் தேசிலர் காழற் றேயும தென்கோலோதான்
றேமிச் சூரோடு மேருத் தூளெழ நீளக் காளபு யங்ககால
நீலக் ரீபக லாபத் தேர்விடு நீபச் சேவக செந்தில் வாழ்வே
ஓமத் தீவழ வார்கட் கூர்சிவ லோகத் தேதரு மங்கைபாலா
யோகத் தாறுப தேசத் தேசிக வாமைத் தேவர்கள் தம்பிரானே.

### பத்திரிகாசிரியர் முன்னுரை

சீட்டுக்குலுக்கும் நாள் நெருங்கிவிட்டது.

"எண்ணும் எழுத்தும் கண்ணே யாகலானும், அதுவும் சாதாரணக் கண்ணினும் மேன்மையான ஞானக்கண்ணாகலானும், அக்கண் திறத்தற்கே நமது கல்வி நிதி யேற்படுத்தப் படுகின்றதாகலானும், அக்கல்வி நிதியின் அவசியமும், அதற்குதவுவார் செய்யும் பெருநன்றியும் எத்துணைத்தெனக் கூறாமலே புலனாம். இவற்றைப்பற்றி நாம் பல முறைகள் எழுதியுள்ளோம். இப்பெருங்கைங்கரியத்தினில் ஈடுபட்டூக்கத்துடன் உழைத்துவரும் பொது நலன்போற்றும் புண்ணிய புருஷர்களது பெரு நன்மைகளுக்குச் செங்குந்த உலகம் கடமைப்பட்டிருக்கிறது. சீட்டுக் கணக்கு முடிவு செய்யவேண்டிய நாளாகிய டிசம்பர்மீ 31உ நெருங்கிவிட்டது. மாணவர்களது கல்விக்காகவேண்டிய ஒரு பெருந்தொகை கிடைத்துவிட்டால் அடிக்கடி நன்கொடை கேட்பதினுலுண்டாகும் தொந்தரவு அன்பர்களை விட்டு நீங்கும். ஆகையால் அத்தகைய பெருந்தொகை கிட்டுமாறு மும்முரமாக வேலைசெய்ய வேண்டியது அன்பர்களது கடமையாகின்றது. அதுபற்றி இதுவரை உழைத்து வரும் அன்பர்களோடு இன்னும் பலரும் சேர்ந்து நங்குலத்தினர்க்கே யன்றி மற்றையோர்க்கும் இச்சீட்டுகளை பல்லாயிரக்கணக்காக விற்று நாம் தொடங்கியுள்ள பெருங்காரியம் இனிது முடியுமாறு தீவிரமாயுழைப்பார்

களெனப் பூரணமாக நம்புவதுடன் அவ்வாறே செய்யுமாறு குலாபிமானிகளை வேண்டிக் கொள்கிறோம். இதனை முன்னிட்டு ஆங்காங்கே வரும் பிரசாரகர்களோடு நேயர்கள் ஒத்துழைத்து அவர்களோடு பல இடங்களுக்கும் சென்று துணைபுரிவாராக. சீட்டுப்புத்தகங்கள் வேண்டுவோர் நமது தலைச்சங்கத்துக் கெழுதியாயினும் பிரசாரகர்களிட மிருந்தாயினும் பெற்றுக்கொள்ளலாம்.

தலைச்சங்கப் பிரதிநிதிகள் கீழ்க்கண்ட முறைப்படி பல ஜில்லாக்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

செங்கற்பட்டு, வட ஆற்காடு ஜில்லா :— திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார்.

சேலம், தென்னாற்காடு ஜில்லா :—திருவாளர்கள் தி. அ. சண்முக முதலியார், சு. திருநாவுக்கரசு முதலியார், S. பழனியாண்டி முதலியார், வை. ச. ராமலிங்க முதலியார், P. ராஜமாணிக்க முதலியார்.

கோயமுத்தூர் ஜில்லா :—திருவாளர்கள் V. K. M. அப்பா, ப. நஞ்சப்ப முதலியார்.

தஞ்சாவூர், திருச்சிறுப்பள்ளி ஜில்லாக்கள்: —திரு. நா. நாகப்ப முதலியார்.

மதுரை, இராமனாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்கள் :—திருவாளர்கள் அ. கு. சி. சிவசுப்பிரமணிய முதலியார், தி. கருப்பையா, இ. முனியப்ப முதலியார்.

### சாசுவதநிதிகள் வேண்டும்.

நீடித்து நடைபெற வேண்டிய எக்காரியத்திற்கும் சாசுவத நிதிகள் அவசியமென்பது எவருமுணர்ந்ததே. அமெரிக்கா முதலிய மேல் நாடுகளில் கல்விக்காக வைத்திருக்கும் சாசுவத நிதிகளையும் (Endowments), அறிந்தோர் எத்தும் அண்ணாமலை அரசர் அவர்களது சர்வ கலாசாலையையும், இன்னும் ஏனைய குலத்தினர் இத்தகைய நற்காரியங்களுக்காக சாசுவத நிதிகள் வைப்பதையும் பற்றி யோசிப்பின் இது நன்கு புலனாம். இதற்குப் பலருமறிந்த உதாரணமாக இருப்பது ஆலயங்களுக்காகச் சிலர் ஏற்படுத்தும் சாசுவத நிதிகளே. இத்தகைய நிலையான நிதிகள் நமது குல மாணவரின்கல்விக்காக இருக்குமானால் நங்குலத்திடை அறிவு என்றும் வளர்ந்து கொண்டே இருப்பதுடன் குலமும் முன்னேறிக்கொண்டே இருக்கும். வாரிசுகளில்லாமையால் நியாயஸ்தல முதலியவைகளிடையே சிக்கிச் சிதறுண்டு விழலுக்கிறைத்த நீராகும் வீடு, நிலம் முதலிய சொத்துக்களைக் காணும் நமக்கு மனம் பதைக்கின்றது. இத்தகைய சொத்துக்கள் பக்தி முதலியவற்றில் மனிதனைப் புகுத்தி நித்திய வின்பத்தையும் அளிக்கும் அறிவானது வளர்தற்பொருட்டு வித்தியாதானத்துக்கு வைக்கப் படுமானால் அவை எத்துணை நலனுக்காதாரமாயிருக்குமென்பதை யன்பர்களறிந்து, அவ்வாறான சொத்துக்களை இனியேனும் நமது குலத்தவரிடைக் கல்வி பெருகுதற்பொருட்டு வைக்குமாறு வேண்டுகிறோம்.

### திரு. அங்கமுத்து முதலியாரின் தானம்

இதுவேயன்றித் தமது ஆயுட் காலத்திலேயும் தமக்குரிய சொத்துக்களில் சிலவற்றைக் கல்வி முதலிய காரியங்களுக்குச் சாசுவதமாக எழுதிவைப்பதுடன் அவற்றில் வரும் ஊதியத்தைத் தாமே திரட்டி அனுப்பும் பரோபகார சீலர்களும் உள்ளார்களென்பதற்கறிகுறியாகச் சத்தியமங்கலம் திரு. ப. அங்கமுத்து முதலியார் அவர்கள் விளங்குகிறார்கள். அவரது பரோபகார சிந்தையையும், ஆர்வத்தையும், குலாபிமானத்தையும் விளக்குதற்கு அவர் தலைச்சங்கத்திற்கெழுதியுள்ள ஒரு திருமே தகுந்த ஆதாரமாயிருக்கிறது. அன்பர்கள் அதனை வாசித்து அவரது போற்றற்குரிய குணங்களையுணர்தற் பொருட்டு முழுக்கடிதமும் அடுத்த மாதம் வெளியிடுகின்றோம். ஆயினும் அதில் ஒரு முக்கியமான பகுதியைக் கீழே தருகிறோம் :—

தென்னிந்திய செங்குந்தகுலத் தலைவர்களே !:

நமது செங்குந்த மாணவர்கள் பொருட்டு ஏற்படுத்தப்படும் கல்வி நிதிக்காக எனது நிலத்தில் ஒரு ஏக்கர், இருபத்தேழுசெண்டு அளவுள்ளபூமியை உதவவிரும்புகிறேன். பிரமோதூத வருடம் சித்திரையீ அந்நிலத்தை நமது தலைச்சங்கத்துக்குச் சொந்தமாக்கி வருடாவருடம்எனது சொந்தச் செலவிலேயே அதனைச் சாகுபடிசெய்து அதில் விளையும் தானியங்களை விற்று அத்தொகை எவ்வளவானாலும் அதனை நமது ஏழைச் செங்குந்த மாணவர்களுக்காக அதிக அன்புடன் அனுப்புகிறேன். நிலத்தை எவ்விதம் சங்கத்தின் பேரிலாக்குவதென்பதை விபரமாய்த் தெரியப்படுத்தவும். இதற்காகத்தாங்கள் செலவுசெய்துகொண்டு இவ்விடம் வரவேண்டியதில்லை. மேற்கண்ட விபரப்படி யானும் என்புத்திர பௌத்திர பாரம்பரியமும் இதில் மாறுதலடைவதில்லை எனக் கிரையப் பத்திரம் ரிஜிஸ்தர் செய்து அனுப்பிவிடுகிறேன். இதுவரை 'மித்திரனுக்கேனும் கல்விநிதிக்கேனும் ஒருவித உபகாரமும் யான் செய்யவில்லையே என வருந்துகின்றேன். குமரன் துணை புரிவராக.

ப. அங்கமுத்து முதலியார்,
சிகிச்சாஞான பண்டிதர், சத்தியமங்கலம்.

இத்தகைய பெரியாரது அருஞ்செயலை நாம் என்னென்றுரைப்பது ! இவரது குலாபிமானத்தை எவரே அளவிட்டுரைக்க வல்லார் ? இவருக்குக் குமரன் துணைபுரிவனென்பதில் ஐயமோ? இவரது கருணைததும்புஞ் செயலைக் காணும் எவர்தாம் இன்னும் நங்குலத்தவர்பலரும் இப்பெரியாரைப்பின்பற்றி நன்மையிழைத்துப் பாரதபுகழும்,உலகநன்றியும் பெறவேண்டுமெனச் செங்குந்தப் படைபேரன் சேவடியைச் சிந்தியாதிருப்பர் ?

பத்திராசிரியர்.



NOV MADRAS

முருகன் துணை.

## செங்குந்தர் கல்விநிதிச் சீட்டு

### சீட்டுப் போடவேண்டிய அவசியமும் நோக்கமும்

சமூக முன்னேற்றத்திற்கும் தேச முன்னேற்றத்திற்கும் கல்வி இன்றியமையாததென்பது யாவருமறிந்ததே. ஆயினும் நம்குல மக்களில் படித்தவர் தொகை பிறர் எள்ளி நகையாடுதற் கிடமான சொற்ப எண்ணிக்கையே. இவ்விழுக்கை நீக்குதற்குஆரம்பப் படிப்பு, கலாசாலை உயர்தரப் படிப்பு, கல்லூரிப் படிப்பு, மற்றும் வியாபாரம், வைத்தியம், போதனு முறை, சட்டம், கைத்தொழில் (நெசவு), என்ஜினீரிங் முதலிய துறைகளில் நம் குல மாணக்கர்கள் தேர்ச்சிபெறலவசியம்.

அங்ஙனம் தேர்ச்சி பெறுதற்குப் பண ஒத்தாசை இன்றியமையாதது. பரம ஏழைகளாகிய சில புத்திகூர்மையான செங்குந்த மாணக்கர்களுக்கு உபகாரச் சம்பளமேயன்றி உண்டி, உடை, இருப்பிடங்களையும் இலவசமாகத் தந்துதவுவதும் அவசியமே. இதற்கொரு விடுதியினை இராஜதானி நகராகிய சென்னையில் ஏற்படுத்த நம் சங்கம் முயன்றுவருகிறது. இதற்கும் ஒரு பெருநிதி அவசியமென்பது அன்பர்கள் அறிந்ததே.

### நிருவாக சபை.

இதனைக் கருதியே சென்ற விபவஞு தையீ 7, 8 தேதிகளில் ஈரோட்டில் கூடிய தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாட்டில் செங்குந்தர் கல்வி நிதிக்குப் பொருள் திரட்டுதற்குக் கூறிய மார்க்கங்களில் "சீட்டு" ஒன்று ஆரம்பித்து அதில் பெருந்தொகை மிச்சப்படுத்துதல் வேண்டுமெனத் தீர்மானமானது. இதை முன்னிட்டுத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நிருவாக சபையார் 1-5-29-ல் கூடிய தமது கூட்டத்தில் நமது சங்கத்தின் மேல்பார்வையில் 'செங்குந்தர் கல்விநிதிச் சீட்டு' ஒன்று நடத்தத் தீர்மானித்திருக்கிறார்கள்.

### செங்குந்தர் கல்விநிதிச் சீட்டின் விபரம்.

டிக்கட் ஒன்றுக்கு எட்டணு (0-8-0) வீதம் 1 லக்ஷம் ரூபாய் வசூல் செய்து, அச்சுக்கூலி, சிப்பந்திச் சம்பளம், பிரயாணச் செலவு முதலியவற்றிற்காக ரூ. 15,000 போக, மீதி ரூ. 85,000-த்தில் ரூ. 60,000 செங்குந்தர் கல்விநிதிக்காக வைத்துக்கொண்டு, மிகுதியுள்ள ரூ. 25,000-த்தைச் சீட்டுக்கள் வாங்கிய நண்பர்களுக்குச் சீட்டுக் குலுக்கிக் கீழ்க்கண்டபடி பிரைசுகளாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | 1-வது பிரைஸ் | 1-க்கு | ரூ. 5000 | ஆக ரூ. 5000 |
| (2) | 2-வது ,, | ,, | ,, 2500 | ,, 2500 |
| (3) | 3-வது ,, | ,, | ,, 1000 | ,, 1000 |
| (4) | 4-வது ,, | ,, | ,, 500 | ,, 500 |
| (5) | | 5-க்கு | ,, 200 | ,, 1000 |
| (6) | | 10 ,, | ,, 100 | ,, 1000 |
| (7) | | 20 ,, | ,, 50 | ,, 1000 |
| (8) | | 40 ,, | ,, 25 | ,, 1000 |
| (9) | | 100 ,, | ,, 15 | ,, 1500 |
| (10) | | 300 ,, | ,, 10 | ,, 3000 |
| (11) | | 600 ,, | ,, 5 | ,, 3000 |
| (12) | | 1500 ,, | ,, 3 | ,, 4500 |

மொத்தத் தொகை ரூ. 25,000

ஒரு டிக்கட்டின் விலை எட்டணவாக 21 டிக்கட்டுகளடங்கிய ஒரு புத்தகத்தை விற்கும் நபர் ரூ. 10 அனுப்பிவிட்டு 1 டிக்கட்டைக் கமிஷனுக்காக எடுத்துக்கொள்ளலாம். 20 டிக்கட்டுக்குக் குறைந்து விற்கிறவர்களுக்குக் கமிஷன் கிடையாது.

### கல்விநிதிச் சீட்டுக்கள் வாங்குவோர் கவனிக்க வேண்டிய விஷயங்கள்.

டிக்கட்டிலுள்ள ஒவ்வொரு ஜடத்தையும் பூர்த்தியாக எழுதி அதன் ஒருபாகத்தைப் பணம் கொடுத்தவர் பெற்றுக்கொள்ள வேண்டும். மற்றொரு பாகத்தையும் பணத்தையும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பிவிடவேண்டும். டிக்கட் புத்தகங்கள் தேவையானவர்கள் டைகமிட்டிக் காரியதரிசிக்கு அல்லது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கக் காரியதரிசிக்கு எழுதியாவது, அல்லதுஆங்காங்குப் பிரசாரம் செய்துவரும் நமது தலைச்சங்கப் பிரசாரகர்கள் மூல

மாவது பெற்றுக் கொள்ளலாம். ஷை கல்விநிதிக் கமிட்டிக்குப் பணம் சேராத டிக்கட்டுக்கள் குலுக்கப் பெறும் சீட்டுக்களோடு எவ்விதத்திலும் சேர்க்கப்பட மாட்டா. டிக்கட்டுப் பெற்றவர்கள் தங்கள் நெம்பர் கல்விநிதிச் சீட்டில் சேர்ந்திருக்கிற விபரம் தெரிய வேண்டுமானால் ரிப்ளை கார்டில் தங்கள் டிக்கட்டு நெம்பரையும் புத்தக நெம்பரையும் குறித்தனுப்பித் தெரிந்துகொள்ள வேண்டும்.

**கல்விநிதிச் சீட்டு எடுத்தல்.**

1930௵ ஜனவரிமாதக் கடைசியில் நமது இரண்டாவது மகாநாட்டுப் பந்தலில் சீட்டுக் குலுக்கிப் பிரைஸ் எடுக்கப்படும். சீட்டுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பூராத்தொகை ஒரு லக்ஷரூபாயும் வசூலாகாது குறையுமானால் விகிதாசாரப்படிப் பிரைஸ்கள் குறைத்தே கொடுக்கப்படும். எல்லாத் தொகைகளும் டிக்கட்டுகளும் 1929௵ டிசம்பர்௴ 31உ-க்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு வந்துசேர்ந்துவிடவேண்டும். சீட்டு எடுத்தானவுடன் அவரவர்களுக்கு ஒருவாரத்திற்குள் தெரிவிக்கப்படும்.

ஒவ்வொருவரும் நம்மவருள் கல்வியினை வளர்ப்பதனையே தங்கள் முக்கியக் கட்மைகளுள் ஒன்றாகக் கருதிப் பொது நன்மைக்கான இந்நிதியினைத்தவறாது ஆதரிக்க வேண்டுகிறோம்.

ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி.,
பீ. சே. மாணிக்கவாசக முதலியார்,
அமைச்சர்கள்,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்,
சென்னை. 3—5—29.



சேலம் முனிசிபல் சபைக்கு அம்மாப்பேட்டை வார்டில்
சமீபத்தில் நடைபெற்ற முனிசிபல் தேர்தலில் பலத்த போட்டியினிடையே வெற்றிபெற்ற
திரு. S. P. பொன்னுசாமி முதலியார் அவர்கள்
இவர் அம்மாப்பேட்டை செங்குந்த மகாஜன சங்கத்தின் உபதலைவராவர்.



## சமயப் பகுதி

### இந்து தெய்வ மூர்த்த தத்துவார்த்த விளக்கம்

(மித்திரன், பகுதி 3, 379ம் பக்கத்தொடர்ச்சி)

**சோமாஸ்கந்த மூர்த்தம்**

திவ்யமங்கள தேஜோமயமாய் விளங்கும் சிவபெருமான் ஆன்மகோடிக ளுய்வான் கொண்டருளிய திருமூர்த்தங்க ளிருபானைந்து. அவற்றுள் சோமாஸ்கந்த மூர்த்தமுமொன்று. இது சிவபெருமானும் உமாதேவியாரும் முருகக்கடவுளைத் தழுவிய அவசரம். ஒருபால் சிவபெருமானும் வாமபாகத்தில் உமாதேவியாரும் அமர்ந்த கோலமா யிருப்ப, நடுவண் ஸ்கந்த மூர்த்தியானவர் வீற்றிருந்தருளும் திவ்ய திருக்கோலம். சூரசம்மார நிமித்தம் சுரர்களின் வேண்டுகோட் கியைந்து ஐம்முகக் கடவு ளறுமுகத்தோ டிருந்து நெற்றி நாட்டத்தின் மிசைத் தோன்று மறுபொறிகளின் வாயிலாய் சரவணத்தில் ஸ்கந்த மூர்த்தியை நல்கினர். அதன்பின் பார்வதி தேவியாரின் பாதச் சிலம்பிற் சிதறுண்ட நவமணிவாயிலாய்த் தோன்றும் நவசத்திகளினிடமாக, ஸ்கந்த னநுசரர்களாகவும் சேனைகளாகவும் வீரவாகுதேவர் முதலா யிலக்கத் தொன்பதின்மர்களைத் தோற்றுவித்தனர். இவர்களின் பிற்கால வழிவந்தவர்களே செங்குந்த ரெனப்படுவர். சரவணத்தில் ஆறு குழவிகளாய் வளரும் ஸ்கந்தமூர்த்தியைக் கைலாயத்திற்குக் கொண்டுவரக் கருதிச் சிவபெருமான் உமையோடு இடபமூர்ந்து சரவணப் பொய்கை யடைந்து, அம்மையாரை நோக்கி, "நின் மைந்தரைக் கொணர்தி" என்று ஆக்ஞாபித்தனர். உமை யவ்வாறே ஆறு குழவிகளையும் ஒருங்கு சேர்த்தெடுக்க ஆறு திருமுகமும் பன்னிரண்டு கரங்களும், ஏக சரீரமும், இரண்டு திருவடியு முடையவராய் ஸ்கந்தமூர்த்தி திருவுருப் பெற்றனர். பின்னர் அக்குழந்தையைப் பார்வதியாரும் பரமனும் ரிஷபவாகனத்தின் மீது தங்களிருவருக்கும் நடுவண் வைக அமைத்துக் கைலாயஞ் சென்றனர். இக்கோலமே சோமாஸ்கந்த மூர்த்தம் எனப்படும், (ஸ + உமா + ஸ்கந்தர்) என்பது சோமாஸ்கந்த ரென்றாயிற்று. உமையம்மையாராகிய தன் இல்லறக் கிழத்தியுடனும், இம்மை மறுமை இன்பமூட்டுவித்தப் புத் என்னும் நரகினின்றும்மீட்கும் புத்திரனாய் விளங்கும் ஸ்கந்தமூர்த்தியுடனும் சிவபெருமான் எழுந்தருளியிருக்குங்காட்சியானது, "இல்லறமல்லது நல்லறமன்று" என்னும் ஔவைப் பிராட்டியாரின் அமுதவாக்கைக் கடைப்பிடித்து இல்லற தர்மத்தை மேற்கொண்டொழுகும் புண்ணிய சிலர்கட்கு, நன்மனையாளையும் சற்புத்திரப்பேற்றையும் அளிக்கவல்லவர் தாமே யென்பதைக் குறிக்கின்றது. தவிர இல்லறவாசிகள் தன் மனைவியிடத்தும் புத்திரர்களிடத்தும் நீங்காப் பேரன்புங் காதலுமுடையவர்களாய், பூவும்மணமும் நகமுஞ்சதையும் போல் அவர்களை எஞ்ஞான்றும் விட்டு நீங்காமல் ஒற்றுமையாய் வாழவேண்டு மென்பதையு மிதுணர்த்துகின்றது. மனைவி மைந்தன் வீடு விளைநிலம் பொருள் என்னுங் குடும்ப பாரமேற்று இல்லறத்தாற் றொழுகுங் குடும்பிகட்கு இம்மையில் வேண்டிய நலனும் மறுமையில் அழிவிலின்ப முத்தியாம் மோட்ச வீட்டையுமளிக்க வேண்டியே, நாம் குடும்ப சமேதராய் உமையம்மையாருடனும் முருகக் கடவுளுடனும் வீற்றிருக்கின்றோம் என்பதையும் இம் மூர்த்தம் புலப்படுத்துகின்றது. இதுவே இம்மூர்த்தியினால் நாம் அறிந்து கொள்ளவேண்டிய முக்கிய தாற்பரியம். புத்திரப்பேற்றை விரும்பினோரும், இல்லற வொழுக்கத்தை மேற்கொண்டொழுகுவோரும் இம் மூர்த்தத்தைப் பூசித்துப் பயனடையக் கடவர். இது நோக்கியே நந்தேவாலயங்கடோறும் சோமாஸ் கந்தமூர்த்தத்தையே பிரதானமாகக் கொண்டு உற்சவாதிகள் நடத்துவதுப் வழிபாடு செய்வதுங் காண்க. சைவர்கள் இதனையே முக்கிய ஆத்மார்த்த வழிபடு கடவுளாய்க் கொள்கின்றனர். இம் மூர்த்தியின் வழிபாட்டாலே இருமையு மடையலாமென்பது திண்ணம். இதனுயர்வு நோக்கியே திரு

மாலாதி தேவர்களும் மனிதர்களும் மிகச் சிறந்ததாகக்கொண்டு வழிபாடாற்றி வருகின்றனர்.

பண்டொரு பகல் விஷ்ணுமூர்த்தியானவர் புத்திரப்பேறு வேண்டிச் சிவனைநோக்கித் தவங் கிடக்க, பெருமான் உமாதேவியாரோடெழுந்தருளி வந்து காட்சி கொடுத்தருளலும் கண்ணன் பரமசிவனை மாத்திரம் வணங்கி வழிபட்டுப் புத்திரப் பேற்றை யடையும் வரம்பெற்றனர். அது கண்டபார்வதியார் சினங்கொண்டு விஷ்ணுவை நோக்கி, "ஏ! கருநிறக் கள்வனே! நீ எம்மை வணங்காது அவமதித்தனை யாதலால் வரத்தால் பெற்ற அப்புத்திரன் அக்கடவுளாலே யழிந்து போகக் கடவன்" என்று சபித்தனர். உடனே விஷ்ணுவானவர் பயமுற்று, பரமசிவனையும் உமாதேவியாரையும் அவாது இளைய குமாரராகிய முருகக்கடவுளையும் (சோமாஸ் கந்தமூர்த்தமாக) வேதவிதிப்படி தாபித்து வணங்கி அநேக வருடகாலம் தவஞ்செய்திருந்தனர். பின்னர்ச் சிவபெருமான் உமாதேவியாரோடெழுந்தருளலும் விஷ்ணுவானவர் முன்னர் பார்வதியாரையும் பின்பு பரமனையும் வணங்கித் துதித்து நின்றனர். அப்பொழுது உமாதேவியார் கருணை சுரந்து, "ஏ! விஷ்ணுவே! பரமன் பாலித்த வரமும், யான் கொடுத்த சாபமுந் தவறுதாகையால் அவ்வாறழிந்த புத்திரன் மீண்டும் உயிர்பெற்றிருக்கக் கடவன் என்று வரமளித்து மறைந்தனர். அவ்வாறே மன்மதன் விண்டுவுக்கு மகனாய்த்தோன்றிப் பரமன் நெற்றிவிழியாலெரிக்கப்பட்டு மீண்டு முயிர்பெற்ற அனங்கனாயினன். பிறகு விஷ்ணுவானவர் திருப்பாற்கடலையடைந்து தாம் பூசித்த அம்மூவரையும் தனது மார்பினிடத்தில் வைத்துக்கொண்டு அறிதுயிலமர்ந்தனர். இதனை

"நிற்பமற் றித்திற நேமியான் முன்னைநாள்
அற்புடன் வழிபடு மமலையைக் குமரனைத்
தற்பரக் கடவுளைத் தனதுமார் பிற்கொடே
பற்பகல் பணியின்மேற் பாற்கடல் துஞ்சினன்"

என்னும் பாசுரத்தானறிக.

பின்பு தேவேந்திரன் வாற்கலன் என்னு மசுரனொருவனால் துன்பப்பட்டு விஷ்ணுவையடைய அவர் தாம் பூசித்த ஆத்மார்த்தமாகிய சோமாஸ்கந்த மூர்த்தியை யளிக்க, அதன் பூஜாவிசேடத்தினால் மகபதி தன் பகைஞனை வென்று சற்புத்திரப் பேற்றையு மடைந்தனன். இதனை

"பார்த்தியா லெனதெனும் பைம்பொன்மார் [பத்திடை
மூர்த்தியாய் வைகிய முதல்வியைக் குமரனை
தீர்த்தனைப் பூசனை செய்துநின் தீவினை
யார்த்திநீங் குதியென வாதரத் தருளினன்"

என்னுஞ் செய்யுளானுணர்க.

பின்பொருகால்வலன் என்னு மசுரனால் தேவேந்திரனுக்குக் கஷ்டம் நேர முசுகுந்த சக்கரவர்த்தியை யடைந்து வீரவாகு முதலிய நவவீரர்க ளொன்பதின்மரைப் படைத்துணையாய்க் கொண்டு அவ்வசுரனை வென்று இன்னல் நீங்கப் பெற்றனன். அதனால் மகிழ்ச்சியடைந்த இந்திரன் முசுமுகனை நோக்கி "உமக்கு வேண்டியதியா தறைதி, ஈகுவல்" எனலும் ஆன்மகோடிகளுக் கருள் செய்வான் பொன்னகரைவிட்டுப் புவிக்கண்வரக்கருதி தியாகராஜப்பெருமான் மன்னனை நோக்கித் தன்னைக் கேட்கும்படி குறிப்பாலுணர்த்த, அவ்வண்ணமே முசுமுகன் அச்சோமாஸ்கந்த மூர்த்தமாகிய தியாகரைத் தரும்படிக் கேட்டனன். தன் ஆத்மார்த்த மூர்த்தியைக் கொடுக்கமனமிசையாமல் நரபதியை வஞ்சிக்கவெண்ணி விசுவகர்மாவைக்கொண்டு அம்மூர்த்தியைப் போலவே பேதமில்லாமல் ஆறு வேறு மூர்த்திகளைச்செய்வித்துச்சப்ததியாகரையும் வரிசையாய் வைத்துத் தான் விரும்பியபடி யாதாமொரு மூர்த்தியை எடுத்துக்கொள்ளுமாறு பணித்தனன். தேவர்கோவின் சூட்சியறியா மன்னன் சிவபெருமான் திருவருள் வலியால் விஷ்ணுவால் பூஜிக்கப்பெற்ற பழமையாகிய ஆதிமூர்த்தியையே தெரிந்தெடுத்துக்கொண்டனன். தன் ஆத்மார்த்தமூர்த்தி போய்விடவே மற்றைய ஆறு மூர்த்திகளையும் முசுமுகனிடமே இந்திரன் கொடுத்துவிட்டான். அவ்வேழு மூர்த்திகளையும் முசுமுகன் திருவாரூர் முதலாகச் சப்த விடங்க ஸ்தலங்களில் பிரதிஷ்டை செய்வித்துத் தேர் திருவிழா நைவேத்ய பூஜையனைத்தும் குறைவற நடத்திவந்து சிவபெருமான் திருவடி நீழலை யடைந்தாரென்பது சரித்திரம். இதனை

"அந்நாள் தமிழ்க்குத் தூதுசென்ற ஆதிக்
கடவு ளணியாரூர்
பொன்னாட் டினுக்கு மதிகமென்று போந்தா
ரிதன்மேற் புகழுண்டோ"

என்னுஞ் சோழமண்டல சதகத்தானும்

"பூவசஞ்செய்து விண்ணடு புணர்பகை
போக்கியவோர்
கோவசஞ்செய வளராரூர்த் தியாகர்"

என்னும் திருவாரூர் ஒருதுறைக் கோவையாசிரியர் வாக்கானுமறிக. ஆதலால் புத்திரப் பேற்றை விரும்பினோர் சோமாஸ்கந்த மூர்த்



தத்தை விதிப்படி வழிபட வேண்டுமென்பது நன்கு புலனாகின்றது. தவிர இம்மூர்த்தம் ஸ்திரீ புஞ்ச வடிவாயமைதலின் அவன் அவள் அது என்னும் உலகிலுள்ள எவைக்கும் எவர்க்கும் பொதுநிலையர் தாமே என்பதையும், குமாரக்கடவுள் சகிதராய் அம்மையாருடன் வீற்றிருத்தலின் புத்திரப்பேற்றை யளிக்கவல்லவர் தாமே யென்பதையும், சந்திரனைத் தரித்திருத்தலினால் தூமதியை யுடையவர்,எல்லா மறிபவர் (சருவஞ்ஞத்துவர்) தாமே யென்பதையும், கங்கையை யணிதலால் தண்ணருட் பெருக்கத்தையும் கிருபையையுமுடையவர் தாமென்பதையும், மானேந்தி யிருத்தலினால் மான்போல் தாவுகின்ற மனத்தை யடக்கவல்லவர் தாமென்பதையும், மானினது கால்களாகிய நான்கு வேதத்திற்கும் தலைவர் தாமென்பதையும், தமருகமுஞ் சர்ப்பமுந் தாங்கியிருத்தலினால் சுத்தாசுத்த அத்துவாவைப் பிரவர்த்திக்குங் குணத்தினையும், பிரணவ ஒலிபோன்ற தமருகவொலியாகிய நாதத்தத்துவத்தால் உலகைரட்சிப்பவர் தாமே யென்பதையும், சர்ப்பவடிவாகிய குண்டலிசத்தியின் விரிவு சுருக்கங்களே பிரபஞ்ச ஒடுக்கத்தோற்றம் என்பதையும், அதற்குங் காரணபூதர் தாமே யென்பதையும், வரதாபயங் கொண்ட தனது ஆன்மாக்களின் கன்மத்துக் கீடாய்ப் போக முத்திகளை யளிப்பவர் தாமே யென்பதையுங் குறிக்கின்றது. இம்மூர்த்தியின் பெருமையும் தத்துவார்த்தங்களும் அளவுகடந்தன. கற்றறிந்த மேலோர் இன்னும் பலவாறாகப் பெருமைப்படுத்திக் கூறுவர். ஆதலின் இந்து சகோதர! சகோதரிகளே! இத்தகை யுயரிய மாட்சிபெற்ற சோமாஸ்கந்த மூர்த்தியை உள்ளன்போடு வணங்கி வழிபட்டு இம்மை நலனும் மறுமை யின்பமும் பெற்று வாழ்வீர்களாக.

சுபம்.

(தொடரும்)

வை. ச. இராமலிங்க முதலியார்,
துணைத்தலைவர், சைவசித்தாந்த செங்குந்தர் சமாஜம்,
கண்டாச்சிபுரம்.

## ஆயுள் சந்தா.

வெளிநாட்டில் பெரும்பாலான அன்பர்களும் உள்நாட்டில் சிலரும் தங்கட்கு ஆண்டுதோறும் சந்தா செலுத்துவது சிரமமாக இருக்கிறதென்றும், சிலசமயம் ஞாபகமில்லாமல் ஆண்டு முடிவுவரையிலும் சந்தா அனுப்பாதிருக்க நேர்கின்றதென்றும், நமது சமூகப் பத்திரிகைக்கு இவ்வாறு சந்தா செலுத்தாதிருக்கத் தங்கள் மனம் ஒருப்படவில்லை என்றும், ஆயுள் சந்தா ஏற்படுத்தினால் தாங்கள் முதலிலேயே மொத்தமாய்ச் செலுத்தி நமது மித்திரனைத் தங்கள் ஆயுள் பரியந்தம் யாதொரு இடைஞ்சலுமின்றிப் பெற்று ஆநந்திக்கக் கூடுமென்றும் வற்புறுத்தி வேண்டினர்.

எனவே உள்நாட்டிற்கு ரூபா 30-ம் வெளிநாட்டிற்கு ரூபா 40-ம் ஆயுள் சந்தாவாக ஏற்படுத்தியுள்ளோம். அன்பர்கள் பலரும் ஆயுள் சந்தாதாரராய்ச் சேர்ந்து ஆதரிக்குமாறு வேண்டுகின்றோம்.

மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ், சென்னை.

# செங்குந்த யாத்திரைவாசி

## ஊர்வலம்

சாப்பிட்டான உடன் எனக்குச் சீடனாக அமைந்த நடராஜன் என்னை மேல்மாடிக்கு அழைத்துச்சென்றான். அங்கு ஹாலில் தொங்கவிட்டிருந்த ஊஞ்சல் பலகையின் மேல் யான் உட்கார்ந்தேன். நடராஜன் கீழே உட்கார்ந்தான். எங்களைத் தொடர்ந்து முத்து முதலியார் வந்து. 'சுவாமிகள் இளைப்பாறலாம். அடியேனுக்குக் கீழே கொஞ்சம் வேலையிருக்கிறது. அது வரையில் இங்கு யாரும் வரமாட்டார்கள். சீக்கிரம் வந்து விடுகிறேன்' என்று சொல்லி உத்தரவு பெற்றுக்கொண்டு போய்விட்டார். யான் பகலில் தூங்குவது கிடையாது. மௌனமாய் உட்கார்ந்திருந்தேன். அப்போது நடராஜன், 'சுவாமி! உண்ட இளைப்புத் தொண்டருக்குமுண்டு என்கிறார்களே, அது எனக்கு விளங்கவில்லை. தங்கள் அபிப்பிராயத்தைக் கேட்க அவாவுகிறேன்' என்றான். "உடம்பின் வருத்தத்தைத் தொண்டர்கள் பொருட்படுத்துவதில்லை. தொண்டின் பொருட்டே சிறிது உணவிந்து உடலைப் போற்றுவர். அன்னார் ஒழிவு நேர்ந்துழி உட்கொள்வது மிகச் சுருங்கிய உணவாகையாலும், மெய் வருத்தம் பாராராகையாலும், பழமொழி அவ்வாறு கூறும். இதனையே ஒரு சாரார் 'உண்ட இளைப்பு மிண்டருக்குமுண்டு' என்றும் மாற்றிக்கூறுவதுண்டு. இஃது உடல் வலிமை யுடைய மிண்டருக்கே உண்ட இளைப்பு உண்டெனில் ஏனைய மெலிந்த உடம்பினர்க்குச் சொல்வானேன் என்னும் கருத்தது' என்றேன் யான்.

இளைஞன் முத்து முதலியார் சொல்லியபடி புத்திசாலியாகையால் இவ்வாறே பேச்சையொன்றைவிட்டு ஒன்று பலவிதமாக மாற்றிக் கொண்டே போய்க் கடைசியில் யான் எந்த மரபைச் சார்ந்தவன் என்பதை என் வாயினாலேயே சொல்லவேண்டிய நிலைமையில் கொண்டு வந்துவிட்டான். இவன் பேசத் துவக்கியபோதே முத்து முதலியார் எங்கள் இருவரையும் தனியே இருக்க விட்டதன் நோக்கத்தையும், சிறுவன் பேச்சின் போக்கையும் அறிந்துகொண்ட யான் இவன் சொல்வன்மையைக் கண்டுகளிக்க வேண்டுமென்ற எண்ணத்தாலும், தன்னைக் காட்டிலும் யான் பேசும் வன்மையில் பிற்பட்டவனென்னும் அபிப்பிராயம் அவனுக்கு உண்டாக்க வேண்டும் என்னும் கருத்தாலும், இந்நிலையில் யானும் ஒரு செங்குந்தன் என்ற உண்மையை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்னும் அவாவினாலும், யான் பேச்சை அவன் போக்கின்படியே விட்டுக் கொடுத்துக் கடைசியில் உண்மையைச் சாடையாய்த் தெரிவித்தேன். காரியசித்தியான உடனே நடராஜன் சாமர்த்தியமாகத் தான் கருதிய ஒன்றை அறிந்து கொண்டதாக யான் அறிந்து கொள்ளாதபடியும் பேச்சை மாற்றிக்கொண்டே வெகு தூரம் போய்விட்டான். யானும் அதைக் கண்டு கொள்ளாதவனைப் போலவே அவன் போக்கின்படியே சென்றேன்.

சிறுவனுக்கும் எனக்கும் இது வரையில் நடந்த சொற்போரின், அதாவது யான் அவனுக்கு இளைத்துப்போனதாக அவன் எண்ணிக்கொண்ட சொற்போரின் விபரத்தை விவரிப்பது அநாவசியமெனக் கருதி விடுத்துப் பின் நடந்தவற்றைச் சொல்லுகிறேன். பின்னர் எங்களிருவருக்கும் நடந்த சம்பாஷணை கீழ்வருமாறு :—

யான்—நடராஜா! கீழே என்ன ஊர்க்கூட்டமா? விவாதமான விஷயம் போலிருக்கிறதே? சிலர் ஆத்திரத்தோடு பேசுகிறார்களே? (யான் நடராஜனிடத்தில் பேச்சுக் கொடுத்துக்கொண்டே கீழே நடக்கும் விவகாரம் முழுதையும் அறிந்து கொண்டேன்).

நடராஜன்.—' ஆமாம் சுவாமி! சிற்றப்பா அதற்காகத்தான் போயிருக்கிறார். இவர்தானே ஊர் தலைவர். இவரில்லாமல் ஒரு விவகாரமும் நடக்காது.

யான்.—அப்படியா! என்ன விவகாரம் உனக்குத் தெரியுமா?

நட—குருஸ்வாமிகளைப் பற்றிய விவகாரம்.

யான்—தம்பி! என்ன விசேஷம் மங்கள வாத்தியம் தெருவில்?

நட—சுவாமிகளை ஊர்வலமாக அழைத்துச் செல்லத்தான். பல்லக்கும் வந்திருக்கும்.



யான்—இவ்வளவு ஆடம்பரம் ஏன்? இவையெல்லாம் எனக்குப் பிடிக்காதே. பல்லக்கு ஏது? முத்து முதலியாரைக் கூப்பிடு.

நட—சுவாமிகள்! கோபித்துக் கொள்ளக் கூடாது. உண்மையைச் சொல்லிவிடுகிறேன். மறைத்து வைப்பதிற் பயனில்லை. இது சிற்றப்பா ஒருவரின் ஏற்பாடல்ல. ஐந்து கிராமங்கள் ஏகோபித்துச் செய்த ஏற்பாடு. தாங்கள் பொறுமையோடிருந்து எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதனால் பெருநன்மை விளையுமென எதிர்பார்க்கிறேன். ஐந்து கிராமவாசிகளும் க்ஷேமமடைவார்கள். இவ்வைந்து கிராமங்களுக்கும் தற்போது ஆசாரியர் கிடையாது. சுவாமிகளைத்தான் உத்தேசித்திருக்கிறார்கள். பல்லக்குக் குருஸ்வாமிகள் இங்கு விஜயஞ்செய்யும் காலத்தில் அவரை வரவேற்று ஊர்வலமாக அழைத்துச் செல்வதற்காகச் செய்யப்பட்டது.

யான்—பறந்து செல்லும் பக்ஷியைப் போன்ற எனக்கு இந்த வீண் விவகாரங்களெல்லாமேன்? எனக்குப் பிடிக்கவில்லை, இதனால் என் விரதத்திற்கே தடைநேரும் போலிருக்கிறது. இது என்ன வேலை? என்னை யறியாது இவ்வளவும் செய்ததற்குக் காரணம் யார்? முதலியாரை அறியாது எந்த ஏற்பாடும் நடக்காதே. அவரை யான் இப்போதே பார்க்கவேண்டும்.

நட—(பயந்து எழுந்து) தனக்கென வாழா பிறர்க்குரியாள! தங்களை வாயார வாழ்த்திப் புகழவேண்டுமென்ற பேரவா எனக்கிருப்பினும அவ்வாறு தங்கள் எதிரில் செய்வது முகஸ்துதியாகுமென்று அஞ்சுகிறேன். ஆயிரக்கணக்கானவர்கள் அதிருப்தியடைவார்கள். எக்காலத்திலும் ஒற்றுமை என்பதே இல்லாத ஊர் இன்று ஒற்றுமையுற்றிருக்கிறது. தங்களுக்குப் பிரியமில்லாவிடினும், எங்கள் ஒற்றுமை வாழ்வையும் க்ஷேமத்தையும் கருதி ஏற்றுக்கொள்ள வேண்டுமெனப் பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளுகிறேன். (எனப் பலவாறு கூறி என்னை இணங்கும்படி செய்தான்.)

யான்—(கோபம் தணிந்தவனைப்போல்) அப்படியானால்; சரி எனினும் நான் முத்து முதலியாரைப் பார்க்கவேண்டும.

நட—அவர் அநாவசியமாக இருக்கமாட்டார். கூட்டமும் கலைந்துவிட்டாற்போ லிருக்கிறது. இதோ அழைத்து வருகிறேன். (சொல்லிக்கொண்டே கீழே இறங்கினான்.)

சிலர் மேலே வருகிற சப்தம் கேட்டது. உடனே முத்து முதலியார் மூன்று வயோதிகர்களோடு மேலே வந்தார். வயோதிகர்கள் என்னை வணங்கிக் கையேந்தி நின்றார்கள். நான் விபூதி யளித்து உட்காரும்படிக் கையமர்த்தி, 'முதலியாரே! இதெல்லாம் யாருடைய ஏற்பாடு? யாத்திரை வாசியாகிய எனக்குப் பொருந்துமா?' என்று கேட்டேன். முத்து முதலியார் எழுந்து அதற்காகத் தான் தம்பியை சுவாமிகளிடம் அனுப்பி வைத்தேன் என்று பதில் சொல்லிக் கொண்டிருக்கையில் நடராஜன் கெடியாரத்தை பார்த்தான். நாட்டாண்மை முதலியார் 'சுவாமிகள் புறப்படலாமே,மணியாய்விட்டது' என்றார். யாவரும் புறப்பட்டுக் கீழ தெருத் திண்ணைக்கு வந்து சேர்ந்தோம்.

அங்கு ஒரு புறமாகத் திரிபுண்டரம் தரித்தவர்களாய்ச் சாதாரண உருத்திராக்க மாலைகளையும் பொன் வேய்ந்த உருத்திராக்க மாலைகளையும் அணிந்து வெள்ளிய ஆடையைச் சுற்றித் தரித்துப் பசிய நிறம் வாய்ந்த சால்வைகளை மடித்து அரையில் கட்டிக்கொண்டு இன்னிசை கருவிகளோடு நின்ற தேவார பாராயணச்சபையாரைக்கண்டு வணங்கினேன். அவர்கள் விரைந்துவந்து 'சுவாமிகள்இப்படியுஞ்செய்யலாமோ' என்று சொல்லிக்கொண்டே அடிபணிந்து நின்றார்கள். யான் அவர்களுக்கு விபூதிப் பிரசாதமளித்தேன். பலவகை வாத்தியங்களும் முழங்க ஆரம்பித்தன. திரளாக ஜனங்கள எனனிடம் வந்து 'சுவாமிகளே! முன்னறிக்கை யின்மையாலும் நேரமாய்விட்டபடியாலும் காலையில் செய்திருக்கவேண்டிய வரவேற்பை இப்போது செய்ய உத்தேசித்திருக்கிறோம். மற்ற விஷயங்களெல்லாம் கூட்டத்தில் வெளியாகும். கிருபை கூர்ந்து எழுந்தருளவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்கள். யான் புன்னகை செய்து எழுந்தேன். அரோகரா என்ற சப்தம் ஆகாயத்தைப் பிளந்தது. பல்லக்கில் அமர்ந்தேன். உடனே ஊர்வலம் புறப்பட்டது. வாத்தியங்கள் முழக்கமும் விருதுகளும் முன்னே சென்றன. பல்லக்கின் இருபக்கங்களிலும் தேவார சபையார் பாராயணம் செய்து வந்தார்கள். ஜனங்கள் நாலாபக்கங்களிலும் சூழ்ந்து வந்தார்கள். இடையிடையே 'நமப்பார்வதீ

பதையே, அரகரமகாதேவா' என்றசப்தம் முழக்கிற்று. இவற்றினிடையே இரண்டொரு தடவை 'செங்குந்த மகாஜன சங்கத்திற்கு ஜே!' என்ற சப்தமும் கேட்டது. அது என்னைத் திடுக்கிடச் செய்தது. 'மாபெருஞ் செங்குந்தர் இயக்கத்தில் ஒரு சிறந்தொண்டனாக இருக்க வேண்டிய நீ இத்தகைய ஆடம்பர மரியாதையை ஏற்றுக்கொள்ளலாமா? வந்த காலைவிட்டுப் பந்தக்காலைப் பிடித்தனையே!' என்று இடித்து ஞாபக மூட்டுவதுபோலிருந்தது. ஆயினும் இனித் தப்பிப்போக வழியில்லை என்றாலும், இதன் மூலமாகவும் என்னாலியன்ற தொண்டைச் செய்ய முயலவேண்டும் எனத் தீர்மானித்துக்கொண்டேன். யான் இவ்வூருக்கு வந்த செய்தி சுற்றுப்பட்டுக் கிராமங்களுக்குச் சில மணிநேரங்களுக்குள் பரவியதுபோலவே சில நிமிஷங்களுக்குள் யான் ஒரு செங்குந்தன் என்ற விஷயமும் காட்டுத்தீப்போல ஊர்முழுவதும் பரவிவிட்டது. வீடுகள்தோறும் தீபாராதனை முதலியவை நடந்ததன்றிப் பெண்டு பிள்ளைகளெல்லாம் வீழ்ந்து வணங்கினார்கள். யான் விபூதிப்பையைத் திறந்துவைத்து விபூதி ஓயாது கொடுத்தபடியே யிருந்தேன். அருந்தனி அணுகுமுன் பையுங் காலியாய்விட்டது. அச்சமயம் திருவாவடுதுறை பண்டார சந்நிதியின் ஞாபகம் வந்தது.

அருந்தனியை அணுகியதும் யான் இறங்கி, முத்து முதலியார் முதலிய பிரமுகர்கள் முன்னே வழி விலக்கிக்கொண்டு செல்ல, அவர்கள் பின்னே சென்று முக்கட்கரும்பையும் அரும்பவள நாயகியையும் வணங்கி அலங்கார மண்டபத்தை யடைந்து அங்கு அமைத்திருந்த உயரிய ஆசனத்தில் அமர்ந்தேன். அரோகரா என்ற சப்தம் செவிடுபடுத்தியது. அநேகர் எனக்குப் பூமாலை சூட்டினார்கள். ஜனங்கள் கூட்டங் கூட்டமாக வந்தபடியே இருந்தார்கள். என்னெதிரில் விசாலமான இடம் காலியாயிருந்தது; அங்கு வந்து அநேகர் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து விபூதி வேண்டி நின்றனர். என் விபூதிப்பை காலியாய்விட்டதை அறிந்த நடராஜன் என் பெட்டியிலிருந்த மற்றொரு பையை எடுத்துக் கொடுத்தான். யான் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த திருநீற்றுப் பதிகத்தை ஓதிக்கொண்டே கேட்டவர்களுக்கெல்லாம் திருநீறு சாதித்தேன்.

(தொடரும்.)


# அடுத்த ஆண்டு முதல்

அழகிய கிளேஸ் காகிதத்தில்,

ஆப்டோன் படங்கள், சித்திரப் படங்களுடன்

## நமது மித்திரன் வெளிவர விரும்புகிறீர்களா?

அப்படியானால்

உங்கள் சந்தாவை உடனே அனுப்பிவிட்டு

ஒவ்வொருவரும் ஒரு புதிய சந்தாதாரரையாவது

சேர்த்தனுப்ப முயலுங்கள்.

## இது ஒருவருக்கும் கஷ்டமல்ல.




# குலதிலகர் பகுதி

### மகாவித்வான் காஞ்சீபுரம் பூசை நமசிவாய முதலியாரவர்கள்

சான்றோர் நிறைந்துள்ளதென ஆன்றோர் புகழும் பாலிசூழ்ந்திலங்கும் தொண்டைவள நாட்டிலுக்கோர் திலகம்போல் விளங்குவதும்; உலக மாதாவாகிய உமாபிராட்டியார் (ஸ்ரீ காமாக்ஷியம்மை) இருநாழி நெல்லைக்கொண்டு எண்ணான் கறங்களை வளர்த்ததுமாகிய காஞ்சிமா நகரின்கண்ணே சுமார் 100 வருஷங்களுக்குமுன் சைவ நன்னெறியையும், செந்தமிழணங்கையும் இடையறாது போற்றிப் பாதுகாத்து உலகப் பிரசித்திப்பெற்று விளங்கும் ஒரு செங்குந்த குடும்பத்தில் தோன்றியவராகும் நமது மகா வித்வான் பூசை நமசிவாய முதலியார் என்னும் பெரியார். சுத்தாத்துவிதமென்னும் சைவசித்தாந்த நன்னெறியைத் தமிழகத்திற் குதவியருளிய சந்தான குரவர்களுள் முதன்மையானவராகிய மெய்கண்ட சிவாசாரியஸ்வாமிகள் அருளிச்செய்த சிவஞானபோதமென்னும் ஞான நூலுக்கு சிவஞான மஹாபாஷ்யம் என்னும் ஒப்புயர்வற்ற உரை செய்தருளியவரும், வடமொழி, தென்மொழி ஆகிய இருபாஷைகளையும் கரைகண்டவரும், பல அரிய இலக்கிய இலக்கண நூல்களை இயற்றி யருளியவருமாகிய திருவாவடுதுறை ஸ்ரீ சிவஞான முனிவரது பரம்பரையில் முறையாகப் பாடங்கேட்டவர் நமது முதலியார் அவர்கள். அவர்கள் காலத்திலும் பிற்காலத்திலும் அவர்களைப்பற்றித் தெரியாத தமிழ் வித்துவான்களாவது தமிழபிமானிகளாவது ஒருவருமில்லையென்றே சொல்லலாம்.

பூசை நமசிவாய முதலியார் அவர்கள் நல்லாசிரியர்களை அடுத்துப் பாடங்கேட்ட முறையும், அன்னாரிடத்துக் காட்டிய மரியாதையும், கல்வியில் காட்டிய ஊக்கமும், இக்காலத்து மாணவர்களுக்கு மிகவும் ஆச்சரியத்தையே விளைவிக்கும் என்பதிற் சந்தேகமில்லை. உதாரணமாக, துறையூர் மடத்திலிருந்து காஞ்சிபுரம் வந்து சிலகாலம் தங்கியிருந்த ஒரு சுவாமிகளிடம் முதலியார் அவர்கள் வேதாந்த நூலொன்று பாடங் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அந்நூல் பூர்த்தியாகு முன்னரே ஷை சுவாமிகள் காஞ்சிபுரத்தை விட்டுப் புறப்படலும், அதை யறிந்த முதலியார் அவர்கள் தம தாசிரியராகிய சுவாமிகளை எடுத்த நூலைப் பூர்த்தி செய்துவிட்டுப் போமாறு வேண்டிக்கொள்வதும் அபசாரமாகுமெனக் கருதிச் சுவாமிகளுடனே தாமும் புறப்பட்டு வந்தவாசி வரையில் அதாவது காஞ்சியிலிருந்து 30 மைல் தூரம்வரையில் பல்லக்கில் செல்லும் ஆசிரியர் பக்கலில் கால் நடையாக நடந்தபடியே பாடங்கேட்டுச் சென்று நூலைப் பூர்த்தி செய்துகொண்டு விடைபெற்றுத் திரும்பி வந்தார்கள். இத்தகைய பல செய்கைகளால் நம் குலதிலகமாகிய இப்பெரியார் ஆசிரியரிடத்தில் கொண்டிருந்த பயபக்தியும், மரியாதையும், கல்வியினத்தில் வைத்திருந்த ஊக்கமும் எத்தகையவென நன்கு விளங்குகின்றன.

இவர்கள் வேதாந்த நூல்களே யன்றி சைவசித்தாந்த நூல்களிலும் ஆழ்ந்த ஞானமுடையவர்கள். இவர்களிடத்தில் முறையாகப் பாடங்கேட்ட வித்வான்களும், சந்தேக நிவர்த்திக்காக வந்த வித்வசிரோமணிகளும் எண்ணிறந்தோராவர். முறையாகப் பாடங் கேட்ட மாணவர்களுள் (எமக்குத் தெரிந்த அளவில் முக்கியமானவர்கள் முதலியார் அவர்கள் குமாரர் பூசை கந்தசாமி முதலியார், (பின்னர் திருவாவடுதுறை ஆதீனத்துப் பட்டத்துக்கு வந்த; அம்பலவாண தேசிகர், ஆறுமுகத் தம்பிரான், சிதம்பரம் ஈசான்ய மடம் இராமலிங்க சுவாமிகளது ஆசிரியராகிய காஞ்சீபுரம் நல்லகம்ப முதலியார் முதலிய் பிரசித்திபெற்ற பெரியோர்களாவர்.

முதலியார் அவர்களைப்போல் நிரம்பிய சாந்தகுணமுடைய சாதுக்களைக் காண்பது மிகவும் துர்லபமென்றே சொல்லலாம். பொறை அடக்கம், காருண்யம், பெருந்தன்மை, சைவாசாரம் முதலிய சகல நற்குணங்களும் ஒருங்கே இப்பெரியாரிடத்தே அமைந்திருந்தன என்பது மிகையாகாது. இப்பெருந்தகையார் 'கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக'என்னும் திருக்குறளிற்கும், 'தக்கார்தக

விலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்' என்னும் நாயனார் திருவாக்கிற்கும் பொருத்தமான இலக்கியமாக விளங்கியவர்கள். இவர்களிடத்தில் ஆடம்பரமென்பதே கிடையாது. யாவர்க்கும் மிக எளியர் ; தனவந்தருமல்லர். எனினும் யாரிடத்தும் பொருள் வருவாயை எதிர்பார்த்துப் பாடம் சொல்லும் வழக்கமே கிடையாது. சில சமயங்களில் நுண்ணறிவுடைய ஏழை மாணவர்களுக்கு உண்டி உடை உதவியும் பாடஞ் சொல்லுவதுண்டு. நமது குலத்தொழிலைச் செய்துகொண்டே தான் எத்தகையோர்க்கும் பாடஞ் சொல்லுவது வழக்கம். இவர்கள் தறியை அடுத்த திண்ணை (மேடை) தான் தம்மிடம் வரும் வித்வசிரோமணிகளும் மாணவர்களும் உட்காருமிடம். இவற்றால் முதலியார் அவர்களது தொழிலுக்கு யாதொரு இடைஞ்சலும் கிடையாது தம்மைத் தேடிவந்தவர்களுக்குப் பாடம் சொல்லுவதைத் தவிர அதன் பொருட்டுத் தாம் வெளியே போவதில்லை. நமது முதலியார் அவர்களிடத்தில் சந்தேக நிவர்த்திக்காக வந்த பெரியார்களில் உலகப் பிரசித்திபெற்ற ஆறுமுக நாவலரும் ஒருவராவர். நாவலர் இதன்பொருட்டுக் காஞ்சீபுரத்தில் ஒருவாரம் வரையில் தங்கியிருந்ததாகத் தெரிகிறது. அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூன்று சைவசமயாசாரியர்கள் அருளிய தேவாரங்கள் அடங்கிய அடங்கன்முறை முதல் முதலாக நமது பூசை நமசிவாய முதலியார் அவர்கள் முன்னிலையில் தான் காஞ்சீபுரம் சபாபதி முதலியாரால் பார்வையிடப்பட்டு சுப்பராய ஞானியாரால் அச்சிட்டு வெளியாக்கப்பட்டது என்பதைச் செங்குந்த நேயர்கள் ஞாபகம் வைத்துக் கொள்வார்களாக.

இப்பெரியார் சம்பந்தப்பட்ட அநேக வேடிக்கையான நிகழ்ச்சிகள் கூறுவதுண்டு. அவற்றையெல்லாம் ஈண்டுரைப்பது அநாவசியமாகும். ஆனால், ஒன்றைமாத்திரம் உதாரணத்திற்காகக் காட்ட விரும்புகிறோம். விஸ்வகர்ம குலத்தைச் சார்ந்த ஒரு பிரபல வித்வான் முதலியார் அவர்களைக் காணவிரும்பிக் காஞ்சீபுரத்திற்கு வந்தார். அவர் வரும் சமயத்தில் நமது முதலியார் அவர்கள் பாவு தோய்ந்துகொண்டிருந்தார்கள். வந்தவர் நம் பெரியாரை அணுகிப் பேசிக்கொண்டிருக்கையில், 'தாங்கள் நூலாராய்ச்சியில் மிக வல்லவரென்று கேள்விப்பட்டுத் தங்களைப் பார்க்கவந்தேன். இப்போது நான் அதைப் பிரத்தியக்ஷத்திலும் கண்டேன்' என்றாராம்.

உடனே இவர்கள், 'ஆம் இரும்படியும்' எனப் பதிலுரைத்தார்களாம். இதைக் கேட்ட அவர் பேருவகைகொண்டு "நூல்பலகற்ற நுண்ணறிவுடையீர்! தங்கள் சொல்வன்மையையும், சமயோசித அறிவையும் கண்டு பேரானந்தங்கொண்டேன். தங்களைப்போன்ற பெரும்புலவர்கள் நட்பைப்பெறுதலே பெரும் பேறென்று இன்றேயுணர்ந்தேன். இதனாலன்றோ 'உவப்பத் தலைகூடி உள்ளப்பிரிதல் அனைத்தே புலவர் தொழில்' என்றார் திருவள்ளுவரும்" என்று சொல்லி முதலியார் அவர்களைச் சேர்த்துக் கட்டிக்கொண்டனராம். ஈண்டு முதலில் நூலாராய்ச்சியில் வல்லவரெனக் கேள்விப்பட்டேன் என்றது தமிழ் நூல் ஆராய்ச்சியையும், பின்னர் அதைப் பிரத்தியக்ஷத்தில் கண்டேன் என்றது பாவு தோயுங்கால் நூலைச்சீர்செய்தலையும் குறிக்கும். அதற்கு நமது முதலியார் அவர்கள் இறுத்த பதில் அவர்களது ஆழ்ந்த கல்வியையும், சொல்வன்மையையும், பொருட் செறிவையும் நன்கு விளக்குகிறது. ஈண்டு இவ்விரு பெருமக்களும் விளம்பிய வாக்கியங்களின் தாரதன்மியத்தை எடுத்துக் காட்டாமலிருக்க முடியவில்லை. காணவந்த பெரியார் சொல்லியது அநேக சொற்கள் அடங்கிய பெரிய வாக்கியமாகவும், நூல் ஆராய்ச்சி என்ற இடத்தில் மாத்திரம் இரண்டே அர்த்தம் தருவதாயுமிருக்கிறது. நம்பெரியார் கூறிய பதிலோ மூன்றே (சிறு) பதங்களையுடையதன்றி மூன்று அர்த்தங்களைக் கொடுப்பதாகவுமிருக்கிறது.

அவ்வாக்கியத்தின் மூன்று அர்த்தங்களாவன:—

1. 'யாம் செய்வதாக நீர் கேள்விப்பட்டதும் நேரில் பார்த்ததும் நூல் ஆராய்தல் தான் அதை நீரும் கற்றுக்கொள்ள விரும்புவீராயின் எம்மோடு சில காலம் இரும். எம்மை நாடிவந்தவர்களுக்குத் தெரிந்தவற்றைச் சொல்லிக் கொடுப்பது எமக்கு வழக்கமாகையால் சொல்லித் தருவோம்; நீர் கவனமாய்ப் படித்து(கற்று)க் கொள்ளும்.'

2. 'யாம் செய்வதாக நீர் கேள்விப்பட்டதும் நேரில் பார்த்ததும் நூல் ஆராய்தல் தான், அதை நீரும் கற்றுக்கொள்ள விரும்புவீராயின் எம்மோடு சிலகாலம் குரு விசுவாசத்தோடு இரும். உமக்கு யாம் பிரயாசைப்பட்டு சொல்லிக்கொடுக்க வேண்டிய அவசியமுமில்லை. நீர் எம்மிடத்து வைக்கும் விசுவாசத்தாலும் எமது சந்நிதான விசேஷத்தாலும் அத்தொழில் தானாகவே உமக்குப் படியும்.'



3. 'யாம் எமது குலத்தொழிலைச் செய்வதாக நீர் கேள்விப்பட்டதாகவும் அதை இப்போது நேரில் பார்த்ததாகவும் எம்மிடஞ்சொல்லுவது உண்மைதான். குலத்தொழிலைச் செய்வதனால் எவ்விதத் தாழ்வுமில்லை உயர்வுமில்லை. தொழிலெல்லாம் ஒன்றே. ஆகையால் எம்மைப்போலவே நீரும் உமது குலத்திற்குரிய இரும்பு அடிக்கும் தொழிலைச் செய்யும்' என்பதாம்.

'ஆம் இரும்படியும்' என்ற சிறு வாக்கியத்தில் பொருந்தியுள்ள மூன்று சொற்களையும், மூன்றுவது அர்த்தத்தை நோக்கிப் பதச்சேதம் செய்தலை எடுத்து உள்ளபடியே பார்ப்போமாயின் மெய் எழுத்துக்கள் நீங்கலாக முதல் சொல் ஓரெழுத்தாலும், இரண்டாஞ்சொல் ஈரெழுத்துக்களாலும், மூன்றுஞ் சொல் மூவெழுத்துக்களாலும் ஆக்கப்பட்டும், மெய் எழுத்துக்களைச் சேர்த்துப் பார்க்கின் முதல் சொல் ஈரெழுத்துக்களாலும், இரண்டாஞ் சொல் மூவெழுத்துக்களாலும், மூன்றுஞ் சொல் நான்கெழுத்துக்களாலும் ஆக்கப்பட்டும் இருக்கும் அழகு விளங்காமற் போகாது. சூத்திரம் போல் இவ்வளவு பொருட் செறிவும், அழகும் பொருத்தமான அர்த்தமும் பொருந்திய வாக்கியத்தைக் கேட்ட எப்புலவர் தான் மகிழ்ந்து போற்றார்.

இத்தகைய பெரியாராகிய மகா வித்வான் பூசை நமசிவாய முதலியார் அவர்களுக்குப் புதல்வர்கள் கந்தசாமி முதலியார், குருசாமி முதலியார், குமாரசாமி முதலியார் என்னும் மூவராவர். இம்மூவருள் குருசாமி முதலியார் தேவாரத்தில் நுண்ணிய அறிவும் ஆழ்ந்த ஆராய்ச்சியும் நல்லொழுக்கமும் உடையவர் என்பதைத் தவிர வேறு விபரம் தெரியவில்லை.

## மகா வித்வான்
## காஞ்சிபுரம் பூசை கந்தசாமி முதலியார்.

பூசை கந்தசாமி முதலியார் அவர்கள் தமது தந்தையாராகிய மகா வித்வான் நமசிவாய முதலியார் அவர்களுக்குப் பிறகு காஞ்சீபுரத்தில் பிரசித்திபெற்ற ஒரு வித்வ சிரோமணியாக விளங்கியிருந்தார். பரந்த தமிழ்நூல் ஆராய்ச்சியுடையவர். இவர்களைப்பற்றியும் தமிழுலகம் நன்கறியும். இவர்கள் முறையாகப் பாடங்கேட்ட அந்தாதிகளின் எண்ணிக்கை மாத்திரமே 120க்குக் குறையாதென்றால், மற்ற நூல்களின் எண்ணிக்கையை வாசகர்களே யூகித்துக் கொள்ளலாம். கந்தசாமி முதலியார் பாடஞ் சொல்லும் முறை, தொழில் முதலியவற்றில் தமது தந்தையாரையே பின்பற்றி வந்தார். இவரது எண்ணிறந்த மாணவர்களுள் பிரசித்தி பெற்றவர்கள் பாலூர் சீனிவாச கவிராயர், காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் கோவில் பெரிய கோபுரத் திருப்பணியாற்றிய தாசில் சோமசுந்தர முதலியார், ஐயங்கார்குளம் நாராயணசாமி முதலியார், சிவசங்கர தேசிகர், முத்தானந்த செட்டியார், திருவாவடுதுறை சுப்பிரமணியத் தம்பிரான், சாலைத்தெரு ஏகாம்பர முதலியார் முதலியோராவர். பூசை கந்தசாமி முதலியாருக்கும் அவரது தந்தையாருக்கும் திருவாடுதுறை ஆதீனத்தில் மிகுந்த மதிப்பும் செல்வாக்கும் இருந்து வந்தன. இவர் ஒரு சமயம் திருவாவடுதுறை சந்நிதானத்தினிடத்தில், பேசிக் கொண்டிருந்தபோது 'சந்நிதானத்திற்கு ஞாபகமிருக்கவேண்டும்' என்றதைக் கேட்டவுடனே சுவாமிகள் 'திருவாசகம் இறக்குமாயின் தங்களுடைய ஞாபகம் இறக்கும்' என்று மறுமொழி கூறினார்கள். இதனால் இக்குடும்பத்திற்குச் சில வருஷங்களுக்கு முன் திருவாடுதுறை ஆதீனத்தில் இருந்த மதிப்பு நன்கு விளங்கும்.

பெரிய புராணம் முதலிய அரிய நூல்களுக்கு உரை எழுதிய பெரியோர்கள் பலர் தாம் உரை எழுதுங் காலத்தில் உண்டான சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ள இவர்களிடம் வருவதுண்டு. பெரிய புராணம், கந்தபுராணம், தணிகை புராணம், சேது புராணம், திருவிளையாடல் புராணம் முதலிய பல நூல்களுக்கு இவர்கள் காலத்தில், பாடஞ்சொல்லுவதிலும், சந்தேக நிவர்த்தி செய்வதிலும் நல்லாசிரியர்களிடத்தில் முறையாகப் பாடங்கேட்டார்களாகையால், இவர்களே சிறந்தவர்களாக்கக் கருதப்பட்டு வந்தார்கள்.

கல்வி சம்பந்தமாகச் சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக நம்மரபினர்க்கு உண்டான பெருமைக்கெல்லாம் இக்குடும்பத்தினரும், காஞ்சீபுரம் ம. த. சாமிநாத முதலியார் அவர்கள் முன்னோராகிய திருவவாடுதுறை ஆதீனத்துத் தம்பிரான் ஸ்ரீசரவண தேசிகரும் தான் முக்கிய காரணபூதர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. காஞ்சியில் இன்னும் தமிழ் மணங்கம

மும் மண்டபத்தெருவிற்கு உண்டான மதிப்புக்கும் கௌரவத்திற்கும் முக்கிய காரணம் இக்குடும்பமே என்பதையும் ஒப்புக்கொள்ளாதவர்கள் ஒருவருமில்லை.

நமசிவாய முதலியார் அவர்கள் பௌத்திரரும், கந்தசாமி முதலியார் அவர்கள் புத்திருமாகிய பூசை ஆறுமுக முதலியார் தமது முன்னோரைப் பின்பற்றியே தம்மைத்தேடி வருவோருக்குத் தம்மால் இயன்ற அளவு இன்னும் பாடஞ்சொல்லி வருகிறார்கள். திரு. ஆறுமுக முதலியார் அவர்கள் ஜேஷ்ட குமாரராகிய பூசை நமசிவாய முதலியார் என்னும் இளைஞர். தற்போது ஆவடையார் கோயிலில் தமிழாசிரியராக இருந்து வருகிறார்.

தமிழகத்தே நமது செங்குந்த மரபிலும் ஏனைய மரபுகளிலும், எண்ணிறந்த வித்வான்கள் இருந்தார்கள், இருக்கிறார்கள் என்றாலும் இக்குடும்பத்தைப்போல் இடையறாது நாலைந்து தலைமுறையாகப் பிரபல வித்வான்களையும், 12 தலைமுறையாக 'சிவபூசை' தவறாது அனுஷ்டித்து வரும் உத்தமர்களையும் தோற்றுவித்து வரும் குடும்பங்களைக் காண்பது மிகவும் அரிதென்றே சொல்லவேண்டும். இக்குடும்பத்தினர் பேருக்குப் பூசை என்னும் அடை வந்த காரணம் வாசகர்களுக்கு இப்போது நன்கு விளங்கும்.

வா. பொன்னம்பலம்.

செங்குந்தர் கல்வி நிதிச் சீட்டை ஏராளமாய் விற்று
ஏழைச் செங்குந்த மாணவர்களை ஆதரியுங்கள்.

## கல்விநிதிச் சீட்டு விற்ற அன்பர்கட்கு அறிக்கை

சீட்டு வாங்கியவர்களிற் பலர் தாங்கள் வாங்கிய சீட்டின் கவுண்டர்பாயிலும் பணமும் வந்து சேர்ந்து விட்டதா என்பதைத் தெரிவிக்குமாறு கடிதங்கள் எழுதுகின்றனர். சீட்டுப் புத்தகம் விற்றவர்களிற் பலர் இன்னும் திருப்பியனுப்பாதிருப்பதால் வந்த கடிதங்கட்குப் பதில் எழுத முடியாமலிருக்கிறது. ஆகையால் பூரா புத்தகங்கள் விற்றவர்கள் உடனே கவுண்டர்பாயிலையும் அதற்குப் பணத்தையும் விரைவில் அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம்.



# சுகாதாரப் பகுதி

## க்ஷயரோகம்

(தொகுதி ௯, பகுதி ௪, ௩௯௪-ம் பக்கத் தொடர்ச்சி).

### மாம்சபக்ஷணம்

மாம்ச பக்ஷணிகளுக்கு இந்நோயினால் ஆபத்து காணலாம். சில மிருகங்களுக்கும் இவ்வித நோய் இருப்பதைக் கண்டு தெளிந்துளார். ஆனால், சாமானியர்கள் இதை கவனிக்காகுறைதான். முக்கியமாக ஆடு, கோழி, மாடு இவைகளுக்குத்தான் இந்நோய் தாக்குகிறது. இவைகளின் மாம்சங்களை மனிதர்கள் புசிப்பதால் இவைகளிலுள்ள கிருமிகள் புசிப்பவர்கள் உடலில்புகுந்து பரவுகின்றன. ஆனால் மாம்சாதிகளை வேகவைப்பதால் கிருமிகள் இறந்து விடுமேயென்று சமாதானஞ் சொல்லலாம். மாம்சங்கள் வேகும் தீயானது கிருமிகளை இறக்கச் செய்யப் போதாது. இன்னும் அதிக தீ வேண்டும். அவ்வவ்வு தீ போட்டால் மாம்சம் கெட்டுவிடும். ஆகையால் கிருமிகள் ஜீவதிசையிலிருப்பதால் உடலில் ஊறி தேகமெங்கும் பரவுங்கால் இந்நோய் சுவாசகோஸங்களிலோ அல்லது எலும்புகளிலோ பிடித்துக் கொள்ளுகின்றது. இதற்குச் சில ஆண்டுகள் செல்கின்றன. சுவாசகோசங்களைப்பற்றினால் க்ஷயரோகமென்றும், எலும்பைப்பற்றினால் எலும்புருக்கி நோய் என்றும் பெயர் வகிக்கின்றது. இந்நோய் சில ஆண்டுகளாக தேகத்திற் பரவி விர்த்தியாகும். இடையில் அவரவர்கள் பெண்டு பிள்ளைகளுக்கும் சம்பவிக்கின்றது. மாமிசம் புசிப்பதால் சேரிடும் பலவித கெடுதிகளில் இதுவும் ஒன்றாகும். இதை மாமிசபக்ஷணிகள் ஒப்புக்கொள்ளாவிடினும், இதன் உண்மையோ உண்மைதான். ஆனால் இதைப் புசிப்பதால் தேகத்திற்குப் பலம் என்று சொல்வாரும் உளர்.

'ஊனைத்தின்று ஊனைப்பெருக்காமை முன்னினிதே'
"கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்
மற்றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே"

என்ற முதியோர் வாக்குக்கு என்ன சொல்வார்களோ?

தவிர சாகபக்ஷணிகளாகிய யானை குரங்கு முதலானவைகள் தேகவன்மையில் குறைவுபோலும். சில மிருகாதிகளே இதைவிட்டு விட்டிருக்க, மிக்க அரிதாய மானிட உடலெடுத்தும் துர்நாற்றமுள்ள பதார்த்தங்களை மேன்மை பெற்ற அன்னத்துடன் சேர்த்துப் புசிப்பதற்கு எப்படி மனம் பதையாமலிருக்கின்றனரோ அதுதான் ஆச்சரியம். ஆனால் இது பழக்கத்தின் கொடுமையென்றே சொல்லவேண்டும்.

ஆயினும் அறிவைக்கொண்டு விசாரிக்குங்கால் ஏற்பட்ட கெடுதிகளை மனதில் உன்னித் துர்கிர்த்தியங்களையும் துர் ஆசாரங்களையும் நீக்கிய பலர் மாம்சம் உண்ணுவதையும் விட்டுக்கொண்டே வருகின்றனர். அதை அனுசரித்தாவது இன்னும் மாம்ச உணவைக் கையாண்டுவருபவர்கள் தாங்கள் விட முயல்வதுடன், தங்களுக்கான சிறு பிள்ளைகளையும் மாம்ச உணவைக் கொடுத்துப் பழக்காவண்ணம் செய்து வருவது பெற்றோர்கள் தங்கள் மக்கட்குச் செய்ய வேண்டிய கடமைகளில் முக்கியமானது என்று மதித்து நடத்தவேண்டும்.

### மதுபானம்.

நிற்க, இனி மதுபானத்தின் வழிவரும் கெடுதிகளோ அளவிற்கு மிஞ்சியவை. குடியர்கள் கள்ளுக்கடைகளில் மண்குடுவைகளிலும், சாராயக்கடையில் டம்ளர் முதலானவைகளிலும் உண்ணுவது வெகு விந்தை. அதிலும் அவைகளை வாயில்வைத்துக் கடித்துத்தான் சாப்பிடுவது சகசம். அவைகளின்மேல் சதா மொய்த்திருக்கும் ஈக்களுக்கோ கணக்கில்லை. அங்கு எப்படிப்பட்ட புத்திமான்கள் செல்லுகிறார்கள் என்பது உலகப் பிரசித்தம். இவர்களுடைய தேகம் நோயின்றி இருத்தல் அருமை. இம்மூலமாகக் கிருமிகள் மற்றவர்கள் உடலில் புகுந்து வாட்டுவது சகசம். இவ்வப்பியாசமுள்ளவர்கள் நரம்பு முதல் தேகத்திலுள்ள ஒவ்வொரு அவயவமும் சரியான நிலைமையில இருக்கவேமாட்டாது. இதனால் இவர்கள் குடல்கெட்டு, இருதயங்கெட்டு, சுவாசகோசங்கள் கெட்டு க்ஷீணமடைவதால் இவர்களுக்கு க்ஷயரோகமே அதிகமாகக் குடிகொண்டிருக்கின்றது. இவர் உடல் கெட்டிருக்குங்கால் இவர்கள் பெண்டு பிள்ளைகளினுடைய தேக நிலைமையைச் சொல்லவேண்டுமோ.

மது உண்டால் மாமிசமும் பக்கத்திலேயே இருந்தே தீரவேண்டுமாம். மதுவைமட்டும்

உண்பது இயலாதாம். மிகுந்த காரமுள்ள பதார்த்தங்களின் துணையால்தான் மது உட்கொள்ள வேண்டுமாம் என்ன அருமை. அவ்வகைப் பதார்த்தங்களின் கேடுகளை இன்னவென்று சொல்லவொண்ணாது. என்ன கொடுமை! இவ்வித கஷ்டப்பட்டுக் குடித்து வெளி வந்துவிட்டாலோ இவர்களின் கண்காட்சிஎன்ன பெருமை! அவர்கள் வீதிகளில் தட்டுக் கெட்டு தடமாடி விழுவதையும், புறளுவதையும், பேசுவதையும் எழுதுவதற்குச் சரஸ்வதிதேவியே எழுத்துக்களையும் வார்த்தைகளையும் உலகத்தோருக்குக் கொடுக்கவில்லை.

நிற்க, இவர்களுடைய சங்கமோ சமரச சன்மார்க்க சங்கமே ஒழிய வேறு எவ்விதம் இருக்க இயலும். இங்கு நடக்கும் நடவடிக்கைகளோ அதற்குத் தகுந்தமாதிரிதான். இவைகளைப் பற்றி எழுத இடமும் சவகாசமும் இல்லாமையால் நிறுத்தலாயது.

சுகாதாரப் பகுதியில் இவைகள் வருவானேன் என்றால் சுகாதாரத்திற்கு அவைகள் நேர் விரோதிகள் ஆகையால் சமையம் வாய்ந்தபோது சிறிது எழுதாமால் விட முடியவில்லை.

இன்னும் இக்கால நவீன நாகரீகத்தால் சமரச சன்மார்க்க சபைகள் அனேகம் ஏற்பட்டு விட்டன. அவைகளின் தாரதம்மியகள் அனுபோகஸ்தருக்குள் விபரமாக ஏற்பட்டிருக்கிறது.

சுருக்கமாக இப்படிப்பட்டவர்களின் சமரசம் பாதரசந்தான் (mercury). எப்படி எனில் கிட்டநெருங்கினுல் வெட்ட வெளிச்சந்தான். இவர்களின் தன்மை பாதரசத்தின் தன்மைதான். எப்படியெனில், பாதரசத்துளிகள் பார்வைக்கு வெகு ஒற்றுமையுடன் ஒட்டிக்கொண்டிருக்கிறதே யென்று கிட்டி தொட்டுத் தொடுமுன்னரே எங்களில் வெளிமயக்கே ஒழிய ஒற்றுமை என்பது வேற்றுமைதான் என்று பளுபளுவென்று பிரிந்து விடுகின்றது. அதுபோலவேதான் இக்காலத்துச் சமரசம்.

நிற்க, சுருக்கமாக நம்மவர்களுக்குள்ளாவது பாதரச ஒற்றுமையை விட்டு, நவலோகத்தில் ஒன்ருகிய இரும்பின் தன்மையை அடைவீர்களென்ற கோரிக்கையுடன் எழுதினேன்.

எப்படி எனின் இரும்பின் சுபாவத்தைப் பாருங்கள். ஓர் இரும்பின் துண்டை எடுத்துக் கொள்வோம். அதை என்னதான், எத்தனை நேரந்தான் அடித்தாலும் வேறு பிரிகிறதில்லை அக்கினியில் போட்டு வைத்தாலும் சம்மட்டியைக்கொண்டு அடித்தாலும் கொஞ்சம் அக்கினியின் ஜுவாலையால் சிறிது நீளுகிறதே ஒழிய எங்கள் ஒற்றுமையை விடோம் என்று பிரிகிறதில்லை. உபமான உபமேயங்களை முற்றிலும் கொண்டுபோக வேண்டாம்.

அதைப்போல் நம்மினத்தவர்கள் கட்சிபேதங்களைக் கனவிலும் நனவிலும் விடுத்து ஒன்று சேர்ந்து ஒத்துழைத்து நம்மினம் முன்னேற்றமடைய விரும்புவோர்கள். மாமிசபக்ஷணம், மதுபானம், கட்சிபேதம் முதலானவைகளைக் ஒழித்து நம் சுப்பிரமண்ணியக் கடவுளின் அருள்பெற்று உய்யுமாறு வேண்டுகிறேன்.

மா. பரமகுருநாத முதலியார்,
திருமயிலாப்பூர்.

## நரம்புச் சிலந்தி.

இவ் வியாதியால் மரணம் நேரிடுவது துர்லபமானுலும் உபத்திரவத்திற்கு அளவில்லை. சாதாரணமாகக் காலில் ஒரு சிறு கொப்புளம் போல் தொடங்கி, உடைந்து, அதிலிருந்து வெள்ளையான நீர் வருகிறது. இந்நீரில் அந்த நரம்புச் சிலந்திப் புழுவின் குஞ்சுகள் ஆயிரக் கணக்காகவே இருக்கின்றன. அந்தப் புழுவை நாம் ஜாக்கிரதையாய்க் கொஞ்சம் கொஞ்சமாய் வெளியில் இழுக்க வேண்டுமே யல்லாது அது தானுகவே வெளி வாராது. அஜாக்கிரதையாய் இழுத்தால் புழு அறுபட்டு மிகவும் கஷ்டப் படுத்தும். வீக்கம், கட்டி, பூட்டு உபத்திரவங்கள் முதலியன உண்டாகி அவை நிமித்தம் கடைசியில் காலே ஊனமாகி விடும்.

இவ்வியாதி வெகு சுலபமாய் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவும். வியாதி ஆரம்பத்தில் கொப்புளம் உடைந்து புழு கொஞ்சம் வெளி வந்திருக்கும் சமயம் கஷ்டம் அதிகமாய் இராது. அப்படிப் பட்டவர்கள் வழக்கம் போல் குளங்களிலும் படிக்கிணறுகளிலும் ஸ்நானம் செய்து பாத்திரங்களில் தண்ணீர் எடுக்க இறங்குகிறுர்கள். கால்கள் தண்ணீரில் நனைந்திருக்கும் சமயம் இந்தப் புழுவிலிருந்து அதன் குஞ்சுகள் ஏராளமாய் அடங்கிய நீர் வெளிவந்து குளத்து ஜலத்துடன் கலந்துவிடுகிறது. இக்குஞ்சுகளைக் குளங்களில் இருக்கும் சிறு பூச்சிகள் உட்கொண்டு பின் அந்த ஜலத்தைக் குடிப்பவருக்கு எல்லாம் வியாதியை உண்டாக்குகின்றன.



இந்நோய் வாராமல் தடுக்கும் வழி ஒன்றுதான். நாம் உபயோகிக்கும் குளங்களையும், படிக்கிணறுகளையும், ஆபாசப் படுத்தாமல் ஜாக்கிரதையாய்ப் பாதுகாப்பது அவசியம். அவைகளை உபயோகியாமல் இருப்பது மிகவும் நலம். அவசியமாய் உபயோகத்திற்கு வேண்டியிருந்தால் அக்கிணறுகளுக்கு ராட்டினங்கள் ஏற்படுத்தி ஜனங்கள் அதில் இறங்காதபடி செய்ய வேண்டும். குளங்களுக்கு அருகில் ஒரு கிணறு வெட்டி எல்லோரும் அந்த ஜலத்தையே உபயோகப்படுத்த வேண்டும். குளத்தில் ஒருவரும் இறங்கக்கூடாது இப்படி நாம் ஜாக்கிரதையாய்க் கவனித்து வந்தால் இவ்வியாதி பரவாது.

குடிக்கும் ஜலத்தை எப்பொழுதும் ஒரு சுத்தமான துணியால் வடிகட்டியோ, கொதிக்க வைத்தோ உபயோகித்தால் புழுக்குஞ்சுகளடங்கிய பூச்சிகளை உட்கொள்ளாமல் இவ்வியாதியினின்றும் எளிதில் தப்பலாம்.

நரம்புச்சிலந்தி வந்ததும் டாக்டரிடம் தகுந்தபடி சிகிச்சை செய்துகொள்ளவேண்டும். புழுவை ஜாக்கிரதையாகச் சிறிது சிறிதாக வெளியில் இழுத்து மறுபடியும் உள்ளே போகாதபடி ஒரு சிறு குச்சியில் சுற்றி வைக்கவேண்டும். புண்ணையும் சரிவரக் கவனித்துக்கொள்ள அப்படிச் செய்தால் அதிக தொந்திரவு இல்லாமல் வியாதி எளிதில் சொஸ்தமாகும். இவ்வியாதியுள்ளவர்கள் குளங்களுக்கும் படிக்கிணறுகளுக்கும் போகவே கூடாது. சுகாதார இலாகா.

## இளைஞர் பக்கம்

### உலகின் அதிசயங்கள்.

#### பிரமிட்.

எகிப்து தேசத்திலுள்ள பிரமிட் கட்டடங்கள் உலகத்திலுள்ள எல்லா கட்டடங்களைக் காட்டிலும் வெகு பெரியவை. அவற்றுள் பெரும் பிரமிட் தான் மிக உன்னதமானதும், பிரமாண்டமானதும், இணையற்றதுமாகும். உண்மையாகவே மனிதரால் சிருஷ்டிக்கப்பட்ட கட்டடங்களில் அவற்றிற்கு நேராக எதையும் கூறமுடியாது. அவை நாலாயிர வருடங்களுக்கு முன்னரே எகிப்திய சிற்பிகளாலும், கொல்லு வேலைக்காரர்களாலும் நிருமாணிக்கப்பட்டவை. இன்னும் அவற்றை எகிப்து தேசத்தில் கிஷா (Gizah) என்னுமிடத்தில் காணலாம்.

பிரமிட் ஒரு நூதனமான கட்டிடம். அதைப் போன்ற கட்டிடத்தை நாம் காணுவதில்லை. அதன் அமைப்புப் புதுமையானது. சதுரமான பூமியின் பரப்பில் அதன் சுவர்கள் எழுப்பப் பட்டிருக்கின்றன. நான்கு சுவர்களும், நான்கு முக்கோண வடிவத்திலிருக்கின்றன. கீழ்புறத்தில் அகலமாயும் மேலே செல்லச் செலலக் குறுகி நுனியில் கூர்மையாகவும் முடிகின்றன. இம்மாதிரி அடியில் சதுரமாயும் மேலே கூர்னுனியாகவும் முடியும் அமைப்புள்ளவற்றைப் பிரமிட் என்று கூறுவார்கள். பள்ளிக்கூடங்களில் கண்ணுடிகளில் செய்யப்பட்ட சிறு பிரமிட்டுகளை மாணவர்களுக்குக் காட்டுவதற்கு வைத்திருப்பார்கள். எகிப்திய பிரமிட்கள் அந்தக் கண்ணுடிப் பிரமிட்டைப்போல் கோடிக்கணக்கான மடங்கு பெரியவை. பெரும் பிரமிட்டின் சுற்றளவு 430,000 அடிகள் எனக் கணக்கிட்டிருக்கின்றுர்கள்.

தணிகைலிங்கம்—அண்ணு! அதை யார் கட்டினுர்கள்? திருச்செங்கோட்டு மலையைப் போலிருக்குமா?

நான்—தம்பி, நீயும் நானும் பிறப்பதற்கு முன், அநேக ஆயிர வருஷங்களுக்கு முன் எகிப்து தேசத்து பேரோ (Pharaoh) அரசன் கட்டினுன். அந்தக் காலத்திலிருந்த சரித்திரம் எழுதின ஒருவர் (Herodotus) இந்தக் கட்டடத்தைக் கட்டி முடிக்க 2 லக்ஷம் வேலைக்காரர்களிருந்தார்கள என்றும், 20வருஷ காலம் ஆயிறு என்றும் தெரிவிக்கிறுர். தம்பி, அது திருச்செங்கோட்டு மலையைவிட வெகு பெரிது. இதைக் கட்டி முடிக்க எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்கள என்று நினைக்கின்றுய்? எப்போது பார்த்தாலும் பங்குனி

12981 ... 600 00

சித்திரை மாதங்களின் வெயில் உக்கிரமும், தற்போதைப் போன்ற யந்திர வசதிகளின்மையும் வேலைக்காரர்களுக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுத்திருக்கும். வெகு தூரத்திற்கப்பாலுள்ள அமெரிக்கா, ஐரோப்பா முதலிய தேசங்களிலெல்லாம் மனிதர்களுக்கு தேக சிரமத்தைக் குறைப்பதற்கு அநேகம் யந்திரங்களைக் கண்டு பிடித்திருக்கின்றார்கள். பெரிய பளுவான பொருள்களை இடம் மாற்றவும், கொண்டு செல்லவும் யந்திரங்களையே உபயோகிக்கின்றனர். பெரிய வீடுகள் கட்டுவதற்கு வேண்டிய பாரமான பீம்ஸ், கல், கர்டர் முதலியவற்றைக் கிரேன், புல்லி முதலான யந்திரங்களைக் கொண்டு தான் நகர்த்துகிறார்கள். பிரமிட்டுகள் கட்டின காலத்தில் இவை யொன்றுமில்லை.

தணிகை—அண்ணா எப்படி அந்த பிரமிட்டைக் கட்டினார்கள் ?

நான்—மலைகளிலிருந்து கரும் பாராங்கற்களை உடைத்துக் கொண்டு வந்து சேர்த்துக் கட்டினார்கள். அந்தக் கற்கள் மிக உறுதியானவை. அநேக மைல் தூரத்திற்கப்பால் நைல் நதி தீரத்திலிருந்து கொண்டு வரப்பட்டன. இந்தக் கற்கள் வெகு பெரியவை. அவற்றைத் தூக்கிக்கொண்டு வர யாரால் முடியும் ? இந்தக் கஷ்டத்தைக் குறைப்பதற்கு அவர்கள் ஒரு தந்திரம் செய்தார்கள். ஆங்காங்குள்ள மரங்களை வெட்டிக் கற்களைச் சுற்றிலும் நன்றாகக் கட்டி நதி பிரவாகித்து வரும்போது வெள்ளத்தில் உருட்டி விட்டு விடுவார்கள். மிதந்து செல்லும் அவைகளைப் பிரமிட்டிருக்கும் பக்கத்தில் செல்லும்போது பிடித்துக்கொள்ளுவார்கள். அந்தக் கற்களை அடிமை வேலைக்காரர் பலர் ஒன்று கூடித் தாம்புக் கயிறுகள் கொண்டு கட்டி இழுத்துச் சென்று பிரமிட்டிற்குச் சேர்ப்பார்கள். அங்கே மனிதர்கள் கொஞ்சமும் தளர்வுறாது வேலை செய்வார்கள். பொதுவாக அடிமைகள் தான் அதிகமாக வேலை செய்பவர்கள்.

கொடுமையான மேஸ்திரிகள் பலர் இருந்தனர். அவர்கள் தங்களிடம் வேலை செய்வோர்களை, வெயிலில் வேலையின் சிரமத்தால் தயங்கின போதெல்லாம் குதிரைச் சவுக்கைக் கொண்டும், கொரடாக்கொண்டும் பளீர் பளீரென்று அடித்துத் துன்புறுத்துவார்கள். எத்தனை பேர்கள் கொடுமைகளைப் பொறுக்கமாட்டாமல் உயிர் துறந்தனரோ ?

தணிகை :—ஐயோ பாவம் ! அண்ணா ! அவ்வளவு கஷ்டப்பட்டுக்கொண்டு அந்தக் கட்டடத்தை எதற்காக அவர்கள் கட்டினார்கள் ? யாரோ ஒரு இராஜா கட்டினதாகச் சொன்னீர்களல்லவா ?

நான்—பிரமிட்டுகள் எகிப்து அரசர்களான பேரோ (Pharaoh)க்களுடைய சமாதிகள். பெரும் பிரமிட்டை நிருமாணித்த பேரோவின் பெயர் சீயப்ஸ் (cheops). பல அரசர்கள் பல சமாதிகளை, பிரமிட்டுகளைக் கட்டினார்கள்.

தணிகை :—அண்ணா ! சமாதி என்றால் என்ன?

நான்—“ தணிகா ! மனுஷர்கள் இறந்தவுடன் அவர்கள் தேகத்தைப் புதைக்கவாவது சுட்டெரிக்கவாவது செய்கிறார்கள். சில சமயங்களில் ஒரு கட்டிடம் கட்டி இறந்தவர்களுடைய தேகத்தை அதனுள் அடக்கம் செய்கிறார்கள். மாண்டவர்களுடைய தேகத்தை அடக்கம் செய்ய நிருமாணிக்கும்கட்டடத்திற்குச் சமாதி என்று சொல்லுவார்கள். சாதாரணமாகச் சமாதிகள் சிறு கட்டிடங்களாக இருக்கும். ஆனால் எகிப்திய அரசர்கள் தாங்கள் இறந்தவுடன் தங்கள் தேகங்களைப் பத்திரப்படுத்தி வைக்கும்படி பெரிய பெரிய பிரமிட்டுகளைச் சமாதிகளாகக் கட்டிவைத்தார்கள். அவ்வாறு சமாதி கட்டுவதில் அவர்களுக்கு அதிக ஆர்வம் உண்டு. ஒவ்வொரு அரசனும் பட்டத்திற்கு வந்தவுடன் தனக்கு ஒரு சமாதி கட்டிக்கொள்ளுவதை முதல் காரியமாகச் செய்வான். எல்லாப் பிரமிட்டுகளும் அமைப்பில் ஒரே மாதிரியானவை.

அரசனுடைய தேகத்தையும், அவனுடைய ஆயுதங்களையும், உடைகளையும் ஆபரணங்களையும் அரண்மனையில் அரசனால பெரிதும் விரும்பப்பட்ட, பொருள்களையும் பிரமிட்டின் கல்லறையில் பத்திரபபடுத்தி வைப்பார்கள். இந்தக் கல்லறை, பிரமிட்டின் அடிப்பாகத்தில் பூமிக்குள் கட்டப்பட்டிருக்கின்றது. அரசன் உயிருடன் இருக்கும்போது உபயோகித்த பல வஸ்துக்களையும் அங்கே காணலாம். செத்துப்போன மனிதர் மறுபடியும் உயிர்பெற்றுத் தாங்கள் உபயோகித்தபொருள்களை விரும்பிக் கேட்பார்கள் என்ற நம்பிக்கை அக்காலத்



திய எகிப்தியர்களிடம் அதிகம் உண்டு. அவர்கள் அதனால்தான் இறந்தவர்களுடைய தேகங்களை வெகு ஜாக்கிரதையாகவும் அன்புடனும் பாதுகாத்து வந்தார்கள். அரசர்களுடைய பிரேதங்கள் அந்தம் பிரமிட்டின் கல்லறையில் பத்திரமாக வைக்கப்பட்டிருந்தன.

கல்லறையைச் சுற்றிலும் நாலா பக்கங்களிலும் நீண்ட பாதைகள் இருக்கின்றன. அவை பல அறைகளுக்கு வழி காட்டுகின்றன. ஒவ்வொரு பிரமிட்டின் பக்கத்திலும் கோவிலுண்டு. இந்தக் கோவிலுக்கு இறந்தவர்களுக்கென்று பல பொருள்களைக் கொண்டுவந்து பூஜை செய்வார்கள். பிரமிட்டைச் சுற்றிலும் பல சமாதிகளிருக்கின்றன. அச் சமாதிகளில் அந்தந்த அரசர் காலத்தில் சிறந்து விளங்கிய மனிதர்கள் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இச் சமாதிகளிலிருந்து அந்தக் காலத்திய எகிப்தியர்களுடைய நாகரிகத்தையும், பழக்க வழக்கங்களையும் தெரிந்து கொள்ளுகிறோம்.

பிரமிட்டைப் பார்த்தவுடனே நமது மனதில் ஆச்சரியமும் பண்டைய எகிப்தியருடைய திறமையை மெச்சிக்கொள்ளும் எழுச்சியுமே தோன்றும். உலகத்திலுள்ள கட்டடங்களில் பிரமிட் உயர்ந்ததும், பிரமாண்டமானதும், இணையற்றதும் என்பது வெகு உண்மையே.

தணிகை:—அண்ணா ! இந்தக் கட்டிடத்தை நாம் போய்ப் பார்க்கலாமா ?

நான்—தம்பி அதைக்காட்டிலும் இன்னும் ஆச்சரியமான பல காட்சிகள் உண்டு. அவற்றைப் பற்றி மறுமுறை சொல்லுகிறேன்.

(தொடரும்.)

E. V. S.

## நாவல் பகுதி

### ஞானசேகரன்

அல்லது

### அன்பும் அறிவும்

காலை சுமார் 6 மணியிருக்கும். இளஞாயிறும் ஒளியுடன் பிரகாசித்து நின்று தனது கிரணங்களால் அனைவரையும் தத்தமக்கேற்பட்ட வேலைகளைக் கவனிக்குமாறு துயிலினின்றும் எழுப்பிற்று. சற்று முன்னதாகவே எழுந்து காலைக் கடன்களை முடித்த சிலர் வைகறைத் துயிலெழுந்து வேலைகளைச் சரிவரச் செய்வதனு லேற்படும் பெரும்பயனை விளக்கும் தேகத்துடனும், காலதாமதமாய்த் துயிலெழுவோர்பார்த்து மனத்தளர்வு கொள்ளத்தக்க சுருப்புடனும் நடமாடிக்கொண்டிருந்தனர். வட்டமான பசும்புற்றரையும், சுற்றிலுமிருந்த நறுமலர்ச் செடிகளும், விசித்திரமாக அமைக்கப்பட்ட நீரூற்றுக்களைக்கொண்ட சிறிய செய்குன்றுகளும், இவை யாவின் மீதும் நிலவும் சூரியயோதய ஒளியும் ஒருங்கு சேர இயற்கையின் இணையி லழகை எடுத்துக்காட்டும் பூஞ்சோலையைத் தன்னெதிரே பெற்றதால் தான் அடைந்த பெரும் பாக்கியத்தை யுன்னி மகிழ்ந்தான் போன்று கண்ணிய தோற்றத்துடன் விளங்கிய “ஞானபவன”த்தின் வலது பக்கத்திலிருந்த அறை யொன்றிலிருந்துவரும் தெளிவான வார்த்தைகள் அவ்வில்லத்தைக் கடப்பவர் காதுகளைக் கவர்ந்தன.

சுமார் அரைமணி நேரமாயிற்று. அவ்வழகிய அகத்திற்குரியார் மேற்கூறிய அறையினுள் ஆச்சரியமும் ஆவலும் விளங்கும் முகத்துடன் நுழைந்தார். சுந்தரமூர்த்தி முதலியார் மிகுந்த ஊக்கத்துடன் பாடங்களைப் படித்துக்கொண்டிருக்கும் தமது மகனை அளவிலா ஆனந்தத்துடன் கண்டார். ‘ஞானசேகரா !’ என்றார். சிறுவனும் தலை தூக்கித் தனது தந்தையைப் பார்த்தான். ‘இதுதான் சரி,’ என்றார். பின்பு முதலியார் தமது மகன் பக்கலில் அமர்ந்தார்; அவனைப் படிக்கச் சொன்னார். ஞானசேகரனது வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையும் அவனது தந்தையின் செவிகளுக்கு அமிழ்தமாயிருந்தது. சில நிமஷங்

களுக்குப் பின் சுந்தரமூர்த்தி முதலியார் தமது சட்டைப் பையிலிருந்து ஓரணு எடுத்துத் தன் மகனிடம் கொடுத்து "இனும் இரட்டையாயிற்று. நான் சொல்லியதை மறக்காதே" எனக் கூறிவிட்டுச் சென்றார்.

*　　*　　*　　*

சுந்தரமூர்த்தி முதலியார் பருதிபாளயம் என்னும் ஊரார். அனைவருடைய அன்புக்கும் பாத்திரராய்க் கண்ணியத்துடனும் ஒழுக்கத்துடனும் இல்லறம் நடத்தும் ஒரு செங்குந்த ஜவுளி வியாபாரி; அன்பும் தயாளமுமிருந்தவர்; கல்வியின் மேன்மை யுணர்ந்து அதில் பற்று மிகக் கொண்டவர். முதலியார் தமது மகனைக் கல்வியில் நன்கு தேர்ந்தவனாக்க வேண்டுமெனப் பெரிதும் அவாவினார். அதனால் ஞானசேகரனது கல்வியில் ஆழ்ந்த சிரத்தை காட்டினார். ஞானசேகரன் சுமார் 9 வயதுடைய சிறுவன்; தனது தந்தையினது இரத்தத்தோடு அவர் தம் தயாளம் முதலிய போற்றற்குரிய குணங்களையும் பெற்றவன். அவன் தினமும் எவருக்கு என்ன பரோபகாரம் செய்யலாம் என எண்ணிப் பல அரிய நன்மைகளைப் புரிந்துவந்தான். அதிகமாக அவன் உதவிய நாட்களில் அவனது முகம் அதிகமான வனப்புடனும் திருப்தியுடனும் விளங்கும். தெருக்களில் திக்கற்றுக் கஷ்டப்படும் நாய் பூனை முதலிய வாயில்லாப் பிராணிகளுக்காகப் பரிந்து பாடுபடுவது அவன் சுபாவம். இத்தகைய பரோபகாரச் செயல்களிலேயே அவன் தனக்கு அவ்வப்போது கிடைக்கும் சொற்பச் சில்லரையைச் செலவு செய்துவந்தான். இவற்றிற் காலங்கழிக்க வேண்டியிருந்ததால் அவன் தன்பாடங்களுக்காக நேரத்தைச் செலவிடுவது இயலாததாயிற்று. ஆயினும் வகுப்பில் மிகவும் ஊக்கத்தோடு பாடங்களைக் கவனிப்பான். பரீக்ஷைகளிலும் நல்ல மார்க்குகள் பெறுவான். பரோபகாரம், ஜீவகாருண்யம் முதலியவற்றைச் சார்ந்த விஷயங்களை அதிகமாக விரும்பியதுடன் அத்தகைய பாடங்களில் முதன்மை பெறுவான். அவன் படிப்படியாகத் தேறி, நான்காம் வகுப்பில் வாசித்து வந்தான். மகனது கல்வியில் கவலைகொண்ட சுந்தரமூர்த்தி முதலியார் அவன் தினமும் வீட்டில் பாடங்களைச் சரியாகப் படியாததற்காக வருந்தினார். மகனிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ஆயினும் ஞானசேகரன் 9 வயது சிறுவனேயன்றோ? தயாள சிந்தை மிகுந்த அவன் தனது அன்பைக்காட்டிப் பிறருக்குதவி புரியும் செயல்களில் செலவிடும் நேரத்தைச் சுருக்கிக் கொள்வதென்றால் எளிதிலாவதோ?

தந்தையின் கவலையும் மகனது செயல்களும் இவ்வாறிருக்க, ஒருநாள் ஞானசேகரன் அண்டை வீட்டுச் சுப்பிரமணிய முதலியாரிடம் விளையாட்டாகப் பேசிக்கொண்டிருந்தான். இயற்கையிலேயே அன்புடைய சிறுவனாகையால் அவனிடத்து எவரும் வேடிக்கையாகப் பேசுவர். ஞானசேகரனுக்கும் சுப்பிரமணிய முதலியாருக்கும் கீழ்க்கண்டபடி சம்பாஷணை நடந்தது:

சுப் :—ஞானு, இன்றைக்கு எத்தனை நாய்? எத்தனை பூனை?

ஞா :—போங்களையா; உங்களுக்கு வேடிக்கையாக இருக்கிறதா?

சுப் :—இல்லை; இன்றைக்கு என்ன செய்தாய்?

ஞா :—பாபம், ஒரு நாய் சப்பை பிசகி நடப்பதற்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது அதை வீட்டுக் கிட்டுவந்து, அதன் காலுக்குக் கொஞ்சம் நீர் வார்த்துத் தடவிக் கொடுத்துப் பின்பு எலும்பு சற்றுப் பிசகியிருக்குமிடத்தில் சாத்துணி சுற்றிவிட்டேன். இன்னொருகோரம்: ஒரு சிறிய பூனைக்குட்டி—மிகவும் சிறியது. அது பரிதாபமாகக் கத்திக்கொண்டு குளிரால் நடுங்கிக்கிடந்தது. அதைச் சுற்றிக் காகங்கள் உட்கார்ந்து கத்திக்கொண்டிருந்தன. இன்னும் சற்றுநேரம் அப்படியே இருந்தால் அது போவஸ்தைதான் பட்டிருக்கும். அதை எடுத்துவந்து அப்பாவுக்குத் தெரியாமல் எங்கள் தோட்டத்தில் வேலைக்காரன் வீட்டில் ஒளித்து வைத்திருக்கிறேன். அதற்குக் கொஞ்சம் பால் வாங்கி ஊற்றினேன். இப்பொழுது சுகமாகவிருக்கிறது.

சுப் :—ஆமாம் இவ்வளவெல்லாம் செய்கிறாயே, நான் ஒன்று கேட்கிறேன் தருகிறாயா?

ஞா :—என்னால் கூடுமானால்.

சுப் :—எனக்குத் தெரிந்த பையனொருவனிருக்கிறான். அவன் மிகவும் புத்திசாலி; எல்லோருக்கும் பலவிதமான நன்மைகளைச் செய்கிறான். ஆனால் அவனுக்குப் பணம்தான் அதிகமாக இல்லை. பணமிருந்தால் இன்னும் பெரிய காரியங்களை யெல்லாம் செய்வான். அதற்காக அவன் பலரிடம் பணங் கேட்கிறான்.



ஞா :—ஐயா அவன் யார்? எனக்கு அவனைக் காண்பிக்கிறீர்களா?

சுப் :—அவன் நமது செங்குந்த குலத்தவன்.

ஞா :—அப்படியா? ஏன் செங்குந்தரெல்லாம் அவனுக்கு உதவி செய்யக்கூடாது?

சுப் :—சிலர் செய்கிறார்கள்; சிலருக்கு அவனைப் பற்றியே தெரியாது; இன்னுஞ் சிலருக்குத் தெரிந்தாலும் அவர்கள் உதவிசெய்ய முன் வருவதில்லை அவன் ஒவ்வொருவரிடமும் கொஞ்சம் பணந்தான் கேட்கிறான்.

ஞா :—ஐயா, எவ்வளவு?

சுப் :—நீ தருவாயா?

ஞா :—சொல்லுங்களேன்; பார்க்கலாம்.

சுப் :—வருஷத்திற்கு ஒன்றரை ரூபாய்.

ஞா :—அவ்வளவுதானு?

சுப் :—அதிகம் கொடுத்தாலும் வாங்கிக் கொள்வான்.

ஞா :—அப்பாவைக் கேட்டுப் பார்க்கிறேன்.

பின்பு ஆவலோடு ஞானசேகரன் தன் வீட்டுக்கு ஓடினான். அன்று மாலை சுந்தரமூர்த்தி முதலியாரும் வீட்டுக்கு வந்தார். அவர் சந்தோஷத்தோடிருக்கும் சமயம் பார்த்து ஞானன் மெதுவாக அவரையணுகி, விநயமாக 'அப்பா' என்று ஆரம்பித்தான். தந்தையும் ஊக்கத்தோடு கவனித்தார். 'அப்பா, ஒன்றரை ரூபாய் தருகிறீரா? நமது குலத்தில் ஒரு சிறுவன் இருக்கிறானும். அவன் மிகவும் புத்திசாலியாம்; பலருக்குப் பல நன்மைகள் செய்கிறானும். அவனுக்குப் பணந்தானில்லையாம். நமது குலத்தவர்களிற் பலர் அவனுக்குப் பண உதவி புரிகிறார்களாம். அப்பா தருவீரா?' என்றான் சுந்தரமூர்த்தி முதலியாரும் 'நான் சொல்லுகிறபடி செய்தால் தருகிறேன்,' என்றார். மகனும் 'சரி' அப்படியே செய்கிறேன்,' என்றான். தந்தை 'தினமும் உன் பாடத்தைச் சரியாகப் படிக்கவேண்டும். இன்னும் இரண்டு நாட்களில் ஒன்றரை ரூபாய் தருகிறேன். நாய்க்குட்டி, பூனைக்குட்டி இவைகளோடு விளையாடிக் கொண்டே இருக்கக்கூடாது. தினமும் அரையணு தருகிறேன்,' என்றார். ஞானன் சற்று மயங்கினான். 'அப்பா, அவைகளெல்லாம் பரிதாபமாகக் கஷ்டப்படுகின்றனவே. கொஞ்சங்கூட அவைகளுக்கு உதவி செய்யக்கூடாதா?' என்றான். தந்தை 'உன் பாடங்களைப் படித்துவிட்டுச் செய்,' என்றார். உடனே ஞானனது முகமும் சூரியனைக் கண்ட தாமரையென மலர்ந்தது. 'சரிதான் அப்பா,' என்று சந்தோஷமாகக் கூறிவிட்டுக் குதித்துக்கொண்டே ஓடினான்.

அன்றிரவு தூங்கும்போதும் அதே கவனமாகத் தூங்கினான். மறுநாள் காலை சூரியோதயத்திற்கு முன் எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, தேகாப்பியாசம் செய்து விட்டுக் கடவுளைத் தொழுது பாடங்களைப் படிக்க உட்கார்ந்தான்; மிகுந்த ஊக்கத்தோடு படித்தான். இடையில் அவனது தந்தையார் வந்து அவன் ஊக்கத்தோடு வாசிப்பதை மனமகிழ்ச்சி பொங்கக்கண்டார். அவர் அவனுக்குத் தினமும் கொடுப்பதாக வாக்களித்த அரையணு ஓரணுவாயிற்று. ஞானனும் ஓரணுவைப் பெற்றுச் சந்தோஷத்துடன் அதை எப்படி உபயோகிக்கலாமென்று யோசித்தான். ஓரணுவில் அரையணுவை மிருகங்களுக்காகவும் அரையணுவைத் தான் கேள்விப்பட்ட தங்குலச் சிறுவனுக்காகவும் செலவிடத் தீர்மானித்தான். மைந்தன் கல்வியில் காட்டிய ஊக்கத்தைக்கண்டு மகிழ்ச்சி கொண்ட தந்தையும் அன்று மாலையே அவனுக்கு ஒன்றரை ரூபாய் கொடுத்துவிட்டார்.

ஞானன் ஆனந்தத்தோடு அந்த ரூபாயை எடுத்துக்கொண்டு சுப்பிரமணிய முதலியாரிடம் ஓடினான். 'ஐயா, இந்தாரும், இந்த ரூபாயை நீர் சொன்ன சிறுவனுக்குக்கொடும்" என்று கொடுத்துவிட்டு 'அவன் பெயரென்ன?' என்று கேட்டான். சுப்பிரமணிய முதலியார் 'சற்றுப்பொறு. அவனே நேரில் உன்னிடம் வருவான். மாதம் ஒரு முறை வருவான்,' என்றார். ஞானன் 'அப்படியா, நல்லதுதான். நான் தினம் அரையணுவாக அவனுக்காகச் சேர்த்து வைக்கிறேன். அதையும் அவனிடம் கொடுத்து விடலா'மென்றான். அவர் 'சரி, சேர்த்துவை,' என்றார்.

தாம் ஞானனிடமிருந்து வாங்கிய ஒன்றரை ரூபாயைச் சுப்பிரமணிய முதலியார் 'செங்குந்த மித்திரன்' காரியாலய மானேஜருக்கனுப்பினார். அந்த மாதம் 16-ந்தேதி 'செங்குந்த மித்திர'

னும் 'ஞானபவனம்' வந்து சேர்ந்தான். அன்று மாலை வீடுவந்த சுந்தரமூர்த்தி முதலியார் தமது மேஜை மேல் இருந்த ஒரு புத்தகத்தில் சுற்றியிருந்த காகிதத்தைப் பிரித்தார். 'ஞானன் எங்கே? ஞானன் எங்கே?' என்று அவசரமாகக் கேட்பதுபோல் 'மித்திரன்' இதழ்கள் காற்றில் பறந்தன. 'ஞா...பவ...ம்' எனத் தலைப்பிட்ட ஒரு சிறியவியாசம் முதலியார் கண்களைக் கவர்ந்தது. அதை ஆவலோடு வாசித்தார். தமது மகனுடைய அறிவை யுணர்ந்த அவரது 'உள்ளத்தில் ஒருவராலும் கரை செய்யற்கரியதொரு பேருவகைக் கடல்' பெருகிற்று. தமது மகன் வீடுவந்ததும் அவனை வாரியணைத்து முத்தமிட்டுச் 'செங்குந்த மித்திர'னை அவனுக்குக் காட்டினார். 'இவனுக்காகத்தான் நீ ஒன்றரை ரூபாய் கொடுத்தாய். இதில் எவ்வளவு அரிய விஷயங்களிருக்கின்றன பார். நீ நல்ல பிள்ளை; இதிலுள்ளதை யெல்லாம் வாசித்தால் இன்னும் அறிவுள்ளவனாவாய், கடவுளும் உனக்கு நல்லறிவும் திடமான தேகமும் நீடித்த ஆயுளும் பரோபகார சிந்தையும் தந்தருளி உன்னை ஆசிர்வதிப்பார்' எனக்கூறி வாழ்த்தினார். ஞானன் ஆனந்தப் பரவசனாய் "அப்பா நீங்கள் தினம் கொடுக்கும் ஓரணாவில் அரையணா மிருகங்களுக்காகப் போக மீதியான அரையணாவை நமது 'செங்குந்த மித்திர'னுக்காகச் சேர்த்து வைக்கிறேன்" என்றான். தந்தையும் "அப்படியே செய். அதோடு இன்னும் கொஞ்சம் ரூபாயும் சேர்த்தால் நாம் இந்த 'மித்திர'னுக்கு ஆதரவளிக்கும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்துக்கு அனுப்பலாம்," எனக்கூறினார். பின்பு ஞானன் சுப்பிரமணிய முதலியாரிடம் சென்று 'மித்திரன்' தன்னிடம் வந்ததைக்கூறி மகிழ்ந்தான். தன் தந்தைக்கும் அவர் செய்த நன்றியைப்பற்றிக் கூறினான்.

ஞானன் சிரத்தையோடு படிக்க ஆரம்பித்தான்; தன் மகன் பாடங்களைப் படிக்கவில்லையே என்று சுந்தரமூர்த்தி முதலியார் கொண்டிருந்த கவலை யொழிந்தது; 'மித்திர'னும் சங்கமும் போதாதவாளிகளைக் கண்டதென சுந்தரமூர்த்தி முதலியார் தலைச்சங்கத்துக்கெழுதி அதைப் பற்றிய விவரங்களையறிந்து தம் மகனுக்கும் அவற்றைக் கூறியதுடன் சுப்பிரமணிய முதலியாரிடம் நன்றியும் நட்பும் காட்டினார். ஞானனது பரோபகாரகுணம் பெருகிவளர்ந்தது. 'மித்திரனுக்காகப் பணமும் அவனிடம் சேர்ந்து வந்தது.

இத்தகைய சிறுவனது அறிவையும், ஊக்கத்தையும், அன்பும் பரோபகாரமும் நிறைந்த அருங்குணத்தையும், குலாபிமானத்தையும் எவரே புகழார்? இப்படிப்பட்ட சிறுவர்கள் ஒவ்வொரு குலத்திலும் அருமையாகத் தோன்றுகிறார்கள். அவர்களால் பல குலங்கள் உன்னத நிலையடைகின்றன. இஃதிவ்வாறாக சில பெரியோர்கள்—பெயரில் மாத்திரம் பெரியோர்கள்—எவர் எவ்வளவு சொன்னாலும் செவிடன் காதில் ஊதிய சங்காகக்கொண்டு வீணே உறக்கங்கொள்ளுகின்றனர். சிறுவன் தினமும் ஓரணாவைப் பரோபகாரத்தில் செலவிட பல ஆட்கள் நமது அரிய 'மித்திர'னுக்காகத் தினம் தம்படி கொடுக்கக் (வருடம் ஒன்றரை ரூபாய் தினம் தம்படிக்கும் குறைவாகவே ஆகிறது) கஷ்டப்படுவதைப் பார்க்க என்மனம் வருத்தத்திலாழ்கிறது. இனியேனும் அத்தகையோர் ஞானசேகரனிடமிருந்து அரிய பாடங் கற்றுக்கொண்டு பரோபகாரத்திலீடுபட்டுத் தாம் செய்யும் நன்மைகளில் நமது 'மித்திர'னுக்கும் ஒரு சிறு பங்கேனும் தருவார்களென பூரணமாக நம்புவதுடன் அத்தகையோர்க்கு உண்மையில் பேரருள் புரியும் புண்ணிய சொரூபியாம் பன்னிருகையனை மேலும் நல்லறிவும் நற்பொருளும் தந்தருளுமாறு இறைஞ்சி நிற்கின்றேன்.

ஜெ. தங்கவேலு.

## அன்பர்கட்கு

சந்தா, கல்விநிதிச் சீட்டுத்தொகை யாதியன மணியார்டரில் அனுப்புவோர் மணியார்டர் கூபனில் ஒன்றுமே எழுதாமல் அனுப்பிவிடுகின்றனர். அத்தகைய மணியாடர்களின் தொகை அவர்கள் கணக்கில் வரவு வைக்கமுடியாமல் அமானத்தில் வைக்க நேர்கிறது. ஆதலின், இனி மணியார்டர் அனுப்புவோர் தொகையையும், தங்கள் பெயர் விலாசத்தையும் கூபனில் தெளிவாய் எழுதுமாறு வேண்டுகின்றோம்.



# பொது விஷயங்கள்

## இந்தியாவும் இளைஞரும்.

சாது வாஸ்வானி ஆங்கிலத்தில் எழுதியுள்ள அறிவுரைகளின் மொழிபெயர்ப்பு கீழே தரப்பட்டிருக்கிறது. இதனை ஒவ்வொரு இளைஞனும் ஊன்றிப் பலமுறை வாசிக்குமாறு வேண்டுகினறோம். இவை நமக்குள் ஊக்கமும் உற்சாகமும் ஊட்டவல்லன; விழிப்புத் தருவன. தனலமே பேணும் பேய்த் தனமையை மாற்றவல்லன. பொதுநலப் பணியில் ஆசை யூட்டுவன. நம்மை சுதந்தரத்திற் குழைக்கும் சுத்த வீரர்களாக்கும் தகையன. மாணவர்கள் இதனை மனதில் இருத்தி விடுமுறை நாட்களை வீண்போக்காமல கிராமங்களிற் சென்று கிளர்ச்சி செய்தால் எவ்வளவு விரைவில் நமது இயக்கக் கொள்கைகள் எங்கும் பரவி பூரண வெற்றி தருமென்பதைக் கூறவேண்டுமோ?—ப-ர்,

### மொழி பெயர்ப்பு.

இந்தியா தேசம் அடிமை யுற்றிருப்பதற்குப் பலா பல காரணங்கள கூறுகின்றனா.

"இந்தியா மிகப் பழையது" என்று ஒருவன் கூறுகிறான். சீன தேசமோ தனது நாலாயிர வருஷ நாகரீகத்தைப்பற்றிப் பெருமை பேசிக் கொளகிறது. ஆனால், அது இப்போது அடிமை நாடல்லவே.

இந்தியாவில் பல மொழிகள், கணக்கற்ற ஜாதிகள், எண்ணிறந்த மதங்கள் உள்ளன' என்று, இன்னும் ஒருவன் இகழ்கிறான். சுதந்தரம் தங்களுக்கே உரியது என்று சொல்லிக், கொள்ளும் ஐரோப்பிய நாடுகளிலும் இக்குறை இல்லாமற் போகவில்லை.

பின், எதுதான உண்மையான காரணம்? தேசபக்திதான இந்நாட்டில் மிகக் குறைவு. தற்போதுதான் ஏதோ சிறிதளவு ஆங்காங்கு இருப்பதாகத் தெரிகிறது. அதுவுங்கூட எழுதிலும் பேச்சிலுந்தான்; காரியத்தில் காணவே காணோம்.

நாம் சுதந்தரத்தைத் தேடிச் சென்றாலும், சுதந்தரம் நம்மை நாடி வந்தாலும் நாம் உழைப்பது உழைத்துத்தான் ஆகவேண்டும். ஆனால், யார் பூனைக்கு மணி கட்டுவது?

நான் இளைஞர்களையே நம்புகிறேன். அவர்கள்தான் இவற்றைச் செய்ய ஏற்றவர்கள். அக்கடமையும் அவர்களுடையதே. இந்திய இளைஞர்கள் திறமையற்றவர்களல்ல. வேண்டுவதெல்லாம் அவர்களுள் விழிப்புத்தான். ஊக்கமுள்ள, திறமை வாய்ந்த வாலிபர் கூட்டமொன்று முன் வரவேண்டும். வாலிபர்களுடைய உற்சாகம் எவராலும், எவ்வகையாலும், எப்பொழுதும் தடுக்கப்படாதது; அழிக்கப்படாதது. தாய்நாட்டின் விடுதலையில வெறி கொண்ட வாலிபர்கள் செயலுக்கும் தடையொன்றுண்டோ?

இந்தியாவின் பண்டை நாகரீகம் என்ன, கிராமங்களில் என்னென்ன திருத்தங்கள் செய்ய வேண்டும் என்பவற்றை முதலில் நன்கு தெரிந்து கொள்ளல் அவசியம். அதனை நன்குணர்ந்த வாலிபர்கள் கிராமங்களுக்குச் சென்று சேவை செய்ய வேண்டியதுதான் இப்போது நமது நாட்டில் நடக்கவேண்டிய ஒரு முக்கியமான காரியமாகும்.

வாலிபச் சகோதரர்களே! இந்தியாவின் வருங்கால வாழ்க்கை உங்கள் கையில்தான் இருக்கிறது. உங்கள் நாட்டின் பண்டை நாகரீகத்தை மறந்துவிடாதீர்கள்.

நமக்கு விமோசனம் ஏற்படவேண்டு மென்ற எண்ணம உண்மையில் உங்களுக்கிருக்குமாயின், நமக்குள் இருக்கும் மானங்கெட்ட பல கொள்கைகளை ஒழிக்கப் போராடுங்கள். "அவன் எக்கேடு கெட்டால் எனக்கென்ன" என்ற பழிக்கத்தக்க, இழிவான மனப்பான்மை நம்மை முற்றும் விட்டகலவேண்டும். இனி, இந்தச் செத்த வாழ்வு வாழ்வதைப் பொத்தென்று போட்டுவிட்டுச் சுத்தவீரர்களாக வெளிக்கிளம்புவீர்! ஒவ்வொரு தேசத்தின் முன்னேற்றத்திற்கும் அத்தேச வாலிபர்கள்தான் காரணம். இச்சமயம் ஆசியா கண்டத்தில் முன் அணியில் நிற்பது ஜப்பான். அது அந்நிலைக்கு வரப் பாடுபட்டவர்கள் அங்குள்ள வாலிபர்களதான். மேல் நாட்டாரிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை சில உள. தத்துவ

சாஸ்திரம், சுகாதாரம், அமைப்புத்திறமை (Power of Organisation) இம் மூன்றையும் நாம் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். அதன்படியே ஜப்பான் தேசத்து வாலிபர்கள் ஐரோப்பா சென்று இவற்றைக் கற்றுவந்து தங்கள் நாட்டுமக்களுக்குச் சேவை செய்தனர்.

பிறகு சீனதேசத்தை எடுத்துக் கொள்ளுங்கள் இப்பொழுது அங்கு விழிப்பேற்பட்டிருக்கிறது. இவ்விழிப்பிற்குக் காரணம் அங்குள்ள வாலிபர்களே. வாலிபர்கள் கூட்டங் கூட்டமாகக் கிராமங்களுக்குப் போய் அங்குள்ள ஜனங்களைத் தட்டி எழுப்புகிறார்கள். இப்போது அத்தேசத்தாருக்குக் கல்வியில் ஒரு பெரிய ஆசை உண்டாகி விட்டது அங்கு அதிகமான பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன. கிராமாந்திரங்களில் வாசகசாலைகளும், ஏழைப் பிள்ளைகட்கு இராப்பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்தப் படுகின்றன. தேகத்திற்கு வலிவு தரத் தக்க விளையாட்டு விளையாடுகிறார்கள். சீனத்தில் இருந்த சமூகக் கொடுமைகளைப் போக்கி அத் தேசத்தை வளரச் செய்தவர்கள் வாலிபர்கள். ஆனால் அவர்கள் பேச்சினாலும் எழுத்தினாலும் செய்யவில்லை. ஒவ்வொன்றையும் காரியத்திற் செய்து காட்டினார்கள். இந்திய வாலிபர்களே!

உங்கள் தாய் நாட்டின் உண்மைச் சரித்திரத்தை நன்குணர்ந்து கடனாற்றுங்கள்.

"பித்தன்"

# நமது மடங்கள்

## இராமேஸ்வரத்தில் செங்குந்த மடத்தின் குடிக்கூலி அக்ரிமெண்டு.

1916௵ ஜுன்௴ 16௳ இராமேசுவரம் செங்குந்த முதலிமார்கள் பொதுமடத்திற்கு மானேஜரான திருநெல்வேலி ஜில்லா தென்காசி தாலூகா கஸ்பா சொக்கர் தெருவிலிருக்கும் பழனி முதலியார் அவர்கள் குமாரர் செங்குந்தர் வியாபாரம் குத்தாலிங்க முதலியாரவர்களுக்கு ராமநாதபுரம் ஜில்லா இராமேசுவரத்திலிருக்கும் வீரபத்திர ஓதுவாரவர்கள் குமாரர் சைவ வெள்ளாழர் ஓதுவார் ஜீவனம் ராமநாத ஓதுவார் எழுதிக்கொடுத்த அக்ரிமெண்டு தங்கள் வகையறு செங்குந்த முதலியார்கள் பூராவுக்கும் பொதுவாய்ப் பாத்தியமானதும் தங்கள் மானேஜ்மெண்டுக்குள்ளானதுமான இதனடியிற் கண்டமடத்தில் தாங்கள் நிகுதி செய்திருக்கிறபடி திருகாண வகையறுக்களை நடத்தி வருவதற்காகவும் ஷை மடத்தில் திருவிளக்குப் போட்டு வருகிறதற்காகவும் ௴ 1-க்கு சம்பளம் ரூ. 2—8—0 வீதம் வருஷம் 6-க்கு பேசி நானும் ஒப்புக்கொண் டிருப்பதால் அதின்படி ஷை சம்பளத்தை மாதாமாதம் தங்களிடமிருந்தாவது அல்லது தங்களுக்காக இவ்விடம் திருப்பணி யேஜண்டு ம-ள-ள-ஸ்ரீ ராமசுவாமி செட்டியார்களிடமிருந்தாவது வாங்கிக்கொண்டு வேலைகளை தாழ்வு தாமதமன்னியில் நடத்தி வருவேனாகவும், சொத்து விபரம் ராமநாதபுரம் டிஸ்டிரிக்ட் இராமேசுவரம் சப்ரிஜிஸ்டரிலாகா கஸ்பா இராமேசுவரம் தெற்கு ரத வீதி தென்சாரில் ஷை வீதிக்குத் தெற்கு வெங்கிடராமய்யர் வீட்டிற்கும் கொல்லைக்கும் மேற்கு சமுத்திர கரைக்கு வடக்கு மு. நம்பி நாராயணப் பிள்ளை வீட்டிற்கும் கொல்லைக்கும் கிழக்கு இதற்குள்பட்ட கிழ்மேல் ஜாதிஅடி 32¾ தென் வடல் ஜாதி அடி 155 அளவுள்ள நிலமும் அதில் கட்டியிருக்கிற கூரைகட்டு கோப்பு கட்டடமும் கொல்லையில் கல்கட்டு கிணர் 1. அடங்கிய வடக்கு பார்த்த மடமும் கொல்லையில் தென்னைபலன்தூர் 1-ம் பல விருக்ஷங்களும் சொத்துவிபரம் சரி.

(Sd.) வீ. ர. ராமநாத ஓதுவார்.

சாக்ஷிகள்.

திருப்பணி யேஜண்டு ராமஸ்வாமி செட்டி, ராமேஸ்வரம்; கோட்டாறு சுப்பிரமணிய முதலியார் புத்திரர் மாணிக்க முதலியார்; சங்கரலிங்க முதலியார், க. மாணிக்க முதலியார் குமாரர், தென்காசி; கோட்டாறு சுப்பிரமணியன் குமாரர் சிவணைஞ்ச பெருமாள் முதலியார்; வேதமூர்த்தி முதலியார் குத்தாலிங்க முதலியாரவர்கள் குமாரர் தென்காசி; முன்னடி முதலியார் சங்கரலிங்க முதலியார் குமாரர் கல்லிடைகுரிச்சி.

இது பெழுதினது R. வெங்கிடராமய்யர் சு. ராமநாதய்யர் புத்திரன் இராமேசுவரம்.



## பழனி செங்குந்தர் மடம்.

மிகவும் பெயர் பெற்ற புண்ணிய ஸ்தலமென்று புகழப்பட்டு வரும் பழனியில், சமீப காலத்தில், சில செங்குந்த குலாபிமானிகளின் நன்முயற்சியாலும் பொருளுதவியாலும், மலையடிவாரத்தில், ஒரு மடம் செங்குந்தர்களுக்கென்றே கட்டப்பட்டு, சுமார் முடிவு பெற்றும் அது கொஞ்சகாலம் மூடப்பட்டிருந்ததின் உண்மையான காரணம் தெரியவில்லை. மடத்தில் சுமார் ஏழு அறைகள் இருப்பதாகவும், அதில் இரண்டு, கடை வைத்துக்கொள்ள குடிக்கூலிக்கு விட்டிருப்பதாகவும், ஒன்று மடத்தின் பாதுகாப்பிற்காக, ஒரு குடும்பம் வசிக்க விட்டிருப்பதாகவும் தெரிகிறது. இங்ஙனம் மூன்று அறைகள் போக மீதியுள்ள நாலு ரூம்கள் தான் நம் குலத்தவர்களாகிய யாத்திரை வாசிகளின் உபயோகத்திற்கு விடப்படுகிறது. ஆனதினால், மாதாமாதம் கிருத்திகைக்கும், திருவிழாக் காலங்களிலும், குடும்ப சகிதம் பெருந் தொகையினராகச் செல்லும் நம்மவர்கள், நமது மடத்தில், போதிய இடவசதி யில்லாததினால், வேறு மடங்களுக்குச் சென்று கஷ்டப்படுகிறார்கள். இது மடத்தின் நோக்கத்திற்கே நேர் விரோதமானதன்றோ?

இன்னும், மடத்தின் மேல்பார்வையானது இப்போது யாரிடமிருக்கிறதென்றே தெரியவில்லை. அது ஒருவரிடமிருப்பதென்பது வாஸ்தவமானால், இக்காலத்திற்கேற்றதல்லவென்றே சொல்லலாம். இதற்காக ஒரு கமிட்டியை நியமிப்பது மிகவும் நலம். ஆடிமாதம் வெளிவந்துள்ள 'செங்குந்தமித்திரனில்' தாங்கள்குறிப்பிட்டபடி, எல்லா ஜில்லாக்களிலும் பிரசாரம் செய்யவரும் கனவான்களுடைய உதவியால், கமிட்டியை நியமிக்கலாமென்று நம்புகிறேன், அவர்களையும் இதற்குவேண்டிய உதவி செய்யும்படிக்கு மிகவும் வணக்கத்துடன் கேட்டுக் கொள்கிறேன். கமிட்டி நியமித்தால்தான் மடத்தின் வரவு செலவுகளை ஒழுங்காகப் பார்க்கவும், கட்டடவேலையை முடிவு செய்யவும், இதர காரியங்களுக்கும் பேருதவியாயிருக்கும். பத்திராதிபர் அவர்களும், இதற்கு வேண்டிய உதவி செய்வாரென்று நம்புகிறேன்.

சு. சோ.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்

**கல்வி நிதிக்கு**

முதன்முதலாக பூவ்ஸ்திதி வழங்க முன்வந்த

பேருபகாரி யார்?

சத்தியமங்கலம் சிகிச்சாஞான பண்டிதர்

**திரு. ப. அங்கப்ப முதலியாரவர்களே யாவர்!**

ஏனைய குலாபிமானிகளும் அவர்களைப் பின்பற்றி

பெரும்புகழ் நாட்டுவாராக.

## நமது கடிதங்கள்

**செங்குந்த ஜோதி விருக்ஷம்.**

சீரிய செங்குந்தகுல தீபங்களாகிய சண்முக சுந்தரத்தண்ணலும் சபாபதி வள்ளலும் ஊன்றிய நமது தலைச்சங்கமெனும் விதையிலிருந்து, "செங்குந்த மித்திரன்" தளிராகவே பூத்து, நங்குலாபிமானச் செல்வர்களின் பொருளுதவியாலும் ஆதரவாலும் எருவிட்டு நீர்ப்பாய்ச்சி வளர்க்கப்பட்டு, சண்முகசுந்தரனாரின் கைம்மாறு கருதாப் பெருமுயற்சியால், தென்னாடெங்கனும் பரவி, நம் சமூகம் மென்மேலும் முன்னேறவேண்டுமென்ற விருப்பம் விரவில் பொங்கும் கொங்குநாட்டு செங்குந்த சகோதர சகோதரிகளின் குன்றா ஊக்கத்தால் ஈரோடுமாநகரின்கண் பூத்துப் பிஞ்சாகி, முத்தையா முதல்வரீருக மேனைய தலைவர்களின் மாண்புமிக்க பேருரைகளால் அருங்கனிகளாயதை ஆண்டுவந்து குழுமிய புள்ளினமாம் நம்மனோர் உண்டு என்றும் பெற்றிராத பேரின்பவாரிதியில் மூழ்கித் திளைத்தோமன்றோ!

செங்குந்த பெரியீர்காள்! தாய்மார்காள்! நம்மை உறக்கத்தினின்றும் விழிப்புநிலை யெய்துவித்த தலைச்சங்கமும், நமது மித்திரனும், ஓங்கி வளர்வதற்கு ஒவ்வொரு கிராமங்களிலும் கிளைச்சங்கங்களை ஸ்தாபித்து குலமுன்னேற்றத்துக்கான வழிகளில் ஒத்துழையுங்கள். சடங்குகளில் நன்கொடை அளியுங்கள். ஏழைமாணவர்களை கல்வியில் வல்லவர்களாகச் செய்ய வேர்ப்பொருட்பணங்களை உதவுங்கள். ஒட்டக்கூத்தர், இரட்டையர், படிக்காசுப்புலவர் எங்குலத்தவரென்று பெருமை பேசுவதை விடுத்து, அவர்களைப்போல் கல்வியால் பிரசித்திபெற முயலுங்கள், ஆண் குழந்தைகளுக்கு கட்டாயமாகக் கல்வி கற்பிக்கவேண்டுமென எண்ணுவதுபோல, பெண்மகவுகளுக்கும் கல்வியை அளிக்க முன் வாருங்கள். ஒவ்வொரு பெண்ணையும் சரஸ்வதி ஔவையெனத் திகழச்செய்யுங்கள். நம் செங்குந்த மித்திரனை உங்கள் குடும்பத்தில் பிறந்த குழந்தையாக நினைத்து அவனை வூட்டி வளர்க்க மாதம் அரைக்கால் ரூபாய் கொடுத்துதவுங்கள். இந்நன்றியை அவன் என்றும் மறக்கமாட்டான். விளையும் பயிர் முளையிலே தெரியுமென்பதுபோல், நமது மித்திரன் பிறந்தவுடன், தானாகவே நம்மை வீடுகள்தோறும் தேடி வந்து, அவனுடைய முகவசீகரத்தால் நம்மை சந்தோஷப்படுத்தி, மதலைச் சொற்களால் சீர்திருத்தி பல பிரிவாக இருந்த நமக்குள் ஒற்றுமையும் சகோதர உரிமையும் உண்டாக்கி, ஒரு புதிய உற்சாகத்தையும் ஊக்கத்தையும் தந்து, இரண்டு வயது பாலகனாய் இருக்கும்பொழுதே, நமது மாபெருந் தலைவர்களையெல்லாம் மகாநாட்டின் மூலம் ஒருவர்க்கொருவர் நேரில் கண்டு அளவளாவிமகிழச் செய்து, பல்லோரும் நம்மை ஓர் உயர்ந்த சமூகத்தாரெனக் கொண்டாடும்படி நமக்கு அரிய தொண்டு செய்துவரும் நங்குலப்பாலனை ஆதரிக்கவேண்டுவது ஒவ்வொரு செங்குந்தர்களின் கடமை அல்லவா? செங்குந்தப் பிரமுகர்களும் கிளைச்சங்கங்களும் ஆயுள் சந்தாவாகச் சேர்ந்து முன்னிலும் பன்மடங்கதிக அழகுடன் வெளிவருதலவும்படி ஆதரியுங்கள்.

நங்குல முன்னேற்றத்துக்குத் தடையாயுள்ள பற்பல கக்ஷிப்பிரிவுகளைப் போக்கி, ஒற்றுமையுடன் வாழ முயலவேண்டும். இரத்தக்கலப்புள்ள யிடத்திலே சம்பந்தம் செய்யவேண்டுமெனவெண்ணும் மூடவழக்கத்தை அறவேயொழித்து, மணமக்கள் சம்மதம் பெற்றகாதல் மணங்கள் நடத்துவித்தல் வேண்டும். விவாகங்கள், அர்த்தமற்ற வீண்சடங்குகளின்றியும் சிக்கனமாகவும், நிகழ்த்தல் வேண்டும். கடவுள் பேரால் வீணில் காசைச் செலவழிக்காமல் அன்பே சிவம் என்று திருமூலர் சொல்லியிருப்பதை உணர்ந்து, கணக்கற்ற ஏழைமக்களைக் காப்பாற்றுதல் வேண்டும். குலமுன்னேற்றத்திற்கு அதி முக்கியமாயுள்ள கைத்தொழிலில் புதிய ஆராய்ச்சியால் சீர்திருத்தம் செய்தல் வேண்டும். ஆடைகள் உற்பத்தி செய்யும்நாம் அன்னியநாட்டு உடைகளை யொழித்து, கதரணிதல் வேண்டும். பொங்கற்புதுநாள் கழிந்தவுடன் குலாபிமானம் பொங்கத் ததும்பும் காஞ்சி மகாநாட்டுக்கு, எம் சகோதர சகோதரிகளனைவரும் விஜயம் செய்து செங்குந்த ஜோதி விருக்ஷத்தின இரண்டாவது வருட பலனாகிய மகாநாட்டுத் தீர்மானங்களை உண்டு ஜீரணப்படுத்தி அதன்படியொழுகி முன்னேற்றமடைதல் வேண்டும். சோதி விருக்ஷம் வாழுக.

செங்குந்த ஊழியன் "செய்கோன்"



## ஆன்றோர் அமுதமொழிகள்

"அஹிம்சை அஞ்சாமையின் உச்சியில் நிலவுவது. ஹிம்சையில் தேர்ச்சி பெற்றவர்கட்கு அஹிம்சையின் விழுப்பத்தை எளிதில் அறிவுறுத்தி நிறுவிக்காட்ட என்றால் இயலும். பல்லாண்டு யான் கோழையாயிருந்தபோது மூர்க்க நெறியைக் கடைப்பிடித்திருந்தேன். எனது கோழமையை உதிர்க்கத் தொடங்கிய போதே, அஹிம்சையையும் போற்றி மதிக்கத் துவங்கினேன்"

"யான் ஞான குருவைக் காண முயன்று வரும் போது யான் எப்படிப் பிறர்க்குக் குரு ஆவேன்"

மகாத்மா காந்தி.

இளைஞர்கள் தர்மத்தில் பற்றுள்ளங்கொண்டவர்களாயிருக்கவேண்டும். அவர்களே தர்மத்தைக் கைவிட்டுவிட்டால் வேறு யாரே அதனை அநுசரிக்கக் கூடியவர். தூய்மையான எண்ணங்களை எண்ண இளைஞர்கள் பழகவேண்டும்.

* * *

இளைஞர்கள் முதலில் தங்களுடைய அகசத்துருக்களை, தேகத்துக்குள்ளுறையும் பேய்களை வெல்ல முயலவேண்டும்.

மேற்படியார்.

* * *

உலகத்திலேயே மற்ற இடங்களைக் காட்டிலும் நீதிமன்றங்களிலேயே, கடவுள் பெயரால் அதிக பொய்கள் கூறப்படுகின்றன. பேய்கள் வாசஞ்செய்யுங் குகைகள் என்று கோர்ட்டுகளை ஒதுக்கிநன்றுங்கள்.

சர்தார் வல்லபாய் படேல்.

* * *

அரசாங்கத்தார் மற்றொரு குகையைத் தேடிவைத்துள்ளனர். நிலவரிவிதிக்கும் முறை நமது தேகபலத்தை ஒடுக்கிவிட்டது. கலால் முறை நமது ஒழுக்கத்தைக் கெடுத்துவிட்டது. கள்ளுக்கடைகளாகிய குகைகளைக் கண்டால் பல மைல் தூரத்தில் விலகி நில்லுங்கள்.

மேற்படியார்.

* * *

பிறர் விஷயத்தில் தலையிடுவதில்லை எனக்கூறுவோரே, பெரும்பாலும், தங்களுக்குச் சம்பந்தப் படாத விஷயங்களில் தலையிடுகிறார்கள்.

டி. ஜி. டார்லிங்டன்.

தற்போதுள்ள செல்வந்தர்களின் குழந்தைகள் எதற்கும் பயனற்றவர்களா யிருக்கின்றனர். பரம்பரைச் சொத்தின் உரிமை உண்டு என்ற எண்ணத்தை இவர்களிடமிருந்து அறுத்துவிட்டுக் கல்வி கற்கவேண்டுமென்ற ஆவலை உண்டாக்கிவிட்டால் அதிக நன்மைகள் உண்டாகும்.

மகாத்மா காந்தி.

* * *

பல நாட்களாக அநுசரிக்கப்பட்டுவரும் தீமைகளை ஒழிக்க வேண்டுவது படித்த ஸ்திரீகளின் கடமையாகும். மேற்படியார்.

மௌனம் ஞானமாக விளங்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. பொதுஜன சேவையில் ஈடுபட்ட ஒவ்வொரு மனிதனும் பழிக்கப்படினும், கொடுமையான தண்டனை பெறினும் சில சமயங்களில் மௌனஞ் சாதிக்க வேண்டி வரும். ஆனால், அவசியமான காலங்களில் தம் உயிர் போவதாயிருப்பினும் தம்மனதிலுள்ளதை வெளிப்படுத்தவேண்டுவது அவனுடைய கடமையாகும். மேற்படியார்.

* * *

ஸ்ரீமதி சரோஜனி தேவி:—ஏழைகளைச் செல்வர்கள் வருத்தும் வரை, வலிமையுள்ள தேசம், வலிமையில்லாத தேசத்தை வாட்டும் வரை, ஆளும் தேசத்தார் ஆளப்படும் தேசத்தாரைச் சுரண்டிக்கொண்டிருக்கும் வரை உலகத்தில் சமாதானம் ஏற்படாது.

* * *

பி. டி. விம்பிள்டன்:—நட்பு என்பது எப்பொழுதும் கவனிக்கப்பட வேண்டியதொரு தோட்டம். அன்பு என்ற விதையை அவ்வப்பொழுது நீ விதைத்து விட்டதனால் மட்டும் பயனில்லை. அதற்கு அடிக்கடி தண்ணீர் ஊற்றி வரவேண்டும்.

* * *

டி. என். கேட்ஷெட்:—நேற்று ஆடம்பரமாகக் கருதப்பட்ட பொருள்கள் இன்று இன்றியமையாதனவாகக் கருதப்பட்டால் வாழ்க்கையில் அதிக செலவு ஏற்படுவதில் ஆச்சரியமில்லை.

* * *

ஓர் அறிஞர்:—தாழ்ந்த பள்ளங்களிலேயே தண்ணீர் தங்கி நிற்கும். தாழ்மையுள்ளவர்களிடத்திலேயே ஆண்டவன் தண்ணருள் தங்கி நிற்கும்.

* * *

ஓர் அறிஞர்:—உனது வாய் எப்பொழுதும் மூடியிருக்கட்டும்; உனது செவிகள் எப்பொழுதும் திறந்திருக்கட்டும்; பேசும்பொழுது உபந்யாசம் புரியாதே. சில வார்த்தைகளையே பேசு. ஆனால் எத்தனைபேர் எவ்வளவு கூறினாலும் எல்லாவற்றையும் செவிமடுத்துக் கேள்.

* * *

# விநோத உலகம்

### திருமண விநோதம்.

தேகத்தி என்னும் இடத்திற்கு அரை மைல் தூரத்தில் பிக்கட்டி என்னும் கிராமத்தில் படகர் என ஒரு மலை ஜாதியினர் வசிக்கின்றனர். இவர்களுள் கல்யாண சம்பந்தமாக ஒரு விநோத வழக்கம் இருந்து வருகிறது. ஒரு பெண் பருவமடைந்ததும் ஓர் ஆடவனுக்குத் திருமண நிச்சயம் செய்து அவனுடன் பெண்ணை அனுப்பிவிடுவார்கள். பின்னர், அப்பெண் கர்ப்பவதியான பிறகே திருமணம் நடைபெறும். குறித்த காலத்தில் கருத்தரிக்காவிட்டால் பெண்ணை அவளுடைய பெற்றோர் தமதில்லம் அழைத்துச் செல்வர். இந்த முறையில் ஆணும் பெண்ணும் எத்தனை முறை வேண்டுமானாலும் விவாகம் செய்துகொள்ளலாமென்று அந்த ஜாதியினர்க்குள் ஒரு சட்டம் இருக்கிறதாம்.

* * *

### மயிரிழையால் ஓட்டப்படும் இஞ்சின்

லண்டனில் சமீபத்தில் நடைபெற்ற ஒருபொருட்காட்சியில் கால் அங்குல நீளமுள்ள ஓர் இஞ்சின் வைக்கப்பட்டிருந்தது. காற்று வேகத்தில் இது வேலை செய்கிறது. இதனைக் கண்டுபிடித்தவருடைய மனைவியின் தலைமயிர் ஒன்று இந்த இஞ்சினை ஓட்டும் பெல்டாக உபயோகப்படுகிறதாம்.

* * *

### நாரையும் நாயுமே தெய்வங்கள்.

வங்காள மாகாணத்தில் பர்த்தான் ஜில்லாவின் மேற்குப் பாகத்தில் பாவ்ரிகள் என்ற புராதன ஜாதியார் வசிக்கின்றனர். இவர்கள் பேசும் பாஷை வங்காளி பாஷையை ஒத்திருக்கின்றது. குதிரையினிடம் இவர்கட்கு விருப்பம் உண்டாவதில்லை. எனவே, குதிரை லாயங்களைச் சுத்தப்படுத்த அடியோடு மறுத்து விடுவார்கள். இவர்கள் விவசாயிகளாகவும் பல்லக்குத் தூக்குவோராகவும் உபயோகிக்கப்படுகிறார்கள். இவர்கள் நாரையையும், நாயையும் தெய்வமாக வணங்குகின்றனர். நாய் உயிருடன் இருக்கும்போது எஜமான விஸ்வாசமுள்ளதாயிருப்பதோடு இறந்தபின் அதன் மாமிசம் உண்ணப்படாததால் அதையே தெய்வமாக வணங்க வேண்டுமென பல நூற்றாண்டுக்கு முன் அவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாம்.

பாவ்ரிகள் மற்றோரை அதிக நிபந்தனை இன்றித் தங்கள் ஜாதியில் சேர்த்துக் கொள்கின்றனர். புதிதாகத் தங்கள் ஜாதியில் சேருவார் பத்துப் பதினைந்து ரூபாய் பஞ்சாயத்துக்குக் கட்டவேண்டும். அந்த ரூபாயைக்கொண்டு நடத்தப்படும் விருந்தில் பகிரங்கமாய் பாவ்ரிகளோடு இருந்து சாப்பிடவேண்டும்.

இவர்கள் தங்கள் மனைவிமார்கள் வேறொருவருடன் வாழ்ந்துகொண்டிருப்பதைச் சிறிதும் ஆட்சேபிப்பதில்லை. இச்சமூகத்தில் ஆண்களும் பெண்களும் சுலபத்தில் விவாகரத்து செய்துகொள்ளுகிறார்கள். இந்துக்களைப்போல் பாம்பையும் தெய்வமாக வணங்குகின்றனர்.

### மெஷின் குதிரை.

யுத்தகளத்தில் குதிரைக்குப் பதிலாக உபயோகிக்கத்தக்க ஒரு மெஷின் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது இது தானே திரும்பிக்கொள்ளும்; நதியைக் கடந்து செல்லும்; மேட்டுப் பாங்கான இடங்களுக்கு ஏறிச் செல்லும். இந்த மெஷினுக்கு "கார்டன் லாயிட்" என்று பெயர். அந்த மெஷின் எதிரே நேரும் ஆபத்துக்களைத் தடுத்துக்கொண்டு செல்லும்; தன்னை மறைத்துக் கொள்ளும்; அல்லது எதிரிகளின் பீரங்கிப் பிரயோகத்தினின்றும் தப்பித்துக்கொள்ள வழி மாறிச் செல்லும். குதிரை உயரத்தில் பாதியளவே இந்த மெஷின் இருக்கிறது. இதனுடன் இயந்திர பீரங்கி ஒன்று இணைக்கப்பட்டிருக்கிறது.

* * *

ஐம்பது லட்சம் பவுன் செலவில் இங்கிலாந்தில் புதிதாகக் கட்டப்படும் பாங்கியில் பூமிக்குள் 50சுரங்கங்கள் இருக்குமாம். இவைகளின் கதவுகள் மின்சார சக்தியால் மூடவும் திறக்கவும் படும்.

* * *

### நகரும் ஊர்.

ஸ்வித்ஸர்லந்தில் ஒரு மலையடிவாரத்திலுள்ள மாண்டானன் என்ற சிற்றூர் சென்ற சிலகாலமாக நகர்ந்து கொண்டிருக்கிறதாம். உறுதியற்ற இடத்திலுள்ள அம்மலை நகர்வதால் அதனைச் சார்ந்த அச்சிற்றூரும் நகர்கிறதாம்.

* * *

### நிர்வாண வாழ்வு

சூரிய கிரணமும், தூய காற்றும் உடலிற் படுவதால் ஆரோக்கியமா யிருக்கலாமென்பது ஜர்மனியர் பலருடைய அபிப்பிராயம். எனவே, அங்கு ஒரு கூட்டத்தினர் நிர்வாணமாய் வாழ்கின்றனர். இக்கூட்டத்தைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் முப்பது லட்சம் பேர் இருக்கின்றனராம். நிர்வாணக் கூட்டத்தினர் வீதிகளில் உலவாதிருக்கச் செய்தற்கு அரசாங்கத்தார் பெருமுயற்சி செய்கின்றனர்.

* *



உலகத்திற்குள் பெரியதாகிய புத்தகசாலை பாரிஸில் இருக்கிறது. இதில் நூறுகோடி புத்தகங்கள் உள்ளன.

* * *

நானூறு மைல்தூரம் நன்றாகப் பார்க்கத்தக்க புதிய கருவியொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது

### கொலை புரியும் ஏரிகள்.

வேல்ஸ் மாகாணத்தில் ஓர் குளம் இருக்கிறது. இதனருகில் செல்வோர்க்கு தற்கொலை செய்துகொள்ளலாமென்ற எண்ணம்தானே உதிக்கின்றதாம். நார்த்தாம்டனில் ஓர் குளம் இருக்கிறது. இக்குளத்தில் வீழ்ந்திறந்தோர் இதுவரை அளவற்றவர்களாம். இக்குளத்தில் ஓர் விசேஷம் உண்டு. நல்ல வேனிற்காலத்தில் இக்குளத்தின் மற்றபாக நீர் சூடாயிருக்கும் தருணத்திலும் ஓர் புறத்தில் மட்டும் பனிக்கட்டிபோல் குளிர்ந்திருக்கிறதாம்.

பழிவாங்கும் ஏரி ஒன்றுளது. எவர்மீதேனும் பழிக்குப் பழி தீர்க்கவேண்டுமென்ற எண்ணம் யாருக்காவது இருக்குமாயின் மேற்குறித்த ஏரிக்கரையில் பிரார்த்திப்பார்களாம். உடனே இவர்கள் எண்ணம் நிறைவேற்றப்படுகிறதாம். இவைகளினருகே ஜனங்கள் செல்வதற்கே அஞ்சுகின்றனர்.

* * *

### மிருகங்களின் வயது.

உலகத்திலுள்ள உயிர்களுள் நெடுநாள் உயிர்வாழத்தக்கது திமிங்கிலமே. இது ஆயிரம் ஆண்டுகள் உயிரோடிருக்குமாம். அதற்கடுத்தது யானைகள் நானூறு ஆண்டுகளும் உயிர் வாழ்ந்துள்ளன. சிங்கம் 70 வருடங்களும், ஒட்டகம் 100 வருடங்களும் குதிரை 60 ஆண்டுகளும் ஜீவிக்கத்தக்கன. ஆயினும்! குதிரைகளின் சராசரி வயது 25-க்குமேல்30க்குள் அடங்குமாம். கரடியும், ஓநாயும் 20 ஆண்டுகளும், நரி 14 ஆண்டுகளும், அணில் 7 வருடங்களும், கழுகுகளும் அண்டங்காக்கைகளும் 100 ஆண்டுகளும் ஜீவிக்கின்றன.

பெர்லின் நகரிலுள்ள ஒபெர்த் என்னும் விஞ்ஞான சாஸ்திரியார் சந்திரமண்டலத்திற்குப் போய்ச் சேரும்படியான ஓர் இயந்திரம் செய்துகொண்டிருக்கிறார். அது முடிவுற்றதும் அதன் மூலம் சந்திரமண்டலம் செல்லலாமென்றும், யாராவது ஒருவர் வர இசைந்தால் தன்னுடன் கூட்டிச் செல்லலாமென்றும் அவர் கூறுகின்றார்.

மரத்தின்மீது ஏறக்கூடிய துவிசக்கிர வண்டியொன்றை கட் என்ற ஜெர்மானியர் கண்டுபிடித்திருக்கிறார். அவர் இச்சைகிளை உபயோகித்தே மரங்களின் மீதேறுகிறாராம்.

# வியாபாரப் பகுதி

### கூட்டுறவுச் சேமநிதியின் அவசியம்.

நமது செங்குந்த மக்கள் ஏழ்மைத்தனமாக இருப்பது அவர்கள் சோம்பேறித்தனத்தினாலல்ல. ஆனால் நெற்றி வியர்வை நிலத்தில் விழ கஷ்டப்பட்டு இரவு பகலாக வேலை செய்து, நெய்த துணிகளை சரியான விலைக்கு விற்பனைச் செய்யாததினால்தானென்று நான் திட்டமாய்ச் சொல்லுவேன். ஏன் சரியான விலைக்கு விற்பனைச் செய்ய முடியவில்லை? அவர்கள் நெய்த ரகங்கள் ஜனங்கள் விரும்பும் தினுசுகளல்ல. காலம் செல்லச்செல்ல, நாகரீகம் முதிர முதிர ஜனங்களின் விருப்பமும் மாறுகிறது. உதாரணமாக சில ஆண்டுகளுக்கு முன் நமது பெண்மக்கள் தட்டிச் சேலை விசிறி சேலை என்று சொல்லும்படியான அதிக காம்பீரமானதும், மிகவும் சாயம்போட்டது (Dark colored Sarees) ஆன சேலைகளையே விரும்பினார்கள். ஆனால் இப்பொழுதோ அதிலும் நாகரிகத்திலீடுபட்ட பெண்மக்களோ, ஓரங்களில் கரையில்லாததும், நடுவில் கோடுகளில்லாததும், மெல்லிதானதும், இலேசாக சாயம் (Light colored Sarees) தோய்க்கப்பட்டதுமான சேலைகளை விரும்புகிறார்கள். ஆகையால் நாம் இக்காலத்தில் விரும்பப்பட்ட சேலைகளை நெய்வதைவிட்டு, காலத்திற் கேற்றகோலம் (The supply must cope with the demand) என்பதை மறந்து 'எங்கள் பாட்டன் எங்களப்பன் இவர்களெல்லாம் அனுபவமாக நெய்து வந்த ரகங்கள், இவைகளை நாங்கள் கைவிடமாட்டோம்' என்று இவ்வெண்ணங்களை குரங்குப் பிடியாக பிடித்துக்கொண்டு பழைய இரகங்களையே நெய்துக்கொண்டிருந்தால் இவைகளுக்கு எங்ஙனம் விற்பனை ஏற்படும்?

இரண்டாவதாக இவர்கள் என்ன செய்கிறார்களென்றால், ஒரு மடியோ அல்லது ஒரு சேலையோ நெய்தார்களோ இல்லையோ உடனே அதனை விற்க அருகில் கடைத்தெருவுகளுள்ள ஊர்களுக்கு நடந்தோ அல்லது இரயிலிலோ புறப்பட்டுவிடுகிறார்கள். அங்கு அதை விற்க ஒரு இரவு தங்கவேண்டியதாயிருக்கிறது. அதை விற்று மறு மடியோ சேலையோ நெய்வதற்கு நூலை எடுத்துக் கொள்ளுகிறார்கள்.

வீட்டிற்கு பதார்த்தங்களோ அல்லது குழந்தைகளுக்கு தின்பண்டங்களோ வாங்கிக்கொள்ளுகிறார்கள். கடைசியில் வீட்டிற்குத் திரும்பும் பொழுது இவர்கள் நெய்த கூலியில் அரைபாகமும் கையிலிருப்பதில்லை. இந்த அரைப்பாகத்தைக்கொண்டு குடும்பத்தைப் பாதுகாக்கவேண்டும். இப்படி இவர்கள் நாளை ஓட்டிக்கொண்டு சென்றால் எக்காலத்தில் இவர்கள் நூதன நூதனமான தினுசுகளை புதிது புதிதாக வந்துள்ள தறிகளைக்கொண்டு நெய்து பெரிய பணக்காரர்களாய் நமது பாரத தேசத்தை இவ்வாங்கிலேய அடிமைத்தனத்திலின்றும் நீக்குவார்களோ !

மூன்றாவதாக நமது மக்களில் ஒரு சிலர் கஷ்டப்பட்டு நெய்து, செட்டாக செலவு செய்து நூறோ இருநூறோ சேர்த்து வைக்கிறார்கள். இதைக்கொண்டு வியாபாரத்தைப் பெருக்காமல், தங்கள் பிள்ளைகளுக்கோ, ஊரார் மதிப்பாக எண்ணிக்கொள்ள இன்னும் இருநூறோ அல்லது முன்னூறோ கடன் வாங்கி செலவு செய்து கலியாணத்தை மிகவும் ஆடம்பரமாகச் செய்கிறார்கள். ஏனோ ஊரார்களுக்குப் பயந்து இம்மாதிரி செலவு செய்ய வேண்டுமோ, தெரியவில்லை.

நான்காவதாக, அந்தோ! எழுதவும் கைகூசுகிறது. நமது மக்களில் பெரும்பாலோர் குடியர்களாயிருக்கிறார்கள். சம்பாதிப்பது நாளொன்றுக்கு பத்தணாவானால் குடிக்கு செலவு செய்வது பன்னிரண்டணாவாக விருக்கிறது.

இவைகளை யெல்லாம் ஆழ்ந்து யோசித்தால் நாம் மற்ற சமூகங்களைப்போல முன்னுக்குச் செல்லுவோமென்று எண்ணமுடியவில்லை. ஆனால் மேற்கூறிய குறைகளை நிவர்த்தி செய்வதால் நாம் ஏன் முன்னுக்கு வரக்கூடாது?

மேற்கூறிய முதல் இரண்டு குறைகளை நீக்க கூட்டுறவு சேமநிதிகள் நமது செங்குந்தர்கள் வதியும் ஒவ்வொரு கிராமங்களிலும் ஏற்படுத்தவேண்டும். நமது மக்களில் இச்சென்னை இராஜதானியில் இரண்டுலட்சத்து ஐயாயிரத்து தொளாயிரத்து முப்பத்தேழு ஆண்களிருக்கிறார்கள். இவர்களெல்லாம் ஆளுக்கு இரண்டு ரூபாய் (Share) எடுத்துக்கொள்ளட்டும். சர்க்காரில் இதைவிட எட்டுபங்கு ரூபாய் கொடுப்பார்கள். இவைகளை இச்சென்னையில் நமது தலைச்சங்கத்தின் ஆதரவின் கீழ் ஒரு ஆபீஸ் ஏற்படுத்தி அவைகளின் மூலமாக நமது செங்குந்த மக்கள் வதியும் ஒவ்வொரு கிராமங்களிலும் ஒரு சேமநிதி ஏற்படுத்தி ஒவ்வொரு தறிக்கும் வேண்டிய நூலைக் கொடுத்து கடையில் எம்மாதிரி துணிகளுக்கு கிராக்கியிருக்கிறதோ அம்மாதிரி துணிகளை உற்பத்தியாக்கச்செய்து அவைகளை அச்சேம நிதியிலேயே வாங்கி அவர்களே விற்பனைச் செய்யவேண்டும். இதனால் ஒருவன் தறி முதலுக்குப் பயப்படவேண்டியதில்லை. நெய்த துணி விற்குமோ விற்காதோ என்று கவலைப்பட வேண்டியதில்லை. இவைகளல்லாமல் கடைத்தெருவிற்கு திரேக கஷ்டப்பட்டு நடந்தோ அல்லது இரயில் செலவு செய்தோ போக வேண்டியதில்லை. அந்த அனாவசியமாக இரவுதங்க வேண்டியதில்லை. அங்கிருந்து வீட்டிற்கு வந்து கடைத்தெருவிலலைந்த அலுப்பினால் ஒரு நாளை வேலை கெடவேண்டியதில்லை. நெய்து சேமநிதியில் கொடுத்தவுடன் இவனுக்குச் சேரவேண்டிய கூலியை கொடுத்துவிடுவார்கள்.

இவைகளோடில்லாமல் இச்சேமநிதிகளின் மூலமாக இன்னும் எவ்வளவு அனுகூலங்கள் உண்டென்பதைச் சற்று கவனியுங்கள். தற்காலத்தில் நம்மவர்களிருக்கும் நிலையில் அநேகர் தறிமுதலில்லாமலேயிருக்கிறார்கள். இவர்கள் ஒரு துணி நெய்தவுடன் அதைவிற்று மறுதுணி நெய்வதற்கு நூல்வாங்க கடைக்குச் செல்லுகிறார்கள். இவர்களுடைய நிலைமை கடைக்காரனுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. ஆகையால் அவன் குறைந்தவிலைக்குக் கேட்கிறான். இவர்கள் அவன் கேட்ட விலைக்கே கொடுக்கவேண்டியவரா யிருக்கிறார்கள். ஏனென்றால் இதை விற்றல்லவோ இவர்கள் மறுதுணியை நெய்வதற்கு நூல்வாங்க வேண்டியவராயிருக்கிறார்கள். ஆனால் சேமநிதிகளிருப்பின் நெய்தவுடன் இவர்கள் அங்கு கொடுத்துவிட்டு இவர்களுக்குச் சேரவேண்டிய கூலியை பெற்றுக்கொள்ளப்போகிறார்கள். வேறு துணி நெய்வதற்கு நூல் வாங்கவேண்டும் என்ற கவலையும் ஒழிந்துவிடுகிறது. இவர்கள் நெய்து சேமநிதிகளில் கொடுத்த துணிகளுக்கோ கிராக்கியும் ஏற்பட்டு விடுகிறது. ஏனென்றால் அம்மாதிரி ரகம் அங்குதானகப்படுமல்லவோ.

இதோடல்லாமல் நமது கல்வி கற்ற வாலிபர்களும் சர்க்கார் உத்தியோகத்திற்கோ அல்லது மற்ற கம்பனியையோ எதிர்பார்க்க வேண்டிய அவசியமுமில்லை. ஏனென்றால் நமது மக்கள் வதியும் ஒவ்வொரு கிராமங்களிலும் ஒரு கிளைச்சேமநிதி ஏற்படுத்தினால் இவைகளின் வேலைகளை கவனிக்க எத்தனை ஆட்கள் வேண்டும். இவர்களெல்லோரும் நமது ஆட்களாகவே யிருக்கட்டும். வேலையில்லாமல் திண்டாடும் நமது கல்விகற்ற வாலிபர்களுக்கும் வேலை அகப்படுகிறது. நூதனமான துணிகளை நெய்வதற்கு புதிதாக கண்டு பிடிப்பதற்கு நமது வாலிபர்களை ஜெர்மனி, அமெரிக்கா முதலிய அயல் நாடுகளுக்கு அனுப்புவித்து அவர்களை இம்முறையில் பயிலச் செய்து, இங்கும் அம்மாதிரிதறிகளை உற்பத்திசெய்து நமது தொழிலையும் வியாபாரத்தையும் பெருக்குவிக்கலாம்.

கடைசியாக, வருஷாவருஷம் வரும் லாபத்தையும் ஒவ்வொரு பாகத்திற்கும் பங்கிட்டுக் கொடுத்தால், பத்து பாகம் எடுத்த ஒருவனுக்கு, ஒரு பாகத்திற்கு கால் ரூபாய் லாபம்வந்தால் பத்துபாகத்திற்கு இரண்டரை ரூபாய் முதல் வருஷம் லாபமும், இன்னும் நாளாக நாளாக, வியாபாரம் பெருக பெருக இன்னும் அதிக லாபமும் வரும்.

T. ராஜவேலு.



## விகடத் துணுக்குகள்

நண்பர்—உமது வாழ்நாளில் இன்னும் ஒரே ஒரு நாள்தானிருப்பதாக அறிந்தால் நீர் என்ன செய்வீர் ?

மற்றொருவர்—எவ்வளவு கடன் வாங்கமுடியுமோ அவ்வளவையும் வாங்கி விடுவேன்.

* * *

மனைவி—மற்றொரு உயிருக்கு அனுகூலமாகும் ஏதாவதொன்றைத் தாங்கள் இதுவரையில் செய்திருக்கிறீர்களா ?

கணவர்—உன்னைக் கலியாணம் செய்துகொண்டேன், அதுபோதாதா?

* * *

ராமன்—சித்திர மெழுதுவோர் படங்களின் கீழ்ப் பாகத்தில் ஏன் தங்கள் கையெழுத்தைப்போடுகின்றனர்.

கிருஷ்ணன்—படத்தைப் பார்ப்பவர்களுக்குத் தலைப் பக்கம் எது, அடிப்பக்கம் எது என்று தெரிவதற்காகத்தான்.

* * *

புதிய கணவன்—உன் பணத்துக்காக நான் உன்னைக் கலியாணம் செய்துகொள்ளவில்லை. பணத்தினால் சந்தோஷ முண்டாவதில்லை. உண்மையிலேயே பணமில்லா திருந்தால்தான் சந்தோஷ முண்டாகிறது.

புதிய மனைவி—ஓஹோ! அப்படியா? என் தந்தை நேற்றுத்தான் இன்ஸால்வெண்டானார். ஆதலால் நாம் இனித் தாராளமாய்ச் சந்தோஷமாயிருக்கலாம்.

* * *

சர்வகலாசாலை புரொபஸர்—(பி. ஏ., பரீட்சையில் தேறிவிட்ட தமது மாணவரைப் பார்த்து) நீர் தேறிவிட்டதைக் கண்டு மெத்த சந்தோஷம். நமது சர்வகலாசாலை மிகவும் பெயர் பெற்ற ஒன்று இதன் பெயர் பிரபஞ்சம் முழுவதும் பிரபல்யமடைந்திருக்கின்றது. ஆதலால், உமது கல்வியைக் குறித்து நீர் மிகவும் பெருமை கொள்ள வேண்டும். நான்கு வருஷங்களில் நீர் எவ்வளவு விஷயங்களைக் கற்றுக்கொண்டிருக்கிறீர் என்று சிந்தித்துப் பாரும். இனிமேல் ஒரு உத்தியோகத்தைத் தேடக்காலம் வந்துவிட்டது. இனி என்ன செய்வதாக உத்தேசம்.

மாணவர்—வேலையில்லாத சங்கத்தில் என்னையும் ஒரு அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளும்படி ஒரு மனுப் போடப்போகிறேன்.

* * *

தடபுடல் ஆசாமி—ஓய் ஐய்யரே! சூடாக ஏதாவதிருந்தால் கொண்டுவாரும், சீக்கிரம்.

ஐயர்—அப்போதுதான் சுட்ட வடை யொன்றைக் கொண்டுவந்து வைத்தான்.

தடபுடல் ஆசாமி—என்ன சாமி இது? இதைவிட சூடாக ஒன்றுமில்லையா ?

ஐயர்—ஆ! ஆகா! உண்டு என்று சொல்லி உள்ளே சென்று கொதிக்கும் எண்ணெயுடன் ஒரு கரண்டியும் கொள்ளிக்கட்டை ஒன்றையும் பிளேட்டுகளில் கொண்டுவந்து வைத்தான்.

தடபுடல் ஆசாமி—என்னடா இது? நானென்ன நெருப்புக் கோழியா ?

ஐயர்—இல்லை, இல்லை, தாங்கள் குளிர்ந்த கொள்ளி.

### பாக்கியவான்கள்.

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.

துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.

சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்திரித்துக் கொள்ளுவார்கள்.

நீதியின்மேல் பசிதாக முள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தி யடைவார்கள்.

இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

இதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இறைவனைத் தரிசிப்பார்கள்.

சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இறைவனுடைய புத்திரர் எனப் படுவார்கள்.

நீதியினிமித்தம் துன்பப் படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது.

இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலுங் கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டை பண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.

—நவசக்தி.

# செங்குந்தர் கிளர்ச்சி.

## சென்னை

### திரு. மயிலாபூர் செங்குந்த வாலிபர் சங்கம்.

### கவிச்சக்கரவர்த்தியார் விழா.

நமது கவிச்சக்கரவர்த்தியார் திருவிழா இச்சங்கத்தின் ஆதரவில் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது. ஒட்டக்கூத்தர் திருவுருவப்படம் அலங்கரிக்கப்பெற்று மங்கள வாத்தியங்களுடன் திருவீதி உற்சவம் நடைபெற்றவுடனே மாலை 5-மணிக்கு சென்னை கார்ப்பொரேஷன் பிரசிடெண்டு திரு. A. இராமசாமி முதலியார் அவர்கள் B.A., B.L., தலைமையின்கீழ் வன்னியர் சத்திரத்தில் ஒரு கூட்டம் கூடிற்று. அப்போது தலைவர் உபந்யாசகர்கள் முதலியோரது புகைப்படம் ஒன்று எடுக்கப்பட்டது. கூட்டத்திற்கு விஜயஞ்செய்திருந்தவர்களில் முக்கியமானவர்கள் திருவாளர்கள் A. இராமசாமிமுதலியார் B.A., B.L., மணி கோட்டீசுவர முதலியார் B.A., L.T., சோமசுந்தர தேசிகர், J. S. சர்பேச முதலியார்; T. S. நடராஜபிள்ளை, M. சுந்தரம் நாயுடு; சையத் சமீத், சீதாராம ஐயர்; (டிரெயினிங் ஸ்கூல் ஹெட்மாஸ்டர்,) பண்டிதர், S. S. ஆனந்தம், S. குழந்தைவேல் முதலியார், S. தருமலிங்கநாயகர், L. C. குருசாமி, M. L. C., ம. சண்முகசுந்தர முதலியார் M.A.. L.T., V. இரத்தின முதலியார், B.A., B.L., C. P. இராமன் முதலியார் B.A., B.L., E. V. சிங்காரவேல் முதலியார், B.A., M. பரமகுருநாத முதலியார், திருநெல்வேலி சண்முக முதலியார், தி. அ. சண்முக முதலியார், மா. அ. கனகசபை முதலியார், M. சரவண முதலியார் முதலியோராவர்.

திரு. J. தங்கவேலு என்னும் பி. ஏ. வகுப்பு மாணவரால் கடவுள் வணக்கமும் கூத்தர் பெருமையும் அமைத்து இதற்கெனச் செய்யப்பெற்ற இரண்டு பாக்கள் பாடப்பெற்ற பிறகு காரியதரிசியவர்களால் சென்ற வருஷத்திய உற்சவத்தின் விபரம் படிக்கப்பட்டது. பின்னர் இலக்கண விளக்கப் பரம்பரை திரு. சோமசுந்திர தேசிகர் அவர்கள் கூத்தர் சரித்திரத்தைப்பற்றி ஒரு பேருரை நிகழ்த்தினார்கள். நம் குலப்பெரியார் சரித்திர சம்பந்தமாகச்சொல்லிய பல அரிய விஷயங்களுள், கூத்தனூரில் ஒட்டக்கூத்தர் போற்றிய வரதக்கூத்தர் என்பவர் தமது பாட்டனால் ஆராதிக்கப் பெற்றுவந்த சரஸ்வதி தேவிக்காகக் கட்டிய கோயிலைப் பற்றியும், சோழராஜாக்களால் கூத்தர் பெருமானுக்குக் கொடுக்கப்பெற்ற மானியம் முதலியவற்றின் விபரங்கள் அடங்கிய அங்குள்ள கல் வெட்டைப்பற்றியும் யாவரும் உணர எடுத்துக் காட்டியதும் குலோத்துங்க சோழனுக்கு கூத்தர் பெருமான் பெண் கேட்கும்பொருட்டு மதுரைக்குச் சென்ற காலத்தில் பாண்டியன் அவையிலிருந்த புகழேந்தி பாண்டியனை உயர்த்தியும் சோழனைத் தாழ்த்தியும் கவி பாடிக் கூத்தரை அவமதித்து எதிர்த்துப் பேசினார். பின்னர் அப்புகழேந்தியார் சோழன் அவைக்கு வந்தபோது கூத்தர் அவரைச் சிறையிட்டுப் பலவகையில் துன்பப்படுத்தினார் என்பது ஒரு பொய்க்கதையேயாகும் ஏனெனில் அக்காலத்திலிருந்த பாண்டியன், சோழ மன்னர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்த அரசருள் ஒருவனாவன் என்பது சரித்திர ஆராய்ச்சியால் நன்கு விளங்குகிறது. ஆகையால் கலிங்கநாடு, பாண்டிநாடு, சேரநாடு முதலிய பல நாட்டரசர்களை அடக்கியாண்ட சோழமன்னர் சமஸ்தானத்தில் நிரம்பிய செல்வாக்குப் பெற்றிருந்த ஒட்டக்கூத்தரை அவமதித்துச் சோழனை இகழ்ந்து புகழேந்தி கூறினார் என்பது நம்பக்கூடியதன்று. கூத்தருக்கும் புகழேந்திக்கும் இருந்ததாகச் சொல்லப்படும் மனஸ்தாபம் ஒருக்காலும் நிகழ்ந்தே இராது என்று வற்புறுத்திக்கூறியதும் குறிப்பிடத் தக்கவை.

அடுத்தபடி 'சமூக சங்கங்களின் அவசியம்' என்ற விஷயத்தைப்பற்றி திரு. மணி. கோட்டீஸ்வர முதலியார் அவர்கள் B.A., B.L., பேசுகையில், இச்சங்கம் போன்ற சமூக சங்கங்களால் சிறப்பாக அவ்வச்சமூகங்களுக்கும் பொதுவாக தேசத்திற்கும் உண்டாகும் பல்வகை நன்மைகளை உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளக்கிக் காட்டினார்கள். தலைவர் அவர்கள் தமது முடிபுரையில் தாம் சென்றஇடங்களிலெல்லாம் செங்குந்தர்கள் தம்மை மிகுந்த அன்போடு வரவேற்று உபசரிக்கிறார்கள் என்றும் சமீபகாலத்தில் ஈரோட்டுச் செங்குந்தர்கள் தம்மை வரவேற்று உபசாரப் பத்திரம் ஒன்று வாசித்துக் கொடுத்ததாகவும் அதனால் தாம் எக்காலத்தும் செங்குந்தர்களை மறக்க இயலாதென்றும் சமூக சங்கங்கள் இன்றியமையாவென்பது பல வருஷங்களுக்கு முன்னமே யாவரும் ஒப்பமுடிந்த தொன்றாகையால் அவற்றின் அவசியத்தைப்பற்றி இப்போது யோசிக்கவேண்டிய அவசியமே இல்லையென்றும், எல்லாச் சமூகங்களும் வித்தியாசமின்றி சமத்துவம்பெற்று சிறந்து வாழ்வது சமூகங்கள் மூலமாகத்தான் கூடும் என்றும், தமிழரது பண்டைய நாகரீகத்தையும், இலக்கியங்களையும், தத்துவ சாஸ்திரங்களையும் பற்றி நமக்குள்ளேயே புகழ்ந்து பேசிக் கொண்டிருத்தல் போதாது அவை உலகத்திலுள்ள மேதாவிகளால் போற்றிக் கொண்டாடப்படவேண்டுமாயின் சைவசித்தாந்தம் போன்ற தத்துவ சாஸ்திரங்களையும் பிறவற்றையும் யாவரும் கற்றுணருமாறு உலகமுழுதும் பரவியுள்ள இங்கிலீஷ் பிரஞ்சு முதலிய பாஷைகளில் தாராளமாய்ப் பிரசுரம் செய்து



சொற்ப விலைக்கு விற்கவேண்டுமென்றும் பேசினார்கள். வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

### திருமயிலை செங்குந்த வாலிபர் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா.

மேற்படி சங்க ஆதரவில் 1929ஹு அக்டோபர்மீ 3உ ஞாயிற்றுக்கிழமை காலை 8½-மணிக்கு ஷை சங்க வாசகசாலையில் சங்கத்தலைவர் திருவாளர் குழந்தைவேலு முதலியார் அவைத் தலைமையில் கூடிற்று.

அவ்வமயம் திரு. மு. சுந்திரவடிவேலு முதலியார் "அபிமானம்" என்பதைப்பற்றி நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார். அதைத்தழுவி திருவாளர்கள் ச. காளத்தி முதலியார், பொ. அ. கதிர்வேலு முதலியார், ஏ. இராமசாமி முதலியார் பேசிய பின்னர் ஷை சங்க இரண்டாம் வருடபூர்த்தி அறிக்கை காரியதரிசியால் வாசிக்கப்பெற்றது. இவ்வறிக்கை முறையே ஆமோதிக்கப் பெற்று அனைவராலும் அங்கீகரிக்கப்பெற்றது.

சங்க சட்டதிட்டங்களுக்கு உபசட்டங்கள் அங்கத்தினர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன, இச்சங்கம் மருத்துவன் பத்திராசிரியருக்கு அவர்கள் நம்மேல் உள்ள அபிமானத்தால் தம் பத்திரிகையை இலவசமாக அனுப்புவதற்கு நன்றி செலுத்துவதாகவும் ஒரு தீர்மானம் நிறைவேறியபின்னர் கீழ்க்கண்ட கனவான்கள் சங்க மூன்றும் ஆண்டு நிர்வாகசபைக்கு தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

**தலைவர்**

திருவாளர் சு. குழந்தைவேலு முதலியார் அவர்கள்

**உபதலைவர்கள்**

,, கா. பாலசுப்பிரமணிய ,, ,,

,, பொ.சி. பாலசுப்பிரமணிய ,, ,,

**காரியதரிசிகள்**

,, ம. க. பாலசுந்திர ,, ,,

,, ஏ. இராமசாமி ,, ,,

**நிர்வாகசபை அங்கத்தினர்**

திரு. மு. சுந்திரவடிவேலு ,, ,,

,, ச. முனுசாமி ,, ,,

,, ம. ச. காளத்தி ,, ,,

அவைத்தலைவர் முடிவுரை கூறியதும் ஏ. தட்சணமூர்த்தி முதலியார் அவர்கள் வந்தனோபசாரம் கூறினார்கள். கூட்டம் பகல் 12-மணிக்கு இனிது கலைந்தது.

ஷை சங்க ஆதரவின்கீழ் 1919ஹு அக்டோபர்மீ 19உ சனிவாரம் மாலை 6-மணிக்கு ஷை சங்கவாசகசாலையில் திருவாளர் M. B. கந்தசாமி முதலியார் அவர்கள் B.A., B.E., அவைத்தலைமையில் திருவாளர் E.V. சிங்காரவேலு முதலியார் அவர்கள் B.A "சங்கம்" என்னும் விஷயத்தைப் பற்றி சுமார் 1 மணி நேரம் பேசினதும் திருவாளர்கள் M. கனகசபை முதலியார் அவர்கள், P.M. முனிசாமி முதலியார் அவர்கள், J. தங்கவேலு அவர்கள் மூவரும் தழுவிப்பேசிய பின்பு தலைவர் முடிவுரை கூறி இறுதியில் காரியதரிசியவர்களால் மாலை மரியாதையுடன் வந்தனமளிக்கப்பட்டு இரவு 8-மணிக்குக் கூட்டமினிது கலைந்தது.

**ம. கு. பாலசுந்திரம்.**
**ஏ. இராமசாமி,**
காரியதரிசிகள்.

ஷை சங்க ஆதரவின் கீழ் 1929 வருடம் அக்டோபர் மாதம் 26 தேதி சனிவாரம் மாலை 5-மணிக்கு ஷை சங்கவாசகசாலையில் சங்க உபதலைவர் K. பாலசுப்ரமணிய முதலியார் அவைத்தலைமையில் திருவாளர் ஏ. இராமசாமி முதலியார் (நம் சங்க காரியதரிசி) "கல்வி" என்னும் விஷயத்தைப் பற்றி சுமார் 1 மணி நேரம் பேசி முடிந்ததும் இதைத் தழுவி எட்டு நண்பர்கள் பேசினார்கள். தலைவர் முடிவுரை கூறிய பின்னர் வழக்கம் போல் வந்தன உபசாரம் அளிக்கப் பெற்று கூட்டம் இரவு 8-மணிக்கு இனிது கலைந்தது.

**ம. கு. பாலசுந்திரம்,**
காரியதரிசி.

## தென்னாற்காடு ஜில்லா

### லால்பேட்டை செங்குந்தர் ஞானப்ரகாச சங்கம்.

2-10-29ல் சங்கத்தின் இரண்டாவது கூட்டம் திரு. தொ. சி. மா. சிவக்கொழுந்த முதலியார் கட்டிடத்தில் பிற்பகல் 2-மணிக்கு திரு. உ. அ. கந்தசாமி முதலியார் தலைமையின்கீழ் கூடியது. தலைவர் கல்வி நிதிச் சீட்டை நம்மவர் ஆதரிக்க வேண்டியதின் அவசியத்தைப் பற்றி பேசியதன்பின் திரு. கு. நி. அ. நடராஜ முதலியார் திரு. தொ. சி. கந்தசாமி முதலியார், திரு. மூ. ம. ஆறுமுக முதலியார், திரு. பு. சு. அ. முருக முதலியார் இவர்களால் முறைமைய கதரை ஆதரிக்க வேண்டியதன் அவசியம், சங்கம், ஒற்றுமை ஜீவகாருண்யம் முதலிய சொற்பொழிவுகள் நிகழ்ந்ததன் பின்னர் தலைவர் முடிவுரையுடன் மாலை 6-மணிக்கு கூட்டம் இனிது நிறைவேறியது.

**உ. அ. கந்தசாமி முதலியார்**

### செங்குந்த வாலிபர் சங்கம், நாட்டார் மங்கலம்.

சுக்கிலஹு ஆவணிமீ 30உ அன்று நம் குல திலகராகிய கூத்தர் பெருமான் திரு நட்சத்திர கொண்டாட்டம் சிறப்பாய் நடந்தது. அன்று இரவு தலை

வர் ச. சு. நடராஜ முதலியார் நமது குல மேன்மை பற்றி சொற்பொழிவு ஆற்றினர். பின்னர் உபதலைவர் க. ச. மாணிக்க முதலியார் நம் குல மக்களின் கல்வி நிலை என்பதைப்பற்றி உபந்யசித்தார். பின் சந்தன தாம்பூலத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

திரு. சோசியம் ச. சு, நடராஜ முதலியார் அக்கிராசனத்தின்கீழ் உப தலைவர் மாணிக்க முதலியார் அவர்கள் கல்வியைப் பற்றியும் அமைச்சர் ஆறுமுக முதலியார், முயற்சியைப் பற்றியும் அமைச்சர் மு. வை. நமசிவாய முதலியார் கொல்லாமையைப்பற்றியும் கொ. சா. மாணிக்க முதலியார் மது விலக்கை பற்றியும் அதி விமரிசையாக உபந்யசித்தனர். பின்னர் தலைவர் சங்கம் குறைவுபாடின்றி நடக்கவேண்டியதைப்பற்றி அதி விமரிசையாய் எடுத்துக் கூறி 11-மணிக்கு சந்தன தாம்பூலத்துடன் இனிது நிறைவேறியது.

**க. அ. பிச்சாண்டி முதலியார்,**
காரியதரிசி.

## தஞ்சாவூர் ஜில்லா

### உள்ளிக்கடை செங்குந்த வாலிபர் சங்கம்.

1929ஹு செப்டம்பர்மீ 22உ பாலசுந்தர விநாயகர் கோவிலுக்குப் பக்கத்தில் உள்ள பஜனை மடத்தில் திரு. சாமிநாத முதலியாரவர்கள் தலைமையில் சங்கக் கூட்டம் கூடியது. கடவுள் வணக்கம் பாடப்பட்டதும் திரு. V. S. குமாரசாமி முதலியார் அவர்கள் பொதுவிஷயங்களைப்பற்றி உபந்யசித்து அக்கிராசனாதிபதி அவர்களுக்கு வந்தனோபசாரம் சொல்ல தாம்பூலம் வழங்கப்பட்டு இரவு 8-மணிக்கு இனிது நிறைவேறியது.

1929ஹு செப்டம்பர்மீ 29உ இவ்வூர் பாலசுந்தர விநாயகர் கோவிலுக்கு பக்கத்திலுள்ள பஜனை மடத்தில் ஷை சங்கம் கூடிறறு. காரியதரிசி சி. க. சாமிநாதமுதலியாரவர்களை அக்கிராசனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டது. திரு. M. S. சிவகுருநாத முதலியாரவர்கள் தெய்வம என்பதைப் பற்றி உபந்யாசம் புரிந்தார். அக்கிராசனாதிபதி அவர்களுக்கு திரு. வா. சி. முருகைய முதலியாரவர்களால் வந்தனோபசாரம் சொலலப்பட்டு தாம்பூலம் வழங்கப்பட்டன. ஷை சங்கம் இரவு 8-மணிக்கு இனிது நிறைவேறியது.

1929ஹு அக்டோபர்மீ 3உ அமாவாசை தினமன்று திரு. வா. சத்துவேலு முதலியாரவர்கள் இல்லத்தில் திரளான ஜனங்களுடன் பொதுக்கூட்டமொன்று கூடிற்று. தலைவர் திரு. ம. கந்தசாமி முதலியாரவர்களை அக்கிராசனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டபின் தேவார கோஷ்டிகளும் 1-மணி நேரம் நடந்தேறியது. பின் திரு. V. S. குமாரசாமி முதலியாரவர்களால் செல்வாராஜன் சொன்ன வாக்கியங்களைப் பற்றி மிகவும் உன்னிதமாய் சொற்பொழிவு நிகழ்த்தி நம் சமூகத்தவர்களுக்கு ஊக்கத்தை உண்டாக்கினர். M. S. சிவகுருநாத முதலியாரவர்களால் மதுமாம்ச விலக்கைப்பறறி சொன்மாரி பொழிந்தார். அக்கிராசனாதிபதி அவர்களுக்கு திரு. N. G. சாமிநாத முதலியாரவர்களால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டது.

ஷை சங்கப் பொதுக்கூட்டத்தில் தலைவர் முதல் நிர்வாகஸ்தர்களின் முறைபடிக்கு சுத்த சைவ சமரச சன்மார்க்கமான வாலிபர்களின் உடன்படிக்கை எழுதியதாவது, நமது சங்கக்கூட்டம் ஞாயிற்றுக்கிழமைதோறும் கூடும்போது கையொப்பமிட்டவாலிபாகள் பதின்னமூபேரும் தவறாமல் வந்து சமூக ஒற்றுமை, சமூக முன்னேற்றம், கல்வி, சமூக சீர்திருத்தம் முதலான காரியங்களை நடத்தி ஷை சங்கத்தை நிறைவேற்ற வேணுமாயும், அப்படி ஷை சங்கத்திற்கு சரிவர வந்து நடததிவாராத மெம்பர்களுக்கு ஷைசங்க உத்தியோகஸ்தர்கள் உடனே நம் சமூக கட்டுப்பாட்டின்படி மரியல் கொடுத்து மேலும் அவர்களுக்கு அபராதம் இரண்டணா கொடுத்து மரியல் மீட்டு ஷை சங்கத்தை நிறைவேற்றவேண்டியதாகப் பேசி முடிக்கப்பட்டு சந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டு இரவு 9-மணிக்கு கூட்டம் இனிது நிறைவேறியது.

நாளது சுக்கிலஹு ஆடிமீ 15உ கிருத்திகை முதல் நிர்வாகஸ்தர்களும், வாலிபர்களும் சேர்ந்து நம் ஊருக்கு 8-வது மைலிலுள்ள திருவேரகமென்னும் சுவாமி மலையிலுள்ள ஸ்ரீ முருகப்பெருமானுக்கு அபிஷேகத்திட்டமொன்று ஏற்படுத்தி மாதாமாதம் கிருத்திகை தினத்தில் நடத்தி வருகிறோம்.

நாளது சுக்லஹு ஆடிமீ 20உ-க்குச் சரியான 4-8-29-ம் தேதியில் நா. வையாபுரி முதலியாரவர்கள் வீட்டில் இராப் பாடசாலை (Night School) ஒன்று ஏற்படுத்தி நாளது வரைக்கும் பாடசாலை நடந்து வருகிறது. அப்பாடசாலையிலும் சுமார் 25 பிள்ளைகள் வரைக்கும் வாசித்துக் கொண்டு வருகிறார்கள்.

## திருச்சி ஜில்லா

### உன்னியூர் செங்குந்தர் சங்கம்.

31-10-29 உன்னியூர் செங்குந்தர் சங்கம் போர்டு பாடசாலையில் மாலை 4-மணிக்கு திரு. R. மாணிக்க முதலியாரவர்களது தலைமையில் நடைபெற்றது. சங்க வரவு செலவு கணக்கைப் பரிசோதித்து அங்கீகரிக்கப்பெற்றதும் அடியிற்கண்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

முசிரி தாலுகா போர்டு உபதலைவர் திரு. M. M. கிருஷ்ணசாமி பிள்ளை B.A., B.L., அவர்களால் 30-8-29உ நடத்தப்பெற்ற கிராம பஞ்சாயத்து எலக்ஷனில் நமது சங்க மெம்பர்களாகிய திரு. R. இராமசாமி முதலியார், திரு. கு. ஆ. ஆனந்த முதலியார். திரு. கோ. தெ. வையாபுரி முதலியார், திரு. அ. கு, சடையப்ப முதலியார் ஆகிய நால்வரையும் பஞ்சாயத் மெம்பர்களாகத் தேர்ந்தெடுத்த இவ்வூர் கிராமவாசிகளை சங்கம் பாராட்டுவதுடன் 27-9-29உ நடைபெற்ற பஞ்சாயத் பிரசிடெண்ட் எலெக்ஷனில் இச்சங்கத்தின் தலைவர் திரு. R. மாணிக்க முதலியாரவர்களின் சகோதரர் திரு. R. இராமசாமி முதலியாரவர்களை போட்டியின்றி பஞ்சாயத்து பிரசிடெண்டாக ஏகமனதாய் தேர்ந்தெடுத்தையும் சங்கம் பாராட்டுகிறது என்ற தீர்மானம் நிறைவேறிய பின் இரவு 7-மணிக்கு கூட்டம் இனிது கலைவுற்றது என காரியதரிசி எழுதுகிறார்.



## மதுரை ஜில்லா

### செங்குந்தர் இளைஞர் கழகம், மதுரை.

மேற்குறித்த கழகத்தின் மூன்றும் மாதக்கூட்டம் 3—11—29 ஞாயிறு இரவு 7 மணிக்கு கழக நிலயத்தில் கழகத்தலைவர் அக்கிராசனத்தின்கீழ் செவ்வனே நடைபெற்றது. கடவுள் வாழ்த்துக் கூறப்பட்ட பின் "மதுவிலக்கு" "மனித ஆயுளின் அளவு" "குடியேற்றநாட்டுப் பொறுப்பாட்சியும் வைசிராயின் அறிக்கையும்" இவை குறித்து முறையே திருவாளர்கள் S. V. கனகசபாபதி, M. இராமசாமி, S. மாணிக்கம் முதலானோர் உபந்யசித்தனர். பின் திரு. M. அங்குசுவாமி வந்தனோபசாரம் கூற கூட்டம் 10 மணிக்கு இனிது கலைந்தது.

**சே பி. கனகசபாபதி முதலியார்,**
7—11—29. கூட்டுக் காரியதரிசி.

## சேலம் ஜில்லா

### சேலம் முனிசிபல் தேர்தல்.

### திரு. S. P. பொன்னுசாமி முதலியார் அவர்கள் வெற்றி.

சேலம் முனிசிபல் 18-வது வார்டு (அம்மாபேட்டை) சமீபத்தில் நடைபெற்ற கவுன்சில் தேர்தலுக்கு பிரபல கனவான்கள் வேண்டுகோளுக்கிணங்கி அபேக்ஷகராக நின்ற திரு. S. P. பொன்னுசாமி முதலியார் அவர்கள் 31 அதிகப்படியான ஓட்டுகளால் வெற்றி பெற்றார். நகர சபை மண்டபத்தில் ஓட்டுகள் எண்ணி தேர்தல் முடிவைச் சொன்னதும் திரு. பொன்னுசாமி முதலியார் அவர்களுக்கு புஷ்ப மாலை சூட்டி 'ஜே' கோஷத்துடன் வெகு குதூகலமாக அம்மாபேட்டைக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்று மகா ஜனங்கள் இவ்வூர் முனிசிபல் ஆண் பாடசாலையில் கூட்டம் கூடி எதிர் கட்சியின் முக்கியஸ்தர் உள்பட சமரசமாய் ஒன்று சேர்ந்து தங்கள் தங்கள் சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொண்டனர். சந்தன தாம்பூலங் கற்கண்டு விநியோகித்த பின் கூட்டம் கலைவுற்றது. திரு. பொன்னுசாமி முதலியார் பரம்பரையாகவே செல்வாக்குள்ள நல்ல அந்தஸ்து வாய்ந்த பெரிய குடும்பத்தைச் சார்ந்தவர். இவர் அம்மாபேட்டை செங்குந்த மகாஜன சங்கத்தின் உப தலைவரும், பிரபல ஜவுளி வர்த்தகரும், பாங்கருமாவர் இதுவரை இத்தகைய தனவந்தர்கள் பொது வேலை செய்ய முன் வந்தது கிடையாது. அம்மாபேட்டை மகாஜனங்கள் வெகு ஊக்கமாய் திரு. பொன்னுசாமி முதலியாரை பொதுஜன சேவைக்கு முன் கொண்டு வந்து நிறுத்தியது மிகவும் போற்றத்தக்கது.

**S. பழனியாண்டி முதலியார்,**
காரியதரிசி.

### செங்குந்தர் சங்கம், மோகனூர்.

சுக்கிலவருஷம் புரட்டாசிமீ 21உ (6-10-29ல்) இவ்வூர் ஸ்ரீ மாசடச்சியம்மன் ஆலயத்தில் வழக்கம் போல் 12-வது கூட்டம் கூடிற்று. கூட்டத்திற்கு திருவாளர் ஓ. எஸ். செல்லாண்டி முதலியாரவர்கள் தலைமை வகித்தார்கள். பள்ளிக்கூடம் மாணவர்கள் கடவுள் வாழ்த்து கூறியபின் தலைவரவர்கள் சங்கத்தின் முன்னேற்றம் என்பதுபற்றி பேசினார்கள். உபகாரியதரிசி திரு. ச. கு. பழனியாண்டி முதலியாரவர்கள் இவ்வூரில் நம்மவர் வீடு ஐம்பதுக்குக் குறையாமல் இருந்தும் அநேகர் கூட்டத்திற்கு வாராததைப் பற்றியும் அடுத்த கூட்டத்திற்குஎல்லோரும் அவசியம் வரவேண்டும் என்பது பற்றியும் அரிய சொற்பெருக்கு நிகழ்த்தினார்கள். அதன்பின் காரியதரிசியால் முன் கூட்டத்தின் நடவடிக்கைகளும் வரவு செலவு கணக்குகளும் வாசிக்கப்பட்டு சந்தாத்தொகை வசூலித்ததும் தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் இனிது கலைவுற்றது.

## கோயமுத்தூர் ஜில்லா

### "பள்ளியபாளையம் செங்குந்தர்களின் தீவிர முயற்சி"

பள்ளியபாளையம் சன்மார்க்க செங்குந்த பாலியர் சங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவுவிழா 22-9-29 தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்கு ஷையூர் ஸ்ரீ ஒங்காளியம்மன் சன்னதி முன்பு அமைக்கப்பட்டிருந்த நவவீரர் மாளிகை என்னும் பந்தலில் பள்ளியபாளையம் ஸ்ரீமான் K. வெங்கடாஜல முதலியார் அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. அவ்வமயம் சுமார் 300 ஜனங்களுக்குமேல் கூடியிருந்தனர். ஜனங்களுக்கு மிகுந்த பூரிப்பும் உற்சாகமும் காணப்பட்டது. கூட்டத்திற்கு சங்ககிரி தாலூக்காபோர்டு மெம்பரும் எடப்பாடி மிராசுதாரரும் ஆகிய ஸ்ரீமான் V. ஆறுமுகம் செட்டியார் அவர்களும் ஷையூர் கிராம முன்சீப் & கர்ணம் அவர்களும் இன்னும் அநேக பிரபலஸ்தர்களும் விஜயம் செய்திருந்தது குறிப்பி

டத்தக்கது ஆரம்பத்தில் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் திருவருவப்படம் மேளவாத்தியத்துடன் ஊர்வலம் செய்யப்பட்டு தலைவர் அக்கிராசனர் நமர்த்தும் கடவுள் வாழ்த்து கூறப்பட்டு ஈரோடு தமிழ்ப் பண்டிதர் திரு. சிவபாதஹிருதயம் பிள்ளை அவர்கள் கந்தபுராண சருக்கமும் ஈரோடு ஸ்ரீமான் சுப்பராயலு நாயுடு அவர்கள் ஸ்ரீ ராமபிரானின் அறம் என்னும் விஷயமாகவும் சங்க காரியதரிசி ப. நஞ்சப்ப முதலியார் கல்வி என்னும் விஷயமாகவும் மிகவும் தெளிவாக உபந்யாசித்தார்கள். அதன்பின் ஷை சங்க பொக்கிஷதார் V. கன்னியப்ப முதலியார் அவர்களால் ஷை. சங்கத்தின் வரவு செலவு விளக்கப்பட்டது.

தலைவர் தனது முடிவுரையில்! மதுபானத்தால் உண்டாகும் கேடுகளை மிகுந்த உருக்கத்துடன் எடுத்துக்காட்டினார். அவ்வமயம் ஜனங்களுக்கு மிகுந்த பரபரப்பேற்பட்டிருந்ததுடன் இன்றே மதுபானத்தை ஒழித்து விடுகிறோம்; மதுவிலக்கை பூரணமாக ஆதரிக்கிறோம் என்னும் கூச்சலாகவே இருந்தது. கூச்சலை ஒருவாறு அடக்கி தலைவர் முன்னிலையில் ஷை சங்கத்தாரால் கீழ்க்கண்ட தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன.

### தீர்மானங்கள்.

(1) நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு வருஷ சட்டணம் ரூபாய் (5-0-0) ஐந்தை இம்மாதத்திலேயே செலுத்தி இச்சங்கத்தையும் கிளைச்சங்கமாக சேர்க்கவேண்டுமென்று இச்சங்கம் தீர்மானிக்கிறது.

(2) நம் குலமாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடையும்பொருட்டு நம் குலாபிமானிகளால் சென்னையில் ஏற்படுத்தியிருக்கும் கல்விநிதிக்கு நம்மால் இயன்ற பொருளுதவி செய்வதற்கும், நமது மாணவர்களுக்கு ரீடிங்ரூம் ஒன்று ஏற்படுத்துவதற்கும் நம்ம ஊர் பெரியதனம் காரியக்காரர்களை ஒரு க்ஷேமநிதி ஏற்படுத்தித் தருமாறு இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

(3) நம் மரபினர்கள் வரும்படியை முன்னிட்டு தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாமலிருப்பதற்கு வருந்துவதோடு இனியாகிலும் பிள்ளைகளை 14 வயது வரையிலாவது பாடசாலைக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறது.

(4) பிரதி அமாவாசைதோறும் இச்சங்கத்தாரால் பொது மீட்டிங் தவறாமல் கூட்டி பொது நன்மைகளுக்கும் சன்மார்க்க வழிகளுக்கும் உழைக்குமாறு இச்சங்கம் தீர்மானிக்கிறது.

(5) மதுபானத்தால் நம்மவர்களுக்கே பெரும்பாலும் நஷ்டங்களும், கஷ்டங்களும், கௌரவக்குறைவும் ஏற்படுவதால் மதுக்கடைகளை பூரணமாக மூடிவிடுமாறு கலால்மந்திரி கனம் S. முத்தையா முதலியார் அவர்களை இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

மேற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு வந்தனோபசாரம் கூறி சந்தனம் தாம்பூலம் கற்கண்டு வழங்கப்பட்டு இரவு 8-30-மணிக்கு கூட்டம் இனிது முடிவடைந்தது என்று காரியதரிசி ப. நஞ்சப்ப முதலியார் எழுதுகிறார்.

## திருநெல்வேலி ஜில்லா

### திருநெல்வேலி செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

7-10-29 இரவு 9-மணிக்கு மேல்படி சங்கத்தின் சார்பாக ஓர் பொதுக்கூட்டம் கூட்டப்பெற்றது. அத்தருணம் இச்சங்கத்தைச் செங்குந்தர் அபிவிருத்தியின் பொருட்டு நான்கு ஆண்டுகட்கு முன்னர் நிறுவிய காஞ்சிபுரம் செங்குந்த குலகுருசுவாமிகள் ஸ்ரீமத் சிவசுவாமி தேசிகர் அவர்கள் தலைமை வகித்தார்கள். பின் இந்நகர் தேவாரத்திருத்தொண்டர் குழாத்தினரால் கடவுள் வாழ்த்தும், தலைவர் அவர்களால் செங்குந்தர்களின் முற்கால நிலைபற்றிய அரிய முன்னுரையும் நிகழ்ந்தன. பிறகு செங்குந்தர் அபிவிருத்தியென்னும் பொருள் பற்றி ஸ்ரீமான்கள் V. S. சங்கர சுப்பிரமண்ய முதலியார் அவர்கள், B.A.,B.L., கணபதி முதலியார் B.A., காஞ்சிபுரம் மாணவர் கா. வச்சிரவேலு முதலியார் B.A., ஆகிய மூவர்களும் விரிவுரைகள் நிகழ்த்தினர். இவர்கள் **பெண் கல்வி சைவாசாரம் சமய உணர்ச்சி** முதலியவற்றை வற்புறுத்திக் கூறினார்கள். ஸ்ரீமான் சங்கரசுப்பிரமணிய முதலியார் B.A.,B.L, அவர்கள் தாம்வெளி நாடுகளில் சென்று பார்த்ததில் ஆசாரக் குறைவும் கல்வி இன்மையுமே பிறரால் தாழ்த்தப்படுவதற்குக் காரணமாகத் தெரிகிறதென்றும் நம் குருசுவாமிகள் ஸ்ரீமத் சிவசுவாமி தேசிகர் அவர்கள் இந்த ஜில்லாவில் பல ஊர்களில் மாமிச உணவை ஒழித்து ஆசார சீர்திருத்தம் பெற இதுகாறும் பிரசாரஞ் செய்து வந்தது போலவே இன்னும் செய்யின் விரைவில் நம் சமூகம் முன்னேற்றம் அடையுமென்றும், கலியாண முதலியவற்றில் ஆடம்பரச் செலவுகளை நிறுத்தல் வேண்டுமென்றும், இந்நகரில் பெண் பாடசாலை ஸ்தாபித்தல் வேண்டுமென்றும், அதற்கு இந்நகரில் உள்ளார் முற்படின் தாம் வேண்டுவன செய்ய முடியுமென்றும் கூறினார்கள். பிறகு தலைவரவர்கள் உபந்நியாசகர்கள் கூறியவற்றோடு உலக அறிவு வளர்தற்பொருட்டுப் பத்திரிகைகளை வருவித்து வாசித்தலும் இதுபோன்ற சங்கங்களை விருத்தி செய்தலும், ஆதரித்தலும் முதலியன வேண்டுமென்று, கூறியதோடு, சிவநேசன் என்னும் பத்திரிகையைத் தாங்கள் வாங்கி இச்சங்கத்திற்கு அனுப்புவதாயும், இவ்வாறு பல செல்வந்தர்கள் மற்றுள்ள பத்திரிகைகளை வாங்கி அனுப்பி இச்சங்கத்திற்கு உதவி புரியவேண்டுமென்றும், பெண்பாடசாலை ஒன்று. ஸ்தாபித்தற்கு வேண்டிய யேற்பாடுகள் தம் முன்னிலையில் அன்பர்களால் நிகழ்த்தப்பெற்று வருகிறதென்றும் யெடுத்துக் கூறினார்கள். அல்லாமலும் ஒழுங்கான அமைப்புக்கு உட்பட்டதாக இச்சங்கத்தை ஆக்கக்கருதிச் சில முக்கியமான தீர்மானங்களும், நிர்வாகத் தேர்வும் நடப்பித்தார்கள். அங்கு வந்த அன்பர்களில் அகமகிழ்வு யெய்தாதார் ஒருவரும் இலர் என்பது திண்ணம்.

சுபம்.

**ப. ச. முருகேச முதலியார்,**
காரியதரிசி.

### செங்குந்தர் அபிவிருத்தி சங்கம் வீரவநல்லூர்.

1105௵ ஆவணி௴ 12௳ மாலை 5-மணிக்கு இச்சங்கத்தின் 3-வது சாதாரணக் கூட்டம் திரு. சு. ஆவுடைநாயக முதலியாரவர்கள் தலைமையின்கீழ் கூடிற்று. கடவுள் ஸ்துதிபாடி தலைவர் முன்னுரையுடன் திரு. சி. ப. ஆறுமுக முதலியாரவர்கள் சிவாலய தரிசனம் என்ற விஷயமாய் நீண்டதோர் பிரசங்கம் செய்தார்கள். தலைவர் பின்னுரை முடித்து வாழ்த்துப்பாடிக் கூட்டங் கலையப்பெற்றது.

1105௵ புரட்டாசி௴ 8௳ மாலை 5-மணிக்கு இச்சங்கத்தின் 4-வது சாதாரணக்கூட்டம் திரு. ந. ஆ. சிதம்பர முதலியாரவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஸ்துதிபாடி தலைவர் முன்னுரைக்குப்பின் திரு. சி. ப. ஆறுமுக முதலியாரவர்கள் சுகாதாரத்தின் அவசியத்தைப்பற்றி எடுத்துப் பேசினார்கள் வாழ்த்துப்பாடிச் சபை இனிது கலையப்பெற்றது.

1105௵ அற்பிசி௴ 4௳ மாலை 5-மணிக்கு இச்சங்கத்தின் 5-வது கூட்டம் திரு. ந. ஆ. சிதம்பர முதலியாரவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது. ஸ்துதிமுடித்து திரு. சி. ப. ஆறுமுக முதலியாரவர்கள் கல்வி விஷயமாகவும் செங்குந்தர் கல்விநிதிச் சீட்டை ஆதரிக்க வேண்டுமென்றும் இனிமையாகப் பேசிமுடித்தார்கள். வாழ்த்துப்பாடி சபை கலையப்பெற்றது.

**சி. ப. ஆறுமுக முதலியார்,**
காரியதரிசி,

### சிந்தாமணி செங்குந்தர் திறப்பு விழா.

திருநெல்வேலி ஜில்லா சங்கர நயினார் கோவில் தாலூகா சிந்தாமணி கிராமத்தில் சுக்கில௵ ஆவணி௴ 31௳ (15-9-29) செங்குந்த மரபினர்கள் கூடிய கூட்டத்தில் ம-ள-ள-ஸ்ரீ S. K. ராமசுவாமி முதலியார் அவர்களால் உயர் திரு. ப. நயினார் முதலியார் அவர்களை இச்சங்கத்தைத் திறந்துவைக்கும்படி பிரேரேபிக்கப்பட்டு ம-ள-ள-ஸ்ரீ T. R. மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு, உயர் திரு. பா. நயினார் முதலியார் அவர்களால் ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேஸ்வர செங்குந்தர் அபிவிருத்தி சங்கம் சிந்தாமணி என்ற திருநாமத்துடன் திறந்து வைக்கப்பட்டு எல்லோராலும் ஏகோபித்து ஒப்புக்கொள்ளப்பட்டது.

இச்சங்கத்தைத் திறந்து வைத்த உயர் திரு. பா. நயினார் முதலியார் அவர்களுக்கு புஷ்ப ஆரம் சூட்டப்பட்டு, அதன்பின் சபை இரவு 7-மணிக்குக் கலைந்தது.

**இ. வ. கோட்டியப்ப முதலியார்,**
தலைவர்.

## இராமநாதபுரம் ஜில்லா

### அருப்புக்கோட்டை செங்குந்த மகாஜன சங்கம்.

சுக்கில௵ அற்பிசி௴ 16௳ வெள்ளிக்கிழமை இரவு 7-மணிக்கு சங்கஹாலில் சங்கத்தலைவர் திரு. ச. ஆ. தி. வெயிலுகந்த முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் ஓர் பொதுக்கூட்டம் கூடியது. திரு. வீரபத்திர முதலியாரவர்கள் கடவுள் வணக்கம் பாடினார்கள். பின் தலைவர் முன்னுரையானதும் தலைச்சங்கத்திலிருந்து கிளைச்சங்கங்களுக்காக நம் மித்திரனில் பிரசுரித்திருந்த சட்டதிட்டங்களோடு இவ்விடத்திற்குத் தேவையான சில விதிகளையும் சேர்த்து நிர்வாக கமிட்டியாரால் தயார் செய்யப்பட்ட சட்டதிட்டத்தை உதவிக்காரியதரிசி திரு. ஆ. ஆத்தி முதலியாரவர்களால் வாசிக்கப்பட்டு அம்பலம் திரு. ஆறுமுக முதலியார், திரு. ரும. வெள். சுப்பைய முதலியார் ஆகியவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது. தலைவர் முடிவுரை கூறியதும் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறி தாம்பூலம் வழங்கப்பட்டு சுமார் 9-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது எனக் காரியதரிசி எழுதுகிறார்.

## செங்கற்பட்டு ஜில்லா

### வடதிருநாகேஸ்வரம் செங்குந்தர் சங்கம்.

1. வடதிருநாகேஸ்வர செங்குந்தவாலிபர் சங்கத்தில் சேர்ந்து பஞ்சாயத்து மெம்பராக இருந்த திருவாளர் அருணாசல முதலியார் அவர்கள் சுக்கில௵ புரட்டாசி௴ திடீரென மார்பு அடைத்து சிவலோக பதவி அடைந்தார். இதனால் ஷை சங்க இராப் பாடசாலை மூடப்பட்டது. எல்லோரும் துக்கம் கொண்டாடினார்கள்.

2. ஷை சங்கத்தில் சுக்கில௵ புரட்டாசி௴ 28௳ யன்று ஷை சங்க மாதாந்த கூட்டம் நடந்தது. அச்சமயம் திருவாளர் பட்டணம் கந்தசாமி முதலியார் தலைமை வகித்தார். திரு. தொ. மு. முருகேச முதலியார் அருணாசல முதலியார் உலகம் நீத்தமைக்கு வருந்துவதாகக் குறிப்பிட்டார். திரு. மாசிலாமணி முதலியார் கல்வியைப்பற்றி சிறிதுநேரம் பேசிமுடித்தார். தலைவர் முடிவுரை ஆனவுடன் எல்லோருக்கும் டீபார்ட்டி மிக விசேஷமாக நடந்தது.

**தொ. மு. முருகேச முதலியார்,**
சங்கக் காரியதரிசி

# வர்த்தமானப் பகுதி

## சென்னையின் புதிய கவர்னர்.

சென்னையின் புதிய கவர்னரான சர் ஜார்ஜ் ஸ்டான்லி 10-11-29 காலை பம்பாயிலிருந்து சென்னைக்குப் புறப்பட தற்காலிகமான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

* * * *

நிகழும் சுக்கில௵ ஆவணி௴ 24௳ ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ காஞ்சிபுரம் கற்பக வள்ளலாதீனம் ஸ்ரீலஸ்ரீ சட்டநாத தேசிகர் கனிஷ்ட குமாரர் **ஸ்ரீ இராமலிங்க தேசிகர்** அவர்களுக்கு ஷை ஆதீனத்தைச் சார்ந்த காஞ்சிபுரம், ஐயங்கார்குளம், திருவோத்தூர், சோளங்கிபுரம், குடியேத்தம், புவனகிரி, சேலம், சீர்காழி முதலிய பல இடங்களிலிருந்தும் வந்துள்ள சிஷ்யர்களுடைய ஆதரவினால் காஞ்சிபுரம் பெரியவழூர் நாயகராதீனத்த குரு ஸ்வாமிகள் ஸ்ரீலஸ்ரீ பு. மா. சிதம்பர தேசிகர் அவர்களால் ஆசாரிய பட்டாபிஷேகமும் புரட்டாசி௴ 22௳ அஸ்தாபிஷேகமும் காஞ்சிபுரம் கச்சபேசுவரர் மாடவீதியில் சிறப்பாக நடத்தப்பட்டன.

* * *

## ஹைகோர்ட்டு விடுமுறை.

கிருஸ்துமஸ் விடுமுறையை முன்னிட்டு சென்னை ஹைகோர்ட்டு வரும் டிசம்பர்௴ 23-ந்தேதியிலிருந்து ஜனவரி௴ 3-ந்தேதி வரை மூடப்பட்டிருக்கும்.

* * * *

## கார்ப்பொரேஷன் தலைவர்.

அடுத்த மாதம் நடைபெறப்போகும் சென்னை நகரசபைத் தலைவர் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியினர் கட்டுப்பாடாக ஸ்ரீமான் எ. ராமசாமி முதலியாரையே ஆதரிப்பதாகத் தீர்மானித்திருக்கின்றனர்.

* * *

## ஓர் பெருங்கொடை,

இலட்சுமண புரியிலுள்ள முன்ஷி ஈசுவர தயாளர் என்ற ஒரு வக்கீல் இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் பெறுமான பூமியை ஹரி கோவிந்த தயாள் ஹாஸ்டல் சொசைடிக்கு நன்கொடையாக அளித்திருக்கிறார்.

இத்தகைய கொடைவள்ளல்களையே நமது சமூகமும் ஆவலோடு எதிர்பார்த்து நிற்கிறது. ஏழைச் செங்குந்த மாணவர் விடுதிச்சாலை அமைத்தற்குப் பெருங்கொடை வழங்குவோரின் பெயரும் புகழும் செங்குந்த சமூகம் உள்ள வரையிலும் உலக மக்களிடையே உலவி வருமென்பது நிச்சயம். செங்குந்த மாணவர் விடுதி அமைப்பதற்குப் பெரும்பொருள் வழங்கவேண்டுமென்ற எண்ணம் பலரது உள்ளத்தில் பழுத்து உதிருந்தருவாயிலிருக்கிறதென்பது உடனே விடுதியமைக்க தலைச்சங்கத்தார் தீவிர முயற்சி கொள்ள வேண்டுமென்று ஆங்காங்கிருந்து வரும் கடிதங்களால் நன்கு விளங்குகின்றது. ஏழை பங்காளனும் இறைவன் திருவருள் விரைவில் கூட்டுவிப்பானாக.

ப.ர்.

* * * *

ஆஸ்திரேலியாவில் உற்பத்தியாகும் ஆப்பிள் பழம் தேங்காய் பருமனிருக்கிறதாம்.

* * * *

பொன்னிறமுள்ள காகம் ஒன்று சிகாகோ மிருகக் காட்சிச் சாலையில் வளர்க்கப்படுகிறதாம். இதற்குப் பழவகைகளே ஆகாரம்.

* * * *

மோட்டார் வண்டிகளின் முன் யாராவது அகப்பட்டுக்கொண்டால் அவரை அப்புறப்படுத்திவிட்டு உடனே 'பிரேக்' போட்டு வண்டியை நிறுத்த ஒரு கருவி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

* * * *

## ஹார்டாக் கமிட்டி அறிக்கை.

பிரிட்டிஷ் இந்தியாவில் ஏற்பட்டுள்ள கல்வி அபிவிருத்தியை ஆராய்ந்து கூற சைமன் கமிஷனால் நியமிக்கப்பட்ட ஹார்டாக் கமிட்டியின் அறிக்கை வெளியாகிவிட்டது. இவ்வறிக்கை பொதுவில் போற்றத்தக்கதாக இருக்கிறது. அறிக்கையில் குறிப்பிட்டுள்ள முக்கிய விஷயம்.

ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் படிக்க வருகின்றவர்களின் தொகை அதிகரித்திருப்பதைக் கண்டு திருப்திப்படுகின்றோம். இதிலிருந்து பொது ஜனங்களுக்குக் கல்வியிலிருந்த அசிரத்தை நீங்கி வருகிறதென்று தெரிகிறது. இந்திய ஸ்திரீகள் ராஜீய விஷயங்களிலும், சமூக விஷயங்களிலும் கண் விழித்து உணர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்றுந் தெரிகிறது. அவர்கள் தங்களுக்குக் கல்வியும் ஆசார சீர்திருத்தமும் வேண்டுமெனத் திட்டமாகக் கோரி யிருக்கின்றனர்.

ஜனங்களை எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாயும் தங்களுடைய வாக்குரிமையைப் புத்திசாலித் தனமாக உபயோகிக்கும் திறமையுடையவர்களாகவும் செய்யக்கூடியதாக இருக்கும்படி ஆரம்பக் கல்வி முறை அமைக்கப்படவேண்டும். ஓர் உபாத்தியாயரையுடைய பள்ளிக்கூடங்களை நாங்கள் அடியோடு



கண்டிக்கின்றோம். இதுவே கல்வித் துறையில் வீண் பணச்செலவு ஏற்படுவதற்கும் முன்னேற்றமில்லாமல் இருந்து வருவதற்கும் முக்கிய காரணமாகும்.

கல்வித் திட்டம் எதுவும் இறுதியில் வெற்றியடைவதற்கு கட்டாய ஆரம்பக் கல்வி அத்தியாவசியமாகும்.

சர்வ கலாசாலையானது மாணவர்களைப் பரீட்சையில் தேறும்படி செய்வதற்காகவே இருக்கிறதென்று பலர் நினைக்கின்றனர். மாணவர்களை விசால புத்தியும், சகிப்புத் தன்மையும், தன்னைத் தானே நம்பியிருக்கும் சுபாவமும் வாய்ந்த பிரஜைகளாகும்படி பழக்குவது சர்வ கலாசாலையின் முக்கிய லக்ஷியங்களுள் ஒன்றாக இருக்கவேண்டுமெனக் கமிட்டியார் விரும்புகின்றனர்.

கல்வி என்பது ஒரு பாலாருடைய பாத்தியதை ஆகாது. இந்தியக் கல்வித் துறையில் முன்னேற்றம் மேற்படும்படிச் செய்வதற்காகக் கல்விப் பெருக்கிற்கான எல்லாத் திட்டங்களிலும் முதலில் பெண் கல்விக் கோரிக்கைகளுக்கு முன் பாத்தியம் அளிக்க வேண்டுமென கமிட்டியார் அபிப்பிராயப் படுகின்றனர்.

கல்வியைப் போதிக்கும் பொறுப்பு பெரிதும் அரசாங்கத்தாருடையதேயாகும். இதனை அடியோடு ஸ்தல அதிகாரிகளுடைய இஷ்டத்திற்கு விட்டுவிடக் கூடாது.

# மதிப்புரை

## திருக்குறள்.

காஞ்சிபுரம் தமிழ்நூற் பதிப்புக்கழகத்தாரால் வெளியிடப்பெற்ற பொழிப்புரையுடன் கூடிய திருக்குறட் புத்தகம் ஒன்று எமது பார்வைக்கு வரப்பெற்றோம். காலதேச வர்த்தமானங்களால் பாதிக்கப்படாமல் எங்கும் எக்காலத்தும் போற்றப்படும் திருக்குறள் இந்தியாவில்—தமிழ்நாட்டில் பிறந்த—தமிழர் வள்ளுவரால் இயற்றப்பெற்றதென்பது அனைவரும் கண்ட உண்மை. இந்நூல் தோன்றி மூவாயிரம் யாண்டுகளாயினவென்பது ஆராய்ச்சியாளர்கண்ட முடிவு. இம்மூவாயிரம் யாண்டுகளுக்குள் இந்நூலுக்கு உரைகண்டார் பலர் அவற்றுள் பன்னிருவர் உரை சிறப்பாய் கொள்ளப்பெற்றனவெனினும் இருவர்உரைகளே அச்சிடப்பட்டு உலவி வருகின்றன. அவ்விருவர் தாம் பரிமேலழகரும் மணக்குடவருமாவர்.

மணக்குடவர் காலத்தால் முற்பட்டவர். எனவே, அவர் உரை சுருங்கியும் தமிழர் நாகரீகம் தழுவியுமுள்ளது. பரிமேலழகர் பிற்பட்டவர். மனுஸ்மிருதியே அரச சட்டமாகக் கொள்ளப்பட்ட காலத்தவர். அன்றியும் ஆரியர்; கோயில் அர்ச்சகருமாவர். எனவே மனுஸ்மிருதிக்கு மாறுபடாத உரைகாண முயன்று வள்ளுவர் கருத்திற்கும் தமிழர் நாகரீகத்துக்கும் மாறுபாடாகப் பல அதிகாரங்களை மாற்றி யமைத்துச் சில சொற்களுக்கு வலிந்துபொருள் கொண்டுள்ளார். சொற்சுவை பொருட்சுவை யற்ற கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை ஆகிய மூன்றதிகாரங்களும் வள்ளுவனார் வாக்கல்ல வென்றும் இடையில் இவரால் சேர்க்கப்பட்டன என்றும் பலர் கூறுகின்றனர்.

சொல்லழகும், அணியமைப்பும், இலக்கண முடிபும், உரை நயமும் கருதியே பரிமேலழகியாரது உரை போற்றப்படுகிறதெனினும், உரைக்குற்றங்கள் பல மலிந்து கிடப்பதை திருக்குறளாராய்ச்சியே தமது வாழ்நாட் செல்வமாகக் கொண்டுள்ள பல அறிஞர்கள் ஒப்புக் கொள்கின்றனர். ஆயினும் இவர்கள் பரிமேலழகரிடம் கொண்டுள்ள அளவுகடந்த அன்பினாலும், மதிப்பாலும் அவற்றை வெளிப்படுத்தத் துணிவதில்லை. துணிந்து வெளிப்படுத்தின் "பெரியார் உரைக்குப் பிழை காண்பதோ" எனப் பலர் நாவாலும் கையாலும் சண்டைபிடுவர். நிறைந்த தமிழறிவும் ஆராய்ச்சியும் வாய்ந்து, ஆங்கிலத்தில் எம். ஏ., பட்டம்பெற்று, சுதேச பாஷா அத்யக்ஷகராய் ஓர் கல்லூரியில் உத்தியோகம் வகித்திருந்த ஓர் தமிழ்ப்புலவர் பரிமேலழகரது உரையில் ஆங்காங்கு காணப்படும் பொருத்த மின்மையைப்பற்றி தமது நண்பர்—பழுத்த தேசாபிமானி—சிறந்த தமிழறிஞராகிய வ. உ. சிதம்பரம் பிள்ளை யவர்களிடம் கூறும் போதெல்லாம் நான்கு பக்கங்களிலும் பார்த்து மனிதர் ஒருவரும் காணப்படாவிடில் மாத்திரம் அப்பொருத்த மின்மையை மெல்லிய குரலில் கூறுவாரெனின் ஏனையோர் பாட்டைச் சொல்லவும் வேண்டுமோ.

இப்பொழுதுள்ள உலகம் உண்மையை உணரவே உழைப்பதறிந்து உரைக்குற்றங்களைந்து தமிழர் நாகரீகத்திற்கேற்ப வள்ளுவனார் கருத்துக்கிசைய ஆண் பெண் உயர்குலம் தாழ்குலமாகிய வித்தியாசங் கற்பிக்காது நியாயமும் உண்மையுமான உரையினை முதன்முதல் தைரியமாக வெளியிட்ட தனிப்பெருமை காஞ்சிபுரம் தமிழ்நூற் பதிப்புக்கழகத்தார்க்கே உரியதாகும்.

புத்தகம் பாக்கட்அளவில் நல்ல காகிதத்தில் சுமார் 300 பக்கங்கொண்டதாக அச்சிடப்பட்டுள்ளது. இத்தகைய உயர் பதிப்புக்கு வைத்துள்ள விலை மிகச்சொற்பமாகிய **அணு எட்டேயாதும்**. தமிழராய்ப்பிறந்த ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டியது அவசியம்.

வேண்டுவோர் தமிழ் நூற்பதிப்புக்கழகம் காஞ்சிபுரம் என்ற விலாசத்திற்கும், செங்குந்தமித்திரன் புத்தகசாலை சென்னை என்ற விலாசத்திற்கும எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

# 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

சுக்கிலவரு கார்த்திகைமீ (1929வரு நவம்பர்மீ—டிசம்பர்) தக்ஷணாயணம், சரத்திரிது,

| ஆங்கிலத்தேதி. | தமிழ். | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | நேத்திரம். | ஜீவன். | வாக்கிய கிரந்த திதி | யோகினி. | விசேட நாட்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | 1 | சனி | சது 4-43 ○ 58-50 | பர 38-13 | சி 38-13 அ | 2 | 1 | பௌ | தெமே | பௌர்ணமி, |
| 17 | 2 | ஞா | பிர 51-55 | கி* 34-13 | சி 60 | 2 | 1 | பிர | மேற்கு | கிருத்திகை |
| 18 | 3 | திங் | துதி 44-30 | ரோ 28-45 | அ 60 | 2 | 1 | துதி | வடமே | |
| 19 | 4 | செவ் | திரி 36-58 | மி 23-0 | சி 23-0 ம | 2 | 1 | திரி | வடகிழ | |
| நவம்பர்௴ 20 | 5 | புத | சது 29-20 | தி 17-13 | சி 60 | 2 | 1 | சது | ஆகாசம் | |
| 21 | 6 | வியா | பஞ் 22-20 | பு 11-50 | அ 60 | 2 | 1 | பஞ் | பூமி | |
| 22 | 7 | வெ | சஷ் 16-0 | பூ 7-8 | ம 60 | 2 | 0 | சஷ் | கிழக்கு | |
| 23 | 8 | சனி | சப் 10-43 | ஆ 3-25 | ம 3-25 அ | 2 | ½ | சப் | வடக்கு | |
| 24 | 9 | ஞா | அஷ் 6-30 | ம 0-43 பூர 59-8 | ம 0-43 சி | 1 | ½ | அஷ் நவ | தென்கி | |
| 25 | 10 | திங் | நவ 3-30 | உ 58-53 | சி 60 | 1 | ½ | தச | தெமே | |
| 26 | 11 | செவ் | தச 1-35 | அ 59-48 | சி 60 | 1 | ½ | ஏகா | தெற்கு | |
| 27 | 12 | புத | ஏகா 1-3 | சி 60 | சி 60 | 0 | ½ | துவா | மேற்கு | |
| 28 | 13 | வியா | துவா 2-0 | சி 2-15 | சி 2-15 அ | 0 | ½ | திர | வடமே | பிரதோஷம் |
| 29 | கார்த்திகை௴ 14 | வெ | திர 3-28 | சு 5-0 | சி 60 | 0 | ½ | சது | வடகிழ | |
| 30 | 15 | சனி | ச● 6-15 | வி 9-13 | சி 60 | 0 | 0 | அமா | ஆகாசம் | அமாவாசை |
| 1 | 16 | ஞா | அமா 9-58 | அ 14-20 | ம 60 | 0 | 0 | பிர | பூமி | |
| 2 | 17 | திங் | பிர 14-45 | கே 20-33 | சி 60 | 0 | 0 | துதி | கிழக்கு | |
| 3 | 18 | செவ் | துதி 20-10 | மூ 26-55 | அ 26-55 சி | 0 | 0 | ... | வடக்கு | |
| 4 | 19 | புத | திரி 26-13 | பூ 34-8 | அ 60 | 0 | ½ | திரி | தென்கி | |
| 5 | 20 | வியா | சது 32-38 | உ 41-35 | சி 60 | 0 | ½ | சது | தெமே | |
| டிசம்பர்௴ 6 | 21 | வெ | பஞ் 39-3 | தி 49-3 | ம 49-3 சி | 1 | ½ | பஞ் | தெற்கு | |
| 7 | 22 | சனி | சஷ் 44-53 | அ 56-20 | சி 56-20 அ | 1 | ½ | சஷ் | மேற்கு | |
| 8 | 23 | ஞா | சப் 50-48 | ச 60 | சி 60 | 1 | ½ | சப் | வடமே | |
| 9 | 24 | திங் | அஷ் 53-25 | ச 1-50 | சி 1-50 ம | 1 | ½ | அஷ் | வடகிழ | |
| 10 | 25 | செவ் | நவ 55-10 | பூ 6-25 | ம 6-25 அ | 1 | ½ | நவ | ஆகாசம் | |
| 11 | 26 | புத | தச 54-55 | உ 9-8 | சி 9-8 ம | 2 | ½ | தச | பூமி | |
| 12 | 27 | வியா | ஏகா 52-40 | ரே 9-58 | சி 9-58 அ | 2 | 0 | ஏகா | கிழக்கு | |
| 13 | 28 | வெ | துவா 48-25 | அ 8-43 | அ 8-43 சி | 2 | 1 | துவா | வடக்கு | |
| 14 | 29 | சனி | திர 42-30 | ப* 6-3 | சி 6-3 அ | 2 | 1 | திர | தென்கி | கிருத்திகை, அண்ணாமலை தீபம் |


உலகத்தில் நீங்கள் உயர்பதவி யடையவேண்டாமா ?

சகலவித வசிய மர்மங்களை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா ??

இவை எப்படி அடைவது ?!? கீழே கவனித்து வாசியுங்கள்!!!

பூலோகத்தின்கண் புண்ணிய கீர்த்தியாய் விளங்க—உயர்பதவி—சுயமரியாதை—கௌரவம்—மஹத்துவம்—புகழ்ச்சி—ஆதிக்கியம்—அதிர்ஷ்டம்—ஜீவசக்தி—கார்யசித்தி—ஹிப்னடிசம்—மெஸ்மரிஸம்—முதலானவைகளை—அனுபவிக்கவேண்டி அபூர்வ ரகஸ்யங்களை சுலபமாக அறிந்து அனுஷ்டிப்பதற்கு—ஸ்வாமி ப்ரேமானந்த யோகீஸ்வரர் அவர்களினால் லோகோபகாரமாய் எழுதப்பட்ட—

## வசிகரண தந்த்ரம்

என்னும் அதியற்புத கிரந்தத்தை உடனே விலைக்குவாங்கி வாசித்து லாபம் அடையுங்கள்! இதில் கோரிய பெண்ணை மணமுடித்தல், மணமகள் மணமகனுடைய காதலை விருத்தி செய்தல், கன்னிகை வசிகரணம் மணமில்லா மனத்தை மகிழ்வு பெறச் செய்தல், ப்ரேமாபிவிர்த்தி, நிரந்தரமான நட்பைப்பெறல், மனத்திற்கு முந்தி மணப் பெண்ணின் ப்ரீதியைப் பெறல், ஸ்திரீகளிடத்தில் கௌரவம் பெறுதல், பிரிவுற்ற தம்பதிகள் கூடுதல், வேண்டுமளவு சந்ததிபெறல், கணவனின் கெட்ட நடத்தைகளைத் திருத்துதல், பெண்களின் துர்நடத்தைகளை நிறுத்துதல், தனவந்தனைத் தன் வயமாக்கிக் கொள்ளல், உருக்கமற்ற உறவினரின் உருக்கத்தைப் பெறுதல், பேய் பிசாசுகளை ஓட்டுதல், சூன்யம் திருப்புதல், பைத்தியம் போக்கடித்தல், மானவ வசியம், ஜீவஜந்துக்களின் வசியம், தனாகர்ஷணம், களாகர்ஷணம், ஜனாகர்ஷணம், மோஹனம், ஸ்தம்பனம், உச்சாடனம், வித்வேஷணம், மாரணம், சாந்தி முதலாக 100 ப்ரயோகங்கள் சிறுவர் முதல் பெரியவர் வரை அறிந்துகொள்ளும்படியான சுலபமான நடையில்—இனியமொழியில எழுதப்பட்டன.

மேற்சொன்ன விஷயங்களெல்லாம் இப்புத்தகத்தில் இல்லையென்று எவரேனும் நிரூபித்தால் அவருக்கு இப்புத்தகத்திற்கு வாங்கிக்கொண்ட விலையை யாதொரு ஆக்ஷேபணையின்றி திருப்பிக்கொடுத்து விடப்படும். இன்னும் இதைவிட திடமாக வேறு என்ன உறுதிசொல்லலாம்?

அதிர்ஷ்டம் உள்ளவர்கட்கே இப்புத்தகம் கிடைக்கும்! நாளை எழுதலாம் என்று காலம் தள்ளாமல் மறந்துவிடுமுன்—இன்றே—இப்பொழுதே—ஒரு புத்தகத்திற்கு—ஆர்டர் செய்து வாங்கிப் படித்து அதிலுள்ள இன்பத்தைக் கண்டு களிக்குங்கள் !!!

விலை ரூபாய் இரண்டே! (தபால் செலவு 0-5-0).

எம். எஸ். ராமுலு கம்பெனி,

புத்தக வியாபாரிகள், 88, மன்னார்சாமி கோயில் தெரு, ராயபுரம், மதராஸ்

M. S. RAMULU & Co., Booksellers and Publishers, Rayapuram, Madras.

எவ்வொரு குடும்பத்திற்கும் டாக்டரைப்போல உதவக்கூடியது

# மின்சார ரசம்

ஒன்றேயாகும்.

—:o:—

சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம்போன்றதென உலகப்பிரசித்தி பெற்றது.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றது.

ஒரே முறை பரீக்ஷியுங்கள். கேட்டாக் இனும்.

புட்டி 1-க்கு ரூ 2. தபால் செலவு வேறு.

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

டி.பி சுந்தரேசன், B.A., மார்த்தாண்டம் :—

"மின்சார ரசத்தால் இருமல், ஜலதோஷம், ஜுரம் உடனே நிவர்த்தியாயிற்று. பல்லின் ஈரின் மேலிருந்த வீக்கம் மிகவும் ஆச்சரியகரமாக உடனே குணமடைந்தது.

விலாசம்: மின்சார ரசம் கம்பெனி, லிமிடெட், சேலம்.

(4)



(3)F

# திருக்குறள்

## மூலமும் பொழிப்புரையும்.

பொருளீட்டும் கருத்தின்றி தமிழ் நாகரீகத்தின் புகழ்காட்டும் கருத்தோடு நல்ல கிளேஸ் காகிதத்தில் பாக்கட் அளவில் அச்சிடப்பட்டுள்ளது.

300 பக்கங்கள் உள்ள பெரிய புத்தகம்.

விலை அணா எட்டு.

இதுவரை இத்தகைய உரை வெளிவந்ததில்லை.

சமத்துவம் சகோதரத்துவம் பெண்ணுரிமை முதலிய தமிழ்நெறிபற்றி எழுதப்பட்ட புத்துரை

---

தமிழர் அனைவரும் ஓதி ஒழுகவேண்டிய முக்கியமான நூல்.

"நவசக்தி" ஆசிரியர் : திரு. வி. கலியாணசுந்தர முதலியார் முதலியோரால் நன்கு மதிக்கப் பெற்றது.

சொற்ப காப்பிகளே உள்ளன! இன்றே ஆர்டர் செய்யுங்கள்!!

ஒரு புத்தகம் வேண்டுவோர் தபால் செலவு சேர்த்து பத்தணா ஸ்டாம்ப் அனுப்ப வேண்டும். 2 அல்லது 3 புத்தகங்கட்கு வி. பி. உள்பட தபால் செலவு அணா 7. ஆறு புத்தகங்கட்கு அணா 10.

செங்குந்தமித்திரன் புத்தகசாலை பிள்ளைமுக்காரத் தெரு, ...



# ஒரு புட்டி மருந்தினால் அடைவதைவிட நாம் வாழும் வாழ்வினாலேயே தேகாரோக்கியத்தை அடையலாம்.

ஆரோக்கிய மார்க்கங்களை போதிக்கும் ஆரோக்கிய தீபிகையானது இம்மாதிரியாகவே ஆரோக்கியத்தை அடையச்செய்கிறது.

ஆனரபில் டாக்டர் யூ. ராம ராவ். யூ. கிருஷ்ண ராவ், எம். பி. பி. எஸ், இவர்களால் பிரசரிக்கப்பட்டது.

ஆரோக்கியம் வியாதி இவைகளைக் குறித்து வைத்திய நிபுணர்களால் கண்டுபிடிக்கப்
பட்ட உண்மைகளை **ஆரோக்கிய தீபிகையானது** உங்கள் வீடுகளில் நுழையச் செய்கிறது.
வெகுநாள் அனுபோக முள்ளவரும் விஸ்தாரமாய் வைத்தியம் செய்து வருபவருமாகிய, வைத்
தியத்திலும் ரண வைத்தியத்திலும் பெயர் பெற்ற ஒருவர் உங்கள் வீட்டிற்குள்வந்து, உங்களுக்
கும் உங்கள் குடும்பத்தார்க்கும் ஆவசியகமான ஆரோக்கிய விஷயங்களை, நேரில் எளிய நடை
யில் நீங்கள் தெரிந்து கொள்ளும்படி உங்களுக்குப் போதிப்பின் அது எவ்வளவு நலம் என்று
நீங்களே யோசித்துப் பாருங்கள். "ஆரோக்கிய தீபிகையானது" அதை வாசிப்போர்க்குச்
செய்யும் தொண்டு இதுதான். பிரதி மாதமும், இதில், ஆரோக்கியத்திற்கு முக்கியமான
விஷயங்கள், அதாவது, உணவு, போஷிப்பு, நோய்களைத் தடுக்கும் மார்க்கம், சிசுக்கள் பராம
ரிப்பு, அவைகளின் ஆகாரம், குழந்தைகளைப் பழக்குதல், நோயாளிக்குச் செய்யவேண்டிய
சிசுருஷை, கர்ப்பிணி நடந்து கொள்ளவேண்டிய முறைகள், ஆரோக்கியமும், அழகும்,
வியாயாமம், விளையாட்டுகள், தொத்து வியாதிகள் ஆகிய இவைகளைப்பற்றி வியாசம் எழுதப்
படுகின்றன. தாய்மார், உபாத்தியாயர், மாணுக்கன், ஆரோக்கிய பிரசாரகர்கள், குழந்தை
இவர்கள் ஒவ்வொருவருக்கும் வேண்டிய விஷயங்களை இதில் காணலாம். ஆரோக்கிய தீபி
கையை குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் உபயோகமாயுள்ள 'வீட்டு ஆரோக்கிய போதகர்'
என்னலாம். எந்த பாஷையிலும் ரூ. 1—8—0க்கு இது கிடைக்கக்கூடியது.

**இதைக் கத்தரித்து தபாலில் போடுங்கள்.**

---

ஆரோக்கிய தீபிகை மானேஜர்—தபாற்பெட்டி 166, சென்னை.

ஐயா,

நான் ஆரோக்கிய தீபிகைக்கு சந்தாதாரராகவிருக்க விரும்புகிறேன். தயவு
செய்து என்னை.............................முதற்கொண்டு ஒரு சந்தாதாரராகச் சேர்த்துக்கொள்
ளுங்கள். * இன்று ரூ. 1—8—0 மணியாடர் மூலமாய் அனுப்பியிருக்கிறேன்.......
..............................சஞ்சிகையை தயவு செய்து ரூ. 1—10—0க்கு வி. பி. மூலமாய்
அனுப்புங்கள்.

முழுப்பெயர்..............................................................

தொழில்..............................................................

விலாசம்..............................................................

கையொப்பம்.............................தேதி.............................

---

* இதில் எது வேண்டியதோ அதை நிறுத்திக்கொண்டு மற்றதை அடித்துவிடுங்கள்.

(5)

1298

எதிர்பார்த்திருந்த

# ஸ்ரீ ஆனந்த பூஷணம்

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

ஆனந்தம்! (இதை வாசித்தால் பரமானந்தம்) ஆனந்தம்!

இவ்வரிய கதா ரத்னம் சுருதி, ஸ்மிருதி, இதிஹாஸ புராணங்களின் ஆதாரவைக்கொண்டு ஆண், பெண், பாலர் அனைவரும் நன்னெறி யுணர்ந்து பேரானந்தமடைய சொற்சுவை பொருட்சுவையுடன் நெஞ்சு திடுக்கிடக்கூடிய அற்புதமும் ஆச்சரியமுமான ஆழ்ந்த ரகஸ்ய ரத்தினங்களும் இல்வாழ்க்கையின் தர்மங்களும் விளக்கப்பட்டிருக்கின்றன. இது சிருங்கார ரசமும், சோகரசமும், வீர ரசமும், கருணா ரசமும் தருவதோடு வாசிப்போர்க்கு போரவலைத்தருவதுடன் விடா நகைப்பூட்டி மனதைக் கவரத்தக்கதாக இருப்பதால் வேறுநாவல் நீங்கள் வாசித்திருந்தாலும் இதுபோன்ற கதா ரத்னத்தை இது வரையில் வாசித்திருக்கமாட்டீர்களென்று உறுதியாய்ச் சொல்லலாம்.

இந்நூலில் அடங்கியுள்ள விஷயம்.

| | | |
|---|---|---|
| 1. கற்பின் பெருமை | 5. த்ரித்திரனுக்கு சம்பத்து வந்த பெருமை | 9. ஒரு அனிபால் சமுத்திரமாய்ப் பெருகியது |
| 2. தர்மத்தின் சிறப்பு | 6. வைராக்கிய சித்தி | 10. பாரியானால் பர்த்தா மோக்ஷமடைந்தது |
| 3. தாய் தந்தையர்க்கு அடிபணியும் தர்மம் | 7. பகவானை பக்தன் எதிர்த்தது | 11. ஆத்மாவின் அதிசயம் |
| 4. பகவானுடைய பேருதவி | 8. லோபி தார்மீகனானது | 12. பகவான் தமயனாக வந்தது |

இவ்வரிய நூலின் விலை ரூபா 1—4—0.

ஒரே காலத்தில் 3 புத்தகம் வாங்கினால் ரூ. 3—8—0. தபால் சார்ஜ் வேறு.

W. லார்ட் அண்டு கம்பெனி,

(8) நெ. 32, ரூசப்ப செட்டி வீதி, குஜிலி பார்க்டவுன் போஸ்ட், சென்னை.

# ஸ்ரீலோலன்

(ஓர் இனிய துப்பறியும் நாவல்)

எளிய நடை! இனிய உரை!

மற்ற நாவல்களைப்போலின்றி நன்னீதிகளைப் புகட்டுவது.

இன்றே வாங்கிப் படியுங்கள்.

விலை ரூ. 1-4-0.

செங்குந்தமித்திரன் புத்தகசாலை,

(9)F பவழக்காரத் தெரு, சென்னை.

# கற்பகத் தைலம்

குழந்தை வியாதிகட்கு அமிர்தம் போன்றது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதது.

பாக்கிங் தபால் செலவு உள்பட ஒரு புட்டியின் விலை ரூபா 1—4—0.

3 புட்டி வாங்கினால் செலவின்றி அனுப்பப்படும். உபயோகிக்கும் முறை புட்டியின்மேல் காண்க.

முன்பணமில்லாத ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டா.

எல்லா வியாதிகட்கும் ஏற்ற மருந்துகள் கிடைக்கும்.

ப. அங்கமுத்து முதலியார்,
சிகிச்சாஞான பண்டிதர்,
கற்பக மெடிகல் ஹால், சத்தியமங்கலம்
(1) கோயம்புத்தூர்.



# மகாநாட்டு மலர்.

நமது முதல் மகாநாட்டின் நிகழ்ச்சிகள், வைபவங்கள், தலைவர்களின் பேருரைகள், தீர்மானங்கள் நிறைந்துள்ளன.

தலைவர்களின் ஆப்டோன் படங்கள் 40-க்கு மேல் பொலிந்து விளங்குகின்றன.

வழவழப்பான காகிதம். கண் கவர் அழகு.

செங்குந்தர் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டியது அவசியம்.

விலை அணா 8 தபாற் செலவு அணா 3

நமது தலைவர்களின் அழகிய போட்டோ படங்கள்

| தபாற்செலவு உள்பட விலை | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஒட்டக்கூத்தர் ... | 1 | 8 | 0 |
| தலைச்சங்க நிர்வாகசபை அங்கத்தினர் (22 பேர் கொண்ட படம்) ... | 2 | 8 | 0 |
| ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., (செங்குந்த மித்திரன் ஆசிரியர்) ... | 1 | 8 | 0 |
| தலைச்சங்கப் பிரசாரகர்கள் .... | 1 | 8 | 0 |

செங்குந்தமித்திரன்

2-ம் ஆண்டு பைண்டு புத்தகம்

அநேகர் விரும்பிக் கேட்டதனால் செலவழிந்துவிட்ட முதல் 3 மாதப் பத்திரிகைகளையும் மீண்டும் அச்சிட்டு 12 சஞ்சிகைகளையும் சேர்த்து பைண்டு செய்துள்ளோம்.

இன்னும் சொற்ப காபிகளே உள்ளன.

தபாற்செலவு உள்பட விலை ரூ. 2.

மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
பவழக்காரத் தெரு, சென்னை.

எங்கள் மருந்துச்சாலை கடந்த 25 வருட காலமாய் உள்ளூரிலும், வெளியூரிலும் அநேக வைத்தியர்களுக்கும் நோயாளிகளுக்கும் மருந்துகள் செய்து அனுப்பி அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்று வருகிறது. அநேக நண்பர்கள் இவ்வளவு சிறந்த மருந்துகள் வெளியூர்களிலுள்ள நண்பர்களுக்குப் பயனளிக்காமல் போய்விடுகிறதென்பதை உணர்ந்து வற்புறுத்திச் சொன்னதின்மேல் விளம்பரம் செய்ய முன்வந்துள்ளோம். நண்பர்கள் பலரும் எங்களுடைய மருந்துகளை யாதொரு பயமுமில்லாமல் வாங்கியுண்டு நலனமைந்து எங்களை மேன்மேலும் ஊக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

முதலாவதாக நாட்டுமக்கள் ஒவ்வொருவரும் திடகாத்திரமுள்ளவர்களாக விளங்க வேண்டுவது அவசியம். தற்கால இளைஞர்கள் பாலிய சேஷ்டையாலும் மிதமிஞ்சிய போகத்தாலும் உடல் நலன் கெட்டுச் செல்லரித்த மூங்கில்போல் மேலே மனிதராகவும் உள்ளே ஆண்மை இழந்த நிர்ப்பாக்கிய நிலைமையிலும் இருக்கிறார்கள்; இவர்களுக்கும், ஜுரம் முதலியவைகளால் பீடிக்கப்பட்டு ரத்தம் கெட்டுப் பலம் குன்றி இருப்பவர்களுக்கும், சாதாரணமாய் பலமுள்ளவர்களாய், வீரியமுள்ளவர்களாய் இருக்க விரும்பும் ஒவ்வொரு ஆண் பெண் இருபாலர்க்கும், உலகவாழ்க்கையின் இன்பத்துக்கும், ஆண் சிங்கம் போன்ற பலம் தருவதற்கும்,

## நாராயணசஞ்சீவி லேகியமும் அயத்தங்கச்செந்தூரமும்

மிக்க சிறந்தவை என்று உறுதி கூறுகிறோம்.

**இந்த லேகியம் செந்தூரம் சித்த வைத்திய முறைப்படி மிக ஜாக்கிரதையாயும் முறை தவறாமலும் செய்து முடிக்கப்பட்டது. வைத்திய முறைப்படி இதைக்காட்டிலும் சிறந்த பலம் தரும் மருந்து வேறொன்றில்லை.**

### இந்த லேகிய செந்தூரங்களால் தீரும் முக்கிய வியாதிகள்.

தற்காலம் மானிட வர்க்கத்தை நிழல்போல் தொடர்ந்து அரிக்கும் 20 வகை மேகரோகங்கள், குன்மம், பித்த பாண்டு, சூலை, ஊடுவாய்வு, கை கால் முடக்கு, நெஞ்சு தொண்டை எரிச்சல், பித்த ஏப்பம், அஜீர்ணம், வயிற்றுப்பிசம், பசியின்மை, சோம்பல், நித்திரை வாராமை, நீர் இறங்கும்போது பொறுக்க முடியாத பாதையைத் தரும் தந்திமேகம், தாது நஷ்டம், தேக உளைச்சல், கண்களில் நீர் வடிதல் முதலிய வியாதிகள் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். பயங்கரமான மேகவியாதிகளைப் போக்கி தேகத்தைப் புஷ்டியாக்கிச் சப்த நரம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியை உண்டாக்கும்.

மனக் கவலையினாலாவது துர் அப்பியாசத்தாலாவது அடிக்கடி வரும் நோயினாலாவது மற்றெந்தக் காரணத்தினாலாவது பலம் கெட்டவர்கள் நமது லேகிய செந்தூரங்களைச் சாப்பிடுவார்களானால் அழகு தேகாரோக்கியம், தேக வலிவு முதலியவற்றைக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யும். நோயுள்ளவர்கள் தான் இவற்றைச் சாப்பிடவேண்டுமென்பதில்லை. **நோயில்லாதவர்களும் இவற்றை ஆரோக்கியத்திற்காகச் சாப்பிடலாம். இதற்கு பத்தியமே கிடையாது.** காலதேச வர்த்தமானமில்லாமல் எல்லா காலங்களிலும் சாப்பிடலாம். பசி அதிகமாய் எடுக்குமாகையால் ஜீரணிக்கக்கூடியதும் கொழுமையுள்ளதுமான ஆகாரங்களை வேளை தவறாமல் சாப்பிடவேண்டும். இச்சிறந்த லேகிய செந்தூரங்களை டைரெக்ஷனில் சொல்லியபடி 48 நாள் சாப்பிடுவார்களானால் அவை தேகத்தில் ஊறி மேகங்களை நெருப்புப்பொறி பட்ட பஞ்சைப் போலியென நாசம் செய்து, புதிய ரத்தத்தை உற்பத்தி செய்து தேகத்தை இளைக்காமலிருக்கச் செய்யும். இவற்றை ஒற்றுமையாய் மனைவியும், கணவனும் ஏககாலத்தில் சாப்பிட்டால் அவர்களுக்கு உற்பத்தியாகும் குழந்தைகள் மிக அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும்.

24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் ஒரு புட்டி செந்தூரமும் ரூ. 2-4-0. தபால்செலவு அணா 6. 48-நாள் மருந்து தபால் சார்ஜ் உள்பட ரூ. 4-12-0.

பினாங்கு, சிங்கப்பூர், செட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு 24-நாள் மருந்து தபால்சார்ஜ் உள்பட ரூ.3-8-0. 48-நாள் மருந்து ரூ.6-4-0. வெளிநாட்டு அன்பர்கள் பூராவும் முன்பணமாகவே அனுப்பவேண்டும்.

**நாராயண சஞ்சீவித்தைலம்:—** பச்சிலை மூலிகைகளாலும் பசும்பால் முதலிய பரிசுத்த வஸ்துக்களாலும் மிகச் சுத்தமாக செய்யப்பட்டது. தேகவரட்சியைப் போக்கி மூளையைக் குளிரச்செய்து புத்தி கூர்மையையும் ஆரோக்கியத்தையும் உண்டாக்கும். கடந்த 25 வருடகாலமாய் இதை ஆயிரக்கணக்கானவர்கள் வாடிக்கையாய் வாங்கி ஸ்நானம் செய்து தேகாரோக்கியத்தோடு வாழ்ந்துவருகிறார்கள்.

5 பல டின் 1-க்கு விலை ரூ. 1-0-0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

**நாராயண திராட்சைப்பழ லேகியம்:—** மலச்சிக்கலே எல்லா வியாதிகளுக்கும் காரணம். இதனால் நமதுநாட்டில் கோடிக்கணக்கானவர்கள் அவஸ்தைப்பட்டு அதைச் சரியாய் கவனிக்காமையினால் அநேகவித நோய்களுக்கு ஆளாவதை நாம் நேரில் பார்த்திருக்கிறோம். அதற்கு இது திவ்வியமான மருந்து. சாப்பிடுவதற்கு மிக ருசியாய் இருக்கும். இரவில் படுத்துக்கொள்ளும்போது ஒரு கொச்சக்காய் பிரமாணம் சாப்பிட்டு படுத்துக்கொண்டால் காலையில் மலம் தாராளமாய்ப் போய்விடும். யாதொரு கெடுதலுமில்லை. தேகம் ஆரோக்கியமாய் இருக்கும். டப்பி 1-க்கு விலை ரூ. 1-0-0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

ஒரு ரூபாய்க்குக் குறைந்த தொகைக்கு V. P. அனுப்பமுடியாது.

(7) **ஸ்ரீநாராயண மெடிகல் ஹால், காஞ்சீபுரம்.**

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the **South Indian Sengunthа Mahajana Sangam Madras**, at 31 Armenian Street, Madras, and is printed by **T. C. Nataraja Mudaliar** at the **Cambridge Press** 2/19-A. Armenian Street, Madras.